Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு +XIV

விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

திருமண வைபவங்களுக்கு
ஏற்ற உயர்தரப் பட்டுப்புடவைகள்



★ கோலம் ★ அபூர்பா
★ பெனாரஸ்
இதர ரக பட்டு ஜவுளிகளை
நம்பிக்கையுடன்
பெற்றுக்கொள்ள
சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
41, பெரியகடை வீதி.
யாழ்ப்பாணம்.
T.P - 222 2063

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 தை – 01 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஜ் 03 (14.01.2005) வெள்ளிக்கிழமை இதழ்: 106

# நலன்புரி நிலையங்களில் இராணுவம்; கண்காணிப்பு குழுத் தலைவர் விசனம்!

## ஜனாதிபதியுடன் பேசப்போவதாக ஜெனரல் புறூவ்கொவ்டே தெரிவிப்பு!

(திருகோணமலை)

உலகின் எந்தவொரு நாட்டிலும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்புரி நிலையங்களை இராணுவம் மேற்பார்வை செய்துவரும் நடைமுறை கிடையாது. இலங்கையிலுள்ள இந்த நடைமுறை பாதிக்கப்பட்ட மக்களின் மனிதாபிமான செயற்பாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். இது குறித்து ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சு நடத்தவிருப்பதாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன் புறூவ்ஹொவ்டே தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட புலிகளின் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணத்தை சந்தித்த பின் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (12 ஆம் பக்கம் பார்க்க)



## நிதி நிறுவனப் பிரதிநிதிகள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!



(கிளிநொச்சி)

சர்வதேச நிதி நிறுவனங்களின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிகள் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்து, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் மற்றும் நரேஷ் துரைசாமி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் அலெர் ஸான் புரோ பியோ, ஆசிய அபிவிருத்தி வங்கியைச் சேர்ந்த பிளயன் சிமித், சர்வதேச நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி ஜெர்மி காட்டர், ஜப்பானிய சர்வதேச வங்கிக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் ரொமயோகி கிமுரா, மற்றும் உஷிமா தகும், ஜெய்காவிர் மிட்தயோ கவாகுச்சி, ஆகியோர் கொண்ட குழுவே இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தற்போதைய நிலைமைகள் குறித்தும், இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து வங்கிப் பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறினார்.

### சுனாமி பாதிப்புக்களை பார்வையிட

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் இலங்கை வருகிறார்!

(கொழும்பு)

இலங்கையில் கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு, திட்டங்களைத் தயாரிக்கும் வகையில் ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் ரடோ சீனோ இரண்டுநாள் விஜயமாக நாளை கொழும்பு வரவுள்ளார்.

இவர் கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட திருமலை மற்றும் மூதூர் பகுதிகளுக்குச் செல்வதுடன், அங்குள்ள நலன்புரி நிலையங்களுக்கும் சென்று நிலைமைகளைப் பார்வையிடவுள்ளார்.

இதன்பின்னர், இவர் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கி நேற்றுத் தெரிவித்தது.

வடக்கு, கிழக்குப் பகுதியின் கரையோரப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில், கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட இந்த மக்கள், மீளத் தமது தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் வகையிலும் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவிகளை வழங்கவுள்ளது.

இலங்கையின் தற்போதைய அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன், (12 ஆம் பக்கம் பார்க்க)

## சம்பூரிலிருந்து திரும்பிய எழிலன் தடுத்து வைப்பு!

(திருகோணமலை)

நேற்றுமாலை திருகோணமலை மாவட்டம், சம்பூர் பகுதியில் இடம்பெற்ற இலங்கைப்போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவருடனான சந்திப்பின் பின்னர் அங்கிருந்து திரும்பியவேளை விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் கட்டைபறிச்சான் இராணுவமுகாமில் 40 நிமிடங்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டார்.

கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன் புறூவ்ஹொவ்டே நேற்றுக்காலை சம்பூரில் வைத்து புலிகளின் மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணத்தையும், திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலனையும் சந்தித்து உரையாடிய போது - அண்மைக்காலமாக திருமலை மாவட்டத்தில் இராணுவத்தினர் தமது போராளிகளுடன் விசமத்தனமான, சினமூட்டும் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டுவருவது குறித்துத் தமது அதிருப்தியைத் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு விளக்கமாகத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

பகல் 1.30 மணிக்கு சம்பூரிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தவேளை எழிலன் பயணம்செய்த வாகனம் இராணுவமுகாமில் நிறுத்தப்பட்டு அங்கு சுமார் 40 நிமிடநேரம் தடுத்துவைக்கப்பட்டார்.

இதன்போது தான் யார் எங்கிருந்து வருகிறேன் என்ற விபரங்களை காவலரணில் இருந்த சிப்பாய்க்குக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கு கனடியப் பிரதமர் செல்லமாட்டார்!

(ஒட்டாவா)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொள்ளும் கனடியப் பிரதமர் போல் மார்ட்டின், இலங்கையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஏற்பட்ட அழிவுகளைப் பார்வையிடச் செல்லமாட்டாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

கனடியப் பிரதமர் அலுவலகம் இந்த விஜயம் குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையில் -

எதிர்வரும் 17 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யும் கனடியப் பிரதமர் நாட்டின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வங்கக்கடலில் தாழமுக்கம்!

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் தோன்றியுள்ள தாழமுக்கத்தினால் - இலங்கை மக்களை விழிப்புடன் இருக்குமாறு வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவின் தென்கிழக்குத் திசையில் இலங்கையின் கிழக்குக் கரையிலிருந்து 650 கிலோமீற்றர் தொலைவில் இந்தத் தாழமுக்கம் நேற்றுக்காலை 11 மணியளவில் நிலைகொண்டிருந்தது.

இதனால் கிழக்கு மற்றும் தெற்கு கரையோரப் பகுதிகளில் கடும்மழை, கடற்கொந்தளிப்பு போன்றவை இருக்கக்கூடும் (12 ஆம் பக்கம் பார்க்க)




எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

### விடுதலை பெற்ற இனமாக

# வாழ்வோம் என்ற நம்பிக்கையுடன் தைத்திருநாளைக் கொண்டாடுவோம்

## மாவை.எம்.பி. பொங்கல் செய்தி

எந்த அழிவிலிருந்தும் மீண்டு - விடுதலைபெற்ற இனமாக வாழ்வோம் என்ற நம்பிக்கையுடன், அமைதியுடன் தைத்திருநாளைக் கொண்டாடுவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா வெளியிட்டிருக்கும் பொங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் செய்தியில் மேலும் - 'தை பிறந்தால் வழிபிறக்கும்' எனும் நம்பிக்கை ஆண்டாண்டு காலமாகத் தமிழ் மக்களிடம் நிலவி வருகின்றது.

காரிருள் கவிழ்ந்து, மழை பொழிந்து, நிலம் செழித்து, வளம் பெருகி மக்கள் வாழ்க்கையில் செல்வமும், சீரும், சிறப்பும் தைத் திங்களில் பெற்று, இயற்கையோடு இயங்கி, உழைத்து வாழ்ந்திடும் வாழ்வியலையே பொங்கல் பண்டிகை வெளிப்படுத்தி நிற்கின்றது.

பகலவனுக்கும், நீர், நிலத்துக்கும், மாட்டுச் செல்வத்துக்கும் நன்றி தெரிவிக்கும் விழாவாகவும், வேளாண்மைக்கும் உழைப்பிற்கும் மதிப்பளித்துப் போற்றிவாழும் பண்பாட்டு விழாவாகவும் பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டு வருவது தமிழர் சமுதாயத்தின் உயர் நாகரிகத்தை உலகிற்கு விளக்கி நிற்கின்றது.

கடந்த 20 ஆண்டுகளில் நம் தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்ப துயரங்களையும் இழப்புக்களையும் தாங்கி நின்று தை பிறந்தால் வழி பிறக்காதா எனும் ஆதங்கத்துடன் பொங்கற் பண்டிகையை எதிர்நோக்கியிருந்தனர்.

ஆனால் நத்தார் பண்டிகை ஆரம்பித்த அடுத்தநாள் (26.12) இலங்கையுள்ளிட்ட பல நாடுகளில் இயற்கை அனர்த்தம், சுனாமி கடற் பேரலையால் ஏற்பட்ட அழிவுகளினால் நத்தார் பண்டிகையும் சோபை இழந்தது.

கடல் பொங்கி எழுந்ததால் நம் தமிழ் சகோதரர்கள் குடும்பம் குடும்பமாய் கடலுக்குப் பலியாகி, இருந்ததனைத்தையும் இழந்து, கண்ணீரும் கம்பலையுமாய் மண்ணில் வீழ்ந்துகிடக்கின்றார். இந்த வேளையில் தைப்பொங்கல் பண்டிகையும் வழமைபோல் அல்லாமல் கண்ணீர்க கடலில், வேதனையால் நம் இதயமெல்லாம் பொங்கி நிற்கின்றது.

எம் வாழ்நாளில் இந்தத் துன்ப துயரங்கள் அன்றாட வாழ்க்கையாகிவிட்டது. இருப்பினும் எவ்வழியிலிருந்தும் எழுந்து வாழ்வோம், விடுதலைபெற்ற இனமாய் வாழ்வோம் எனும் நம்பிக்கையுடன் எம் தமிழ்ப் பண்பாடுகாத்து இம்முறை அமைதியாய் தைத்திருநாளைக் கொண்டாடுவோம். இதயம் பொங்கிய என் வாழ்த்துக்கள்.

# பாதிக்கப்பட்ட பொதுமக்கள் உடன் விபரங்கள் பதியவும்

## பருத்தித்துறை பிரதேச செயலர் கோரிக்கை

சுனாமி பேரனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் யாவரும் கிராம அலுவலரால் விநியோகிக்கப்படும் படிவத்தைப் பெற்று அதில் கேட்கப்படும் விபரங்களைப் பூரணப்படுத்தி தங்களது நிரந்தர வசிப்பிட கிராம அலுவலரிடம் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன் கையளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் அனர்த்தம் காரணமாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏற்பட்ட இழப்புத் தொடர்பான துல்லியமான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு இந்த விபரங்கள் தேவைப்படுவதால் மக்களை தாமதிக்காது இந்தப் படிவம் மூலம் தமது இழப்புக்களைக் குறிப்பிட்டு பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

நலன்புரி நிலையத்தில் வசிக்கும் மக்கள் நலன்புரி நிலையத்திற்கு பொறுப்பான கிராம அலுவலரிடமும் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தியபின் தாம் 'சுனாமி' அனர்த்தத்துக்கு முன் வசித்துவந்த நிரந்தரப் பகுதி கிராம அலுவலரிடம் கையளித்தல் வேண்டும்.

இதேவேளை பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவினுள் நிரந்தரக் குடும்பங்களில் அண்மைய கடலனர்த்தம் காரணமாக தொழில் ரீதியாக பாதிக்கப்பட்டு இடம்பெயராத பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்கள் தம்முடைய பாதிப்புக்கள் தொடர்பாக பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளுமாறும் பருத்தித்துறைப் பிரதேச செயலர் வசந்தகுமார் தெரிவித்துள்ளார். (14)


## சிறு விளம்பரம்

### புத்தகம்

இணைந்த கணிதம் - T1 (Combind maths) செயல்நூல் வெளிவந்துவிட்டது. 2007 A/L மாணவர்களுக்குரிய முதலாம் தவணைச் செயல்நூல் இது. பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். ஆசிரியர்: துரையப்பா B.sc (Maths sp), PGD (Statistics), Msc (Jaffna college Teacher) *(1021)*
















ஜனவரி 14ம் திகதி முதல்
ஜோ.எகட்டரின் ஜெசித்தாரா
யாழ்.நகர் மத்தியில் ஊடுருவல்

என்ன? அங்கலாய்க்கிறீர்கள்!
உண்மை....

கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள உங்கள் அபிமான

## அன்னை நாகா பூட்சிற்றியில்

ஜெசித்தாராவின் கோழிப் புரியாணி மற்றும் காவிச் செல்லும் உணவுப் பொதிகளை பிற்பகல் 12.00 மணிமுதல் 3.00 மணிவரை அவர்களது விசேட கருமபீடத்தில் பெற்றுக்கொள்ளலாம். முற்பதிவுகள் ஏற்கப்படும். குறிப்பிட்ட உணவுப் பொதிகள் ஆகையால் முற்பதிவுகள் செய்து ஏமாற்றத்தைத் தவிர்க்கவும்.

படைக்குப் பிந்தினாலும் பந்திக்கு முந்துங்கள்

உங்கள் உணவில் நாங்கள் அக்கறை கொண்டுள்ளோம்

விளம்பரத்திற்கு
உயிரூட்டியவர்கள்

**Thirumurugan Com Net**
**Fedex Express**

துரித உள்நாட்டு வெளிநாட்டு கடிதம் பொதிகள் சேவைகளுக்கு

*Oppsit (All Ceylon Distributors)*
*259, K.K.S. Road,*
*Jaffna.*

பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

*(C/3740)*


## துயர் பகிர்வோம்



### திருமதி கோகிலம் சிவஞானசுந்தரம்

**(மறைவு: 13.01.2005)**

மூன்று தசாப்த காலத்திற்கும் மேலாக
"செய்தொழில் தெய்வம்
சிரிப்பே சீவியம்"
என்ற இலட்சிய நோக்கை இலக்காகக் கொண்டு
தமிழ் மக்களை 'சிரிக்கவும் சிந்திக்கவும்' வைத்த
'சிரித்திரன்' சுந்தரின் - அன்பு மனைவியும்
சிரித்திரனின் சாதனைகளுக்கு
ஆதார சுருதியாக இயங்கியவருமான
திருமதி கோகிலம் சிவஞானசுந்தரம் அவர்களின்
மறைவுச் செய்தியறிந்து
ஆழ்ந்த துயரம் அடைந்துள்ளோம்.
அவரது ஈடிணையற்ற இழப்பால் துயருற்றிருக்கும்
அவரின் பிள்ளைகளுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும்
ஏனைய உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன்
சிரித்திரன் அம்மாவின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்....

(இ) - சிரித்திரன் குடும்பத்தினர்


# UNIT

போட்டியாளர்களுக்குப் பொறாமை
வாடிக்கையாளர்களுக்கு குதூகலம்

**UNI MULTIMED STA Internet Ready**

Intel 2.4 Ghz
Run @ 533 MHz FSB feature Ungradable Possible
P4 533 MHz FSB Motherboard
5.1/6.1 channel sound blaster
100 Ethernet, 6 USB 2.0 Ports
2 Serial Ports, 1 Parallel Port
1.44 FDD
128 MB DDR-RAM
40 GB Hard Disk
52 x CDROM
ATX Tower front USB
Enhanced Keyboard
Enhanced scroll Mouse
Multimedia speaker
Data/Fax/Voice Modem
**15" World No. 1 Dell Color Monitor.**

**Rs 49,900/-**

**UNI DEV EXPERT**

IntelP4 2.4 GHz Hypher Thread processor
800 FSB HT support Mother Board
64MB 8X AGPVGA Setup
5.1/6.1 channel 3D surround sound blaster
100 MBPS fast Ethernet
8X USB 2.0 ports serial & parallel ports
1.44 Floppy Drive
256 MB DDR
80 GB 7200 RPM HDD
ATX Tower with SMPS and Front USB
16X Sony DVD ROM/52X Sony CD-RW
Enhanced Keyboard
Enhanced scroll Optical Mouse
**15" World No. 1 Dell Color Monitor.**

**Rs 63,900/-**

**UNI Prostaech Internet Ready**

Intel P4 3.0 GHz-HT processor @ FSB 800
Motherboard with 800FSB along with SATA 1.5 Gb/s
8 X AGPVGA, 5.1/6.1 channel sound blaster
100 Ethernet, 8 USB 2.0 Ports
2 Serial Ports, 1 Parallel Port
1.44 Floppy Drive
256 MB DDR
80 GB SATA Hard Disk
52 X CDROM
COMBO DVD-CDROM/CD-RW
ATX Tower with SMPS
Enhanced Keyboard, Optical Mouse
Multimedia speaker
Data/Fax/Voice Modem
**15" World No. 1 Dell Color Monitor.**

**Rs 83,900/-**

**UNI PRESTA**

Intel P4 2.4 GHz Hypher thread Processor with 1024
Press special Tuned 800 FSB mother board
256 MB DDR (333/400 Mhz)
80 GB 7200 RPM High speed UATA Hard Disk
52/56 X CDROM Drive (Sony/Asus/Samsung)
52/32/52 X Sony CD-RW
1.44 Sony Floppy Disk Drive
Multimedia Enhanced Keyboard
800 DPI High-End Optical Mouse
HP Laserjet Printer
2400 DPI Scanner
DCP 600 VA Auto shutdown UPS
**15" World No.1 Dell Color Monitor.**

**Rs 105,900/-**

**More components & Models are available.**

**Free**

சகல கொம்பியூட்டர் பாகங்களுக்கும் வைக்கக்கூடிய
**Computer Table**, Filter Glass, Dust Cover இலவசம்

மேலதிக தகவல்களுக்கு நேரில்

**347, K.K.S. Road**
**Manohara Theatre Junction,**
**Jaffna.**

**Universal Technology,**
**Station Road,**
**Chunnakam.**

## வடபகுதிக்கு அனுப்பப்பட்ட

# பெருந்தொகை உணவுப்பொருட்கள் இராணுவ, பொலிஸாரின் கைகளில்!

(கொழும்பு)

வடபகுதிக்கென அனுப்பப்பட்ட பெருந்தொகையான உணவுப்பொருட்கள் உரிய முறையில் மக்களுக்கு விநியோகிக்கப்படவில்லையெனவும், இவை இராணுவத்தால் அல்லது பொலிஸாரால் கையாடப்பட்டிக்கலாம் என கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் சந்தேகம் கிளப்பியுள்ளன.

தேசிய அனர்த்தத்துக்கான முகாமைத்துவ நிலையத்தால் வடபகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கென 300 மெற்றிக் தொன் அரிசி, 300 மெற்றிக் தொன் சீனி, 67 மெற்றிக் தொன் பருப்பு ஆகியவை அனுப்பப்பட்டதாகப் பதிவுகள் உள்ளன.

ஆனால், இந்த உணவுப் பொருட்கள் மக்களுக்குச் சென்றடைந்ததை உறுதிப்படுத்த முடியாமல் இருப்பதாக இந்த நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த உணவுப்பொருட்கள் வடக்கே கொண்டுசெல்லப்பட்டதாகப் பதிவுகள் இருக்கின்றபோதும், இவை வடக்கின் எந்தப் பகுதியையும் வந்தடையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இவை இராணுவ, பொலிஸ் முகாம்களில் முடக்கப்பட்டிருக்கலாம் அல்லது வேறு பகுதிகளைநோக்கி கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

## ஆறுமுகம் தொண்டமான் முல்லைத்தீவுக்கு விஜயம்

(முல்லைத்தீவு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பகுதியைப் பார்வையிடுவதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் மற்றும் வன்னி புனர்வாழ்வு அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆகியோர் வன்னிக்குச் சென்றனர்.

ஓமந்தைச் சோதனைச் சாவடியூடாக இவர்கள் முல்லைத்தீவுக்குச் சென்றதாக தெரிய வருகிறது.

இதேவேளை அமைச்சரொருவர் சுனாமி பாதிப்புகளை பார்வையிட வன்னிக்குச் சென்றிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

## சுனாமி பேரழிவுகள் குறித்து இத்தாலி அமைச்சர் ஆராய்வு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இத்தாலிய பிரதி வெளிவிவகார அமைச்சர் மார்க்றிற்றர் பொலிவேர் நேற்றுமுன்தினம் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்து, சுனாமி பேரனர்த்தத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கள் மற்றும் நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாகப் பேச்சு நடத்தினார்.

இலங்கையர் பலர் இத்தாலியில் பணியாற்றிவருவதால் சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையருக்கு அவர்கள் உதவி செய்வார்கள் என இந்தச் சந்திப்பில் இருவரும் நம்பிக்கை வெளியிட்டனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்கிலேயே தனது இந்த விஜயம் அமைந்ததாக இத்தாலிய பிரதி வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை அயர்லாந்திலிருந்து தனிப்பட்ட ரீதியில் திரட்டப்பட்ட 2 கோடி யூரோ நாணயங்கள், சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்டதாக அயர்லாந்து வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார். அத்துடன் அயர்லாந்து அரசு ஒரு கோடி யூரோவை வழங்கவும் இணக்கம் தெரிவித்துள்ளது.

## நாணயக் கொள்கையில் மாற்றம் இருக்காதாம்!

### நாணயச்சபை தீர்மானம்

சுனாமி பேரழிவின் பின்னர் ஏற்பட்டுள்ள நிலைமைகளைக் கருத்திற்கொண்டு நாணயக் கொள்கையை மாற்றமின்றி வைத்திருக்க நாணயச்சபை தீர்மானித்துள்ளது.

இதன்படி இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்கள், அதாவது மீள் கொள்வனவு வீதமும் மீள்கொள்வனவு நேர் மாற்று வீதமும் மாற்றமின்றி இருக்கும்.

ஏற்கனவே மத்திய வங்கியின் மீள்கொடுப்பனவு நேர்மாற்று வீதம் 9 என்ற நிலையிலும், நேர்மாற்று வீதம் 7.50 என்ற நிலையிலும் இருந்துவருகின்றன. சுனாமி பாதிப்பினால் நாட்டுக்கு ஏற்பட்ட நஷ்டங்களை புனரமைக்க மொத்தமாக 140 மில்லியன் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், இந்தப் பாதிப்புகள் முழுமையாக சுற்றுலா மற்றும் மீன்பிடித்துறைக்கு ஏற்பட்டுள்ளமையால் முழுப்பொருளாதார நடவடிக்கையின் மீதான எதிர்க்கணியத் தாக்கம் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும் என்பதாலேயே இந்த முடிவை நாணய சபை மேற்கொண்டுள்ளது. (01)

## சுனாமி அனர்த்த நிதி உதவிமூலம் பொருளாதாரத்தை உயர்த்தமுடியும்

### அமெரிக்க செனற் சபை உறுப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட இலங்கை மற்றும் ஏனைய நாடுகளுக்கான நிதி உதவி நீண்ட தூரநோக்கைக் கொண்டதாக இருக்கும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. இதன்மூலம் பாதிக்கப்பட்ட நாடுகள் தமது பொருளாதாரத்தை கட்டி எழுப்பமுடியும்.

நேற்றுமுன்தினம் அமெரிக்காவின் செனற் சபையைச் சேர்ந்த 15 உறுப்பினர்கள் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலே இவ்வாறு தெரிவித்தனர்.

அங்கு செனற் சபை உறுப்பினர் சான் பிறன் பக் கருத்து தெரிவிக்கையில் -

எமது குழு வொஷிங்டன் திரும்பிய பின்னர் நீண்டதூர நோக்கைக் கொண்ட நிதி உதவியைச்செய்ய பரிந்துரைசெய்யும். இந்தப் பரிந்துரை அமெரிக்க உயர்மட்டத்திற்கே செய்யப்படும். எம்மால் வழங்கப்படும் நிதி உதவி சகல மட்டங்களையும் சென்றடைகின்றதா என்று கண்காணிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

மேற்படி குழுவின் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில் - குறிப்பாக இலங்கையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி உட்பட சகல பகுதிகளுக்கும் சமமாக நிதி உதவி வழங்கப்படுவதை உறுதிசெய்வோம்.

இதைத்தவிர இலங்கையில் தங்கியுள்ள அமெரிக்க மரைன் படைப்பிரிவினர் முற்று முழுதாக மனிதாபிமானப் பணிகளில் ஈடுபடவுள்ளனர். குறுகிய காலத்தைக்கொண்டதாக எமது இந்தப்பயணம் அமைந்துள்ளது. இதன் காரணமாக வடக்கு - கிழக்குக்குச் செல்ல முடியவில்லை. இதற்கு மன்னிப்புக் கேட்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புலிகளின் பெண் போராளிகள் அம்பாறையில் உதவிப்பணியில்

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, திருக்கோவில் பிரதேசங்களில் சுனாமி அனர்த்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்களில் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் பல்வேறு உதவிப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர். ஒவ்வொரு முகாம்களிலும் மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார், பெண்கள், குழந்தைகளின் நலன் பேனும் பணிகளை இக்குழுக்களின் ஊடாக அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்தோடு இங்குள்ள இடம்பெயர்ந்த முகாம்களில் வாழும் மக்களுக்குரிய உணவு, அத்தியாவாசியு தேவைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் இணைந்து பூர்த்திசெய்து வருகின்றன.

மேலும் சிறுவர்களை மகிழ்ச்சியூட்டும் விளையாட்டு, நிகழ்ச்சிகளையும் பெரியோர்களை ஆறுதற்படுத்தும் நிகழ்வுக ளையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவின் ஏற்பாட்டில் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். இந்த நிகழ்வுகள் தற்போது திருக்கோவில் பிரதேசத்தில் நடைபெற்றுவருகிறது.

## சிறுவர்களை விற்கமுயன்றவரை பொலிஸார் கைதுசெய்தனர்!

12 வயதிலிருந்து 14 வயதுவரையிலான சிறுவர், சிறுமியரைப் பணம்பெற்றுக்கொண்டு விற்கமுயன்ற 60 வயதுடைய ஒருவரைக் காலி நகரின் பலப்பிட்டிய கிராமப்பகுதியில் வைத்துப் பொலிஸார் கைதுசெய்தனர். தமகுக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இவரைக கைதுசெய்ய முடிந்ததாக பொலிஸ தலைமையதிகாரி டபிள்யூ.டீ.ரி. விஜேசேன தெரிவித்தார்.

இந்த நபர் ஏற்கனவே விற்றுள்ள சிறுவர்களைத் தேடிக்கண்டுபிடிப்பதில் சிரமம் இருப்பதாகத் தெரிவித்த பொலிஸார், இத்தகைய வியாபார முயற்சிகளைக் கண்டறிவதில் மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சுனாமி அனர்த்தத்தால் தாய், தந்தை இருவரையும் இழந்த சிறுவர், சிறுமியரைக் காப்பாற்றும் பலருக்கிடையே, இவ்வாறு கடத்தி வியாபாரம் செய்யும் சில தீயவர்கள் இருப்பது குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



பட்டலந்த இராணுவக் கல்லூரியில் ஒருவருட பயிற்சியை முடித்து வெளியேறிய படையினருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றவேளை - பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை, இராணுவ உயரதிகாரி மேஜர் ஜெனரல் சீவலி வனிகசேகர - கைலாகு கொடுத்து வரவேற்பதைக் காணலாம்.

## சுனாமி மீண்டும் தாக்குமா? ஆய்வு நடத்த நடவடிக்கை!

இலங்கையில் மீண்டும் சுனாமி கடற்கொந்தளிப்பு ஏற்படுமா என்பதை ஆராயும் ஆய்வு ஒன்று நடத்தப்படவுள்ளது. ஹந்தான ஆய்வு மையம் மற்றும் பெரதெனிய பல்கலைக்கழகம் என்பன இணைந்து இதனை மேற்கொள்ளவுள்ளன.

இதனகீழ் கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி கடந்கொந்தளிப்புத் தாக்கத்துக்கு உள்ளான பகுதிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளன. எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கலாநிதி வில்பர்ட் ஹேல் பன்னல தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது சுனாமி பேரழிவின்போது எஞ்சிய எச்சங்கள் பரிசோதிக்கப்படும். இதில் சுனாமி பேரழிவின் பின்னர் எஞ்சியுள்ள மண் மற்றும் இரசாயனப் பதார்த்தங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளன.

அத்துடன் கடந்த 26 ஆம் திகதி கடல் அலை எவ்வளவு உயரத்துக்கு மேல் எழும்பியது என்பதை அறியமுடியும். இதன்மூலம் சுனாமி ஏற்கனவே எவ்வளவு காலத்துக்கு முன்னர் ஏற்பட்டது என்பதைக் கண்டுகொள்ளமுடியும். அதேநேரம் மீண்டும் இவ்வாறான அனர்த்தம் ஏற்படுமா என்பதையும் அறியமுடியும் எனவும் தாங்கள் நம்புவதாக அவர் தெரிவித்தார். (01)


## நோர்வே தூதுக்குழுவினர் இலங்கை வரவுள்ளனர்!

சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிக்கும் நோக்கில் நோர்வே தூதுககுழுவினர் அடுத்தவாரம் இலங்கைக்கு வரவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எதிர்வரும் 18 ஆம் திகதி இலங்கை வரவுள்ளதாகவும், அவரைத் தொடர்ந்து பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனும், வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனும் இலங்கை வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு வரும் இவர்கள் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். அரசாங்கத்தையும், விடுதலைப புலிகளையும் இணைத்து நாட்டை மீளக்கட்டியெழுப்பும் திட்டம் குறித்து நோர்வே தரப்பினர் ஆராயவுள்ளதாகத் தெரியவருகிறது.

# அவுஸ்ரேலிய 'ஏ' அணியை பாகிஸ்தான் வென்றது!



(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலிய 'ஏ' அணிக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பரபரப்பான வெற்றியைப் பெற்றது பாகிஸ்தான் அணி.

மெல்பேர்னில் நேற்று முன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது.

முதலில் ஆடிய பாகிஸ்தான் அணியினர் 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 279 ஓட்டங்களைக் குவித்தனர்.

ஒரு கட்டத்தில் 30 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களையே சேர்த்திருந்தது பாகிஸ்தான். அதன் பிறகு ரஸாக்கின் சிறப்பான ஆட்டத்தால் 279 ஓட்டங்களுக்கு தலை நிமிர்ந்தது அந்த அணி.

ரஸாக் 89 ஓட்டங்களைக் குவித்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். ரஸாக்கின் இந்த 89 ஓட்டங்களில் 6 சிக்ஸர்களும், 4 பவுண்டரிகளும் அடங்கும். ஹவுரிட்ஸின் ஒரே ஓவரில் 3 சிக்ஸர்களை அவர் விளாசியது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அவருக்கு அடுத்து அதிகபட்சமாக முகமட் ஹபீஸ் 61 ஓட்டங்களைச் சேர்த்தார்.




அடுத்து ஆடிய அவுஸ்ரேலிய 'ஏ' அணி 48.4 ஓவர்களில் 266 ஓட்டங்களைச் சேர்த்து தோல்வியுற்றது.

அற்புதமாக ஆடி அணியின் எண்ணிக்கையை கிடுகிடுவென உயர்த்திக்கொண்டிருந்த அணி கப்டன் பிரட் ஹடின் 129 ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோது ரன் அவுட் ஆனது ஆட்டத்தில் திருப்பத்தை ஏற்படுத்தியது. அவர் 9 ஆவது விக்கெட்டாக ஆட்டமிழந்தார்.

மற்றொரு வீரர் ஹுசே 45 ஓட்டங்களைச் சேர்த்தார். இக்கட்டான சூழலில் பாகிஸ்தான் வீரர் நவீட் உல் ஹசன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியது அணியின் வெற்றிக்கான காரணங்களில் ஒன்றாக அமைந்தது.

# அவுஸ்ரேலிய ஓபன்; கப்ரியாட்டியும் விலகல்

(சிட்னி)



அவுஸ்ரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் போட்டி தொடங்குவதற்கு இன்னும் 3 தினங்களே உள்ள நிலையில் மகளிர் பிரிவில் மேலும் ஒருவர் விலகியுள்ளார்.

தோள்பட்டை வலி காரணமாக அமெரிக்காவின் ஜெனிபர் கப்ரியாட்டி பங்கேற்பிலிருந்து பின்வாங்கியுள்ளார் என போட்டி அமைப்புக் குழுவினர் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளைஸ்டர்ஸ், ஜஸ்டின் ஹெனின், ஹார்டென் ஆகியோர் ஏற்கெனவே இந்தப் போட்டியிலிருந்து விலகியுள்ளனர்.

அவர்களைத் தொடர்ந்து கப்ரியாட்டியும் விலகுவது அவுஸ்ரேலிய ஓபன் போட்டி அமைப்பாளர்களுக்கு பெரும் கஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

2001 - 2002 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற அவுஸ்ரேலிய ஓபன் போட்டிகளில் சம்பியன் பட்டம் வென்றவர் கப்ரியாட்டி.

வரும் 17 ஆம் திகதி மெல்பேர்ன் பார்க்கில் அவுஸ்ரேலிய ஓபன் போட்டி தொடங்கவுள்ளது.

# விளையாட்டு

# சிட்னி ரெனிஸ் போட்டியில் கார்லோஸ் மோயா தோல்வி

(சிட்னி)

சர்வதேச ரெனிஸ் தொடரில் ஸ்பெயினின் கார்லோஸ் மோயா அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில் முன்னணி வீரர்கள் பங்கேற்கும் 'சிட்னி சர்வதேச ரெனிஸ்' தொடர் நடைபெற்றுவருகிறது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் அவுஸ்ரேலியாவின் ஹெவிட், பிரான்ஸின் அர்னாட் கிளிமென்டை எதிர்த்து விளையாடினார்.

விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் ஹெவிட் 6-2, 6-4 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில், 'சென்னை ஓபன்' போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற மோயா, செக்குடியரசின் ரொடிக் ஸ்டீபனிக்கைச் சந்தித்தார்.

இதில் முதல் செட்டை கைப்பற்றிய மோயா, அடுத்த இரண்டு செட்களில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார். ஸ்டீபனிக் 2-6, 6-4, 6-2 என்ற செட்களில் மோயாவை வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

# இந்திய - பாகிஸ்தான் அணிகள் உத்தேச போட்டி தினங்கள்!

(புதுடெல்கி)

இந்திய கிரிக்கெட் அணி கடந்த ஆண்டு மார்ச் மாதம் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடியது.

டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கிலும், ஒருநாள் தொடரை 3-2 என்ற கணக்கிலும் வென்று தொடரைக் கைப்பற்றியது. இதன் தொடர்ச்சியாக பாகிஸ்தான் அணி இந்தியா வருகிறது.

பெப்ரவரி 25 ஆம் திகதி இந்தியா வந்து 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டியில் விளையாடும்.

பாகிஸ்தான் அணி இந்தியாவுடன் மோதும் போட்டி விபரமும், இடங்கள் குறித்தும் வருகிற 15 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று தெரிய வருகிறது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை 15 ஆம் திகதிக்குள் சுற்றுப்பயண விபரத்தை வெளியிடுமாறு கேட்டுக்கொண்டிருக்கிறது.

முதல் டெஸ்ட் மார்ச் 4-8 ஆம் திகதி வரையும், 2 ஆவது டெஸ்ட் 12-16 ஆம் திகதி வரையும், கடைசி டெஸ்ட் 20-24 ஆம் திகதி வரையும் நடைபெறலாமென்று தெரிகிறது.

இதேபோல ஒருநாள் போட்டிகள் மார்ச் 28, 31 ஏப்ரல் 3, 5 மற்றும் 9 ஆம் திகதிகளிலும் நடைபெறலாமென்று கூறப்படுகிறது.

டெஸ்ட் போட்டிகள் மொகாலி, சென்னை பெங்களூர் அல்லது கொல்கத்தா ஆகிய நகரங்களில் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்னையில் 2 ஆவது போட்டி நடைபெற வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுகிறது.

# அணித்தலைவர் பதவியிலிருந்து இன்ஸமாமை நீக்கவேண்டும்!

## வசீம் அக்ரம் கூறுகிறார்



(மெல்பேர்ன்)

பாகிஸ்தான் அணித்தலைவர் பதவியில் இருந்து இன்ஸமாமை நீக்க வேண்டுமென்று - பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் வசீம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடிவரும் பாகிஸ்தான் 3 டெஸ்ட் போட்டித் தொடரில் மூன்றிலும் தோற்று தொடரை இழந்தது.

இதனால் பாகிஸ்தான் வீரர்கள் விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

பேர்த்தில் நடந்த முதல் டெஸ்டில் அந்த அணி 491 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்றது. பாகிஸ்தான் கிரிக்கெட் வரலாற்றில் இப்படி ஒரு மோசமான தோல்வி இதற்கு முன் நடந்தது இல்லை.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடரை பாகிஸ்தான் இழந்ததைத் தொடர்ந்து கப்டன் பதவியிலிருந்து இன்சமாமை நீக்கவேண்டுமென்று பாகிஸ்தான் முன்னாள் கப்டன் வசீம் அக்ரம் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது -

அவுஸ்ரேலியா தோற்கடிக்க முடியாத அணி அல்ல என்று கூறினேன். பாகிஸ்தான் வீரர்கள் சிறப்பாக ஆடுவார்கள் என்று நினைத்து அப்படிக் கூறினேன்.

பாகிஸ்தான் வீரர்கள் போராடவே இல்லை. ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருந்தது. சிறந்த கப்டன் இல்லை. சரியான திட்டம் இல்லை. கப்டன் பதவிக்கு இன்ஸமாம் தகுதியானவர் இல்லை. அவரை நீக்கவேண்டும்.

அவருக்குப் பதிலாக யுனுஸ் கான் பொருத்தமானவர். யுனுஸ் கானை கப்டனாக நியமிக்கலாம். யுகானா சிறந்த துடுப்பாட்ட வீரர் தான். ஆனால் எல்லா நேரத்திலும் அவர் திறமையை வெளிப்படுத்துவதில்லை.

சொகைப் அக்தர் நீண்டதூரம் ஓடிவந்து பந்துவீசுவது நல்லதல்ல. இதைப் பயிற்சியாளர் பொப் வூல்மர் அவருக்கு அறிவுறுத்த வேண்டும் - இவ்வாறு அவர் கூறினார்.

# முக்கோணப் போட்டிகள் இன்று ஆரம்பமாகவுள்ளன

(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய 3 நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டி அவுஸ்ரேலியாவில் இன்று தொடங்கவுள்ளது. இதில் ஒவ்வொரு அணியும், மற்ற அணியுடன் தலா 3 முறை மோதும். தொடக்க ஆட்டத்தில் அவுஸ்ரேலிய - மேற்கிந்தியத் தீவுகள் மோதுகின்றன.

இந்த ஆட்டம் மெல்பேர்ன் நகரில் நடைபெறும். நியூஸிலாந்து, பாகிஸ்தான் டெஸ்ட் தொடரில் சரியாக விளையாடாத ஹைடன் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். 2 போட்டியில் அவருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

## தமிழீழ விளையாட்டுவிழா ஜூலைக்கு ஒத்திவைப்பு

எதிர்பாராத விதமாக ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட துயரமான சூழ்நிலையைக் கவனத்தில் கொண்டு அடுத்தமாதம் நடைபெறவிருந்த நான்காவது தமிழீழ தேசிய விளையாட்டுவிழா எதிர் வரும் ஜூலை மாதம் இரண்டாம் வாரத்திற்கு பிற்போடப்பட்டுள்ளது.

தமிழீழ தேசிய எழுச்சி நிகழ்வுகளில் ஒன்றாக அமையும் இந்த விழாவின் சிறப்புக்காக ஒத்துழைக்கும் அனைவரையும் எமது மக்களின் துயரமான இந்த வேளையில் துயர் துடைப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவுக்கரம் நீட்டும்படி தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா கேட்டுள்ளார்.

# மோயாவின் ரெனிஸ் பட் 30 ஆயிரத்துக்கு ஏலம்!




உலகின் 5 ஆம் நிலை ரெனிஸ் வீரர் கார்லோஸ் மோயா. சென்னையில் நடந்த ஓபன் போட்டியில் சம்பியன் பட்டம் பெற்றார். ரெனிஸ் பட் தயாரிப்பு நிறுவனமான பேபலோட் இவருக்கு ஸ்பொன்சர் செய்கிறது.

அங்கு இருந்தபோது அவர் அந்த பட்டை ஏலம விட்டார். அந்த பட் சுமார் ரூ. 30 ஆயிரத்துக்கு ஏலம் போனது. அத்தோடு அவரது பாக் 15 ஆயிரம் ரூபாவுக்கு ஏலம் போனது.

இந்தத் தொகையை மோயா ஸ்போர்ட்ஸ் லாக்கர் ஷோரும் நிர்வாக இயக்குநர் அல்தாப் வோகன் வாட்டிடம் சுனாமி நிவாரணத்துக்கு ஒப்படைத்தார்.




இத்தாலியில் உள்ள லிவோர்னோவில் 'இத்தாலியன் சம்பியன்ஷிப்' போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் இன்டர் அணி வீரர் கிறிஸ்டியன் வியரி, லிவோர்னோ கோல்கீப்பர் மார்கோ அமெலியாவை ஏமாற்றி கோல் அடிக்க முயற்சிக்கிறார். இந்தப் போட்டியில் இன்டர் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

# இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை

(வடமராட்சி)

சுனாமி கடற்பேரலையின் காரணமாக, வீடு வாசல்களை இழந்த வடமராட்சி கிழக்குப்பகுதி மக்களை- மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரதேசத்திலுள்ள சுமார் 4 ஆயிரத்து 500 குடும்பங்கள் இடம்பெயர்ந்து வாழ்கின்றன. கடற்கரையில் இருந்து ஒரு கிலோமீற்றர் வரையிலான பகுதிகளில் உள்ள அனைத்து கட்டடங்கள் மற்றும் சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்துள்ள இந்த மக்களை - கடற்கரைப்பிரதேசத்திலிருந்து சற்றுத் தொலைவில் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கையில் கடற்புலிகளும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகமும் ஈடுபட்டு வருகின்றன.

இந்தப் பிரதேசத்தின் இடிபாடுகள் மற்றும் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள், வீதிகள் என்பன துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. (122)

## மஹா கும்பாபிஷேகம்

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதி ஸ்ரீ மஹாகாளி அம்பாள் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம் - எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10.05 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

19 ஆம் திகதி புதன்கிழமை கர்மாரம்பமும், 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணி முதல் அடியவர்கள் எண்ணைக் காப்பிடுதலும், 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மஹாகும்பாபிஷேகமும் தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறவுள்ளது.

ஆரம்பக் கிரியைகளை மாவை ஆதினகுரு பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியார் கலைமாமணி சிவஸ்ரீ சு.து. சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆசீர்வதித்து ஆரம்பித்து வைக்கவுள்ளார். (82)

# உணவு பதனிடலில் ஈடுபடும் கைத்தொழிலாளருக்கு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

உணவு பதனிடல் சம்மந்தமாக யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து, தெரிவு செய்யப்படும் 30 கைத்தொழிலாளர்களுக்கு கொழும்பில் 3 நாள் பயிற்சி வழங்க, கைத்தொழில் அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் பயிற்சியில் பங்குபற்றவுள்ள உணவு பதனிடலில் ஈடுபட்டுள்ள கைத்தொழிலாளர்களை கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை, வடமாகாண அலுவலகம், தேசிய வீடமைப்பு அதிகார சபை கடடடம், சுண்டிக்குழி, யாழ்பாணம் எனும் முகவரியில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சிற்றுண்டிகள், பாற்பொருட்கள், வெதுப்பக உற்பத்திகள், பழம் பதனிடல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள கைத்தொழிலாளர்களும், ஏனைய உணவு பதனிடலில் ஈடுபட்டுள்ள கைத்தொழிலாளர்களும் இங்கு பதிவினை மேற்கொள்ளலாம் எனவும், பயிற்சி நடைபெறவிருக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும், வடமாகாண கைத்தொழில் அபிவிருத்தி சபை பிரதிப் பணிப்பாளர் ரி. பாலசுப்ரமணியம் தெரிவித்தார்.

# சர்வதேச செஞ்சிலுவைக்குழு இழப்புக்களை உறுதிப்படுத்தாது!

## யாழ்ப்பாண அலுவலகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தால் சொத்துக்கள், இழப்புக்களை உறுதிப்படுத்துவதில் - செஞ்சிலுவை சர்வதேசக்குழு எந்தவிதத்திலும் சம்பந்தப்படாது என்று, செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ். அலுவலகத்தால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நிவாரண முயற்சிகளுக்கு தன்னாலான அனைத்து ஒத்துழைப்புக்களையும் செஞ்சிலுவைக்குழு தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது.

ஆயினும் இந்த அனர்த்தத்தால் சொத்துக்கள், உயிர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை உறுதிப்படுத்துவதில் செஞ்சிலுவை சர்வதேசக் குழு எந்தவிதத்திலும் சம்பந்தப்படாது என செஞ்சிலுவை சர்வதேசக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகம் உறுதிப்படுத்துகிறது.

குறிப்பாக, செஞ்சிலுவைக் குழு பிற நாடுகளுக்கான விஸா விண்ணப்பங்களுக்கு தனது ஒத்துழைப்பை வழங்கும் நிலையில் இல்லை என்பதால், அத்தகைய உறுதிப்பாடுகள் தேவைப்படுமானால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அணுகும்படி செஞ்சிலுவை சர்வதேசக் குழு கேட்டுக்கொண்டுள்ளது.

## புலோலி நலன்புரி முகாமிலிருந்து

# எழுபத்தொன்பது குடும்பங்கள் மணற்காட்டுப் பகுதிக்கு மாற்றம்

சுனாமி அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து - புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் தங்கியிருந்த 79 குடும்பங்கள், மணற்காடு - விளாங்காட்டு பாடசாலையில் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையத்துக்கு மாற்றப்பட்டன.

நேற்றுமுன்தினம் இவர்கள் இடம்மாற்றப்பட்டதாகவும், மணற்காட்டில் தற்காலிக நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் இவர்களை குடியமர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

இந்தத் தற்காலிக முகாமில் தங்கவைக்கப்படும் மக்களுக்கு அடுத்த ஆறு மாத காலத்துக்குள் நிரந்தர குடியிருப்புக்கள் அமைத்துக் கொடுக்கவும், சுனாமி நிவாரண செயலணிக்குழு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. (12)

# கல்விச்சேவை ஒருங்கிணைப்பு செயலகம் நெல்லியடியில் திறந்து வைக்கப்பட்டது

(நெல்லியடி)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்குடன், கல்விச் சேவைகள் செயலகம் - கடந்த செவ்வாய்க்கிழமை நெல்லியடியில் திறந்து வைக்கப்பட்டது.

சுனாமி அனர்த்த கூட்டுச் செயலணிச் செயலகத்தில் அமைக்கப்பட்ட இந்தச் செயலகத்தை, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் திறந்து வைத்தார்.

இதற்கு ஒருங்கிணைப்பாளராக புஸ்பதாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். செயலகத்தின் அனுசரணையாளர்களாக செயற்படுத்துவதற்கு யுனிசெப், சிறுவர் பாதுகாப்பு நிலையம் முன்வந்துள்ளது.

இந்தச் செயலகத்தால் - பாதிக்கப்பட்ட மாணவர்களின் விபரங்களைச் சேகரித்து, அவர்களுக்கான கல்வி மற்றும் உபகரணங்கள், சீருடைகள் எனபனவும் வழங்கப்படுவதுடன், சேதமடைந்த பாடசாலைகளுக்கான தற்காலிக கொட்டகைகள் அமைத்துக் கொடுப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (12)

## பொங்கல்தின நிகழ்வு

சித்தன்கேணி ஸ்ரீ நாக கன்னியம்பாள் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா இன்று காலை 8.30 மணிக்கு அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகி, தொடர்ந்து விசேட நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இன்று பிற்பகல் 1 மணிக்கு தீ மிதிப்பு நிகழ்வும், அதனைத் தொடர்ந்து க.நித்தியதசீதரன் "நம்பிக்கையே வழிபாடு" என் னும் தலைப்பிலும், அருட்சொல்வாரி செ.கந்தசத்தியதாசன் "எங்கும் சக்தி" என்னும் தலைப்பிலும் சொற்பொழிவாற்றவுள்ளனர்.

## காசோலை வழங்கல்

நல்லூர் பிரதேசசபை நிர்வாகத்துக்குட்பட்ட சகல சனசமூக நிலையங்களுக்கும் 2004 ஆம் ஆண்டுக்கான காசோலைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சனசமூக நிலைய நிர்வாகத்தினர் அலுவலக நேரத்தில் வந்து காசோலையைப் பெற்றுக்கொள்ளலாம் என நல்லூர் பிரதேசசபை செயலர் தெரிவித்தார். (63)

## ஆய்வுநூல் வெளியீட்டு விழா

திருக்கேதீஸ்வரம் திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளின் 17 ஆவது குருபூசையும், வாகீச கலாநிதி எழுதிய 'நயினை ஸ்ரீ நாக பூஷணி' ஆய்வுநூல் வெளியீடும் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு சீருடைத்துணி

சுனாமி அனர்த்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள 21 பாடசாலைகளைத் தெரிவுசெய்து, அநதப் பாடசாலைகளுக்குச் சீருடைததுணி வழங்குவதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. இதற்கமைய தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு 4 மில்லியன் ரூபா பெறுமதியான சீருடைத் துணி வழங்கப்படவுள்ளன.

## சத்துணவு வழங்கல்

(வடமராட்சி)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு, நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மகளிர் பிரிவினர் தொடர்ச்சியாக சத்துணவுகளை வழங்கி வருகின்றனர்.

# திரிகரண சுத்தியாக வாழ்ந்து சைவத்துக்கு தொண்டாற்றியவர் தங்கம்மா அப்பாக்குட்டி

## இந்துநாகரிகத்துறைத் தலைவர் உரை

தன்நலம் கருதாமல் மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரண சுத்தியாக வாழ்ந்து, சைவசமயத்துக்கு அளப்பரிய தொண்டாற்றிய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு - இன்று முத்துவிழா கொண்டாடப்படுகிறது.

வைரவிழா, பவளவிழா கொண்டாடுவதுபோல் முத்துவிழா கொண்டாடப்படுவதன் காரணம் - முத்து என்றால் குளிர்மை எனப்படும். அதேபோல அம்மா இன்று சகல பணிகளையும் செய்து, மனம் குளிர்ச்சி அடைந்துள்ளார். அவரை நாம் இனி சிவத்தமிழ் அம்மா என அழைப்பதே மதிப்பிற்குரியதாகும்.

தங்கம்மா அப்பாக்குட்டியின் 80 ஆவது அகவை நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட 'காலம் தந்த கை விளக்கு', 'சிவத்தமிழ்' ஆகிய நூல்களின் வெளியீட்டுரையை ஆற்றிய யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் நாச்சியார் செல்வநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் துர்க்காதேவி ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

வழிபாடு என்பது வழிப்படுத்துதல் எனப்படும். நான்கு நாயன்மார்களும் கூறிய வழிபாட்டு மரபை நூலாசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் மிக எளிமையாக எடுத்துக் கூறியுள்ளார்.

விளக்கு என்பது இருளை அகற்றி, ஒளி கொடுப்பது. அதேபோல இந்தக் 'காலம் தந்த கைவிளக்கு' என்னும் நூலும் எமது அறியாமைகள் பலவற்றை நீக்கியுள்ளது.

திருமுறைகளைப் பொருள் அறியாது ஓதுவதால், எமக்கு ஏற்படும் அருளும் குறைவடைகிறது. அகவன்பின் மூலம் வணங்குவதையே இறைவன் விரும்புவான் எனக் கூறினார்.

ஜேர்மன் நாட்டை வசிப்பிடமாகக் கொண்ட கலாநிதி வெற்றிமணி மு.சு.சிவகுமாரனால் அங்கிருந்து வெளியிடப்படும் 'சிவத்தமிழ்' என்னும் நூலின் வெளியீட்டுரையை ஆறு திருமுருகன் நிகழ்த்தினார்.

அவர் தனதுரையில் -

எமது குரும்பசிட்டிக் கிராமத்தைச் சேர்ந்தவர் ஜேர்மனியில் வாழ்ந்தபோதும், இங்குள்ள பெரியாரின் பட்டப்பெயரில் நூல் வெளியிட்டு, அங்குள்ள மக்களுக்கு சமய அறிவைப் பரப்புவதிலிருந்து எமது கலாசாரம் மேலும் ஓங்கி வளரும் என்பதில் ஐயமில்லை.

எங்கள் நாட்டு சமய பாடப்புத்தகங்களில் - எமது ஊர்க்கோயில்களின் வரலாறு எழுதப்படுவதில்லை.

இதனால் மாணவருக்கு இந்தியாவில் உள்ள ஸ்தலங்களைப்பற்றி அறிய முடிகிறதேதவிர, எமது ஊர்க் கோவில்களைப்பற்றி அறிய முடிவதில்லை.

பக்திப் பாடல்களை எத்தனையோ பேர் எழுதுகிறார்கள். ஆனால் 6 ஆம், 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சமயகுரவர்கள் பாடிய தேவாரங்கள் இன்றும் நிலைத்து நிற்கின்றன. இதற்குக் காரணம் - மக்களை வாழ்வாங்கு வாழ, திருமுறைகள் எடுத்தியம்புகின்றன.

முள்ளும், புதருமாக இருந்த இடததைத் தெய்வீக இடமாக மாற்றி, உலகறியச் செய்த பெருமை அம்மா அவர்களைச்சாரும்.

கேட்போர்களுக்கு இனிமையான பேச்சு, இந்துசமயம் பற்றி எடுத்துக்கூறும் பண்பு, இல்லை என்று வந்தவர்களுக்கும், ஸ்தாபனங்களுக்கும் அறக்கொடை வழங்கும் பரிவு போன்ற கைங்கரியங்களால் ஞானம் பெற்ற பண்டிதையாகக் திகழ்கிறார் எனத் தெரிவித்தனர். பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயர், நூலாசிரியர்கள் மனோன்மணி சண்முகதாஸ், வெற்றிமணி மு.சு.சிவகுமார் ஆகியோரும் உரையாற்றினர். (101)

# சுழிபுரத்தில் சுனாமி வதந்தி மக்கள் சிதறியோட்டம்!

(சுழிபுரம்)

சுழிபுரம் பாண்டுவெட்டைக் கிராமத்தில் சுனாமி என பரப்பப்பட்ட வதந்தியை நம்பி, அந்த ஊர் மக்கள் இரவு ஒரு மணியளவில் வீடுகளை விட்டு வெளியேறி நாலாபுறமும் சிதறியோடிய சம்பவமொன்று கடந்த திங் கட்கிழமையன்று இடம்பெற்றது.

வீடுகளிலிருந்த மக்கள் வெளியேறி ஓடிவருவதைக் கண்ட அந்தப் பகுதி அகதி முகாமில் தங்கியிருந்த அகதிகளும் தமது உடமைகளை விட்டுவிட்டு, பீதியுடன் சுழிபுரம் கெல்லியான் சந்திவரை வந்துள்ளனர் .

இதன் பின்னர் அதிகாலை 3 மணியளவில் அவ்வூர் இளைஞர்கள் சிலர் இது பற்றி கடற்படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது, அது வெறும் வதந்தி எனத் தெரிவிகிகப்பட்டது. இதனையடுத்து மக்கள் தமது வீடகளுக்குத் திரும்பிச் சென்றனர். (48)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஐந்து



பெயர் : வ.சாணுகேசன்
முகவரி : நெல்லியடி.

வாழ்க வளமுடன்




சிறாரின் பெயர் :
முகவரி
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்



## சிநேகிதியே

# பெண்களில் மலடு என்பதே கிடையாது

குழந்தைப்பேறு என்பது எல்லாத் தம்பதியினருக்கும் வேண்டியதும், விருப்பமானதும், பொதுவானதுமான ஒரு விடயம்தான். பலர் இந்த விடயமாக ஆசீர்வதிக்கப்பட்டாலும், சிலருக்கு இந்தச் சந்தோஷம் எளிதாகக் கிடைத்து விடுவதில்லை.



பிறப்பதில் பிரச்சினை ஏற்படுகிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். இவர்களில் 35 தொடக்கம் 40 வீதம் வரைதான் பெண்கள் காரணமாகிறார்கள். பத்து வருடங்களுக்கு முன் 20 தொடக்கம் 25 வீதம்வரைதான் ஆண்கள் காரணமாக இருந்தார்கள். ஆனால் இன்று 40 வீதம் வரைக்கும் குழந்தையில்லாப் பிரச்சினைக்கு ஆண்கள்தான் காரணமாக இருக்கின்றனர். 15 தொடக்கம் 20 வீதம்வரை பிரச்சினைக்குக் காரணம் யாரென்று தெரியாமல் போகலாம். இந்தச் சந்தர்ப்பத்தில் தம்பதிகள் இருவருமே சாதாரணமாக இருந்தாலும், அவர்களுக்கு எந்தக் காரணத்தினாலோ குழந்தை பிறக்காமலேயே போகலாம்.

எது எப்படியோ...? திருமணமாகி இரண்டு வருடங்களாகியும் குழந்தை உண்டாகாமல் இருந்தால்தான், தம்பதிகளில் யாருக்கேனும் பிரச்சினை இருக்கமுடியும் என்று நம்மால் சொல்ல முடியும் என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். இதேபோல குறிப்பிட்ட சில மாதங்களுக்குள்ளேயே பிரச்சினை உள்ளது என்றெல்லாம் கண்மூடித்தனமாகச் சொல்லிவிட முடியாது.

ஒவ்வொரு தம்பதிக்கும் அவரவர் சூழல் வேறுபடுகின்றது. சிலர் முப்பது வயதில் திருமணம் முடித்திருக்கலாம். இவர்களுக்குக் குழந்தை விடயத்தில் தள்ளிப் போக முடியாது. அவர்கள் இரண்டு, மூன்று வருடம்வரை காத்திருக்கவும் முடியாது. இது உடனே கவனிக்கப்படவேண்டிய விடயமாகும்.

சிலருக்கு இருபத்திரண்டு, இருபத்திமூன்று வயதிலேயே திருமணமாகலாம். ஆனால் குடும்பத்தாரின் நச்சரிப்பு இந்தத் தம்பதிக்கு அதிகமாக இருக்கும்: வயது காரணமாக இவர்கள் இன்னும் சிலகாலம்வரை பொறுத்திருந்து பார்க்கலாம். என்றாலும், குடும்பக் கட்டாயத்தின்பேரில் அவர்கள் உடனே சிகிச்சை செய்ய ஆரம்பித்துவிட நேரலாம். அதனால் சூழல் என்பது அவரவர்க்கு ஏற்றபடி மாறுபடும். அவரவருடைய குடும்பச் சூழல் மற்றும் தேவைப்படி மருத்துவர்கள் சிகிச்சையளிப்பார்கள்.

பொதுவாகச் சிகிச்சைக்கு வரும் குழந்தையில்லாத் தம்பதிகளில், நூறு பேரில் எண்பத்தைந்து சதவீதம்வரை எந்தவிதமான மருத்துவ மாத்திரைகளையும் பயன்படுத்தாமலேயே கருத்தரித்துவிடுவார்கள். எஞ்சியுள்ளவர்களுக்குத்தான் மருத்துவ உதவி முழுமையாகத் தேவைப்படுகிறது.

பிரச்சினையுடன் பெரும்பாலும் அம்மா - மகள், அல்லது மாமியார் - மருமகள் என்றே மருத்துவருடன் செல்வதுண்டு. பிரச்சினையுள்ளவர்கள் இப்படி செல்வது தவறு.

தம்பதிகளாக செல்லும்போதுதான் பிரச்சினையை இரண்டு கோணங்களிலும் அலசித் தீர்வுகாணமுடியும். இதில் மாமியார்களுக்கும், அம்மாக்களுக்கும் இடமில்லை. தம்பதிகளும் தயக்கப்படாமல், தங்கள் பிரச்சினைகளை மனம் விட்டு மருத்துவரிடம் சொல்ல வேண் டும். அதிலும் அவர்கள் கொடுக்கும் தகவல்கள் உண்மையாக இருக்க வேண்டியது அவசியம்.

பல காரணங்களால் உடலளவில் பிரச்சினைகள் இல்லாத தம்பதிகளுக்கும் கூடக் கருத்தரிப்பதில் பிரச்சினைகள் உண்டாகலாம். வைத்தியரிடம் இதுபற்றி ஒளிவு மறைவில்லாமல் பேசிப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணலாம்.

எல்லா விரல்களும் ஒன்றுபோல இருப்பதில்லை. அது போலத்தான் எல்லாத் தம்பதிகளுக்கும் இந்த விடயம் ஒரே சமயம், தாங்கள் எதிர்பார்ப்பதுபோல நடந்துவிடும் என்று சொல்லிவிட முடியாது.

இன்றும்சரி, அன்றும் சரி... திருமணமான தம்பதிகளுக்கு அவர்களுடைய குடும்பங்கள் கொடுக்கும் அதிகப்படியான அவகாசம் மூன்று மாதங்கள்தான். அதன் பிறகு 'இன்னும் தாயாகவில்லையா?' என்ற கேள்விகளால் அந்தத் தம்பதியை அரித்தெடுக்கத் தொடங்கி விடுகிறார்கள் அவர்களுடைய உறவினர்களும், நண்பர்கள் வட்டமும். அதிலும் ஆண் இந்த விடயத்திலிருந்து பெரும்பாலும் தப்பிவிடுவார். அவரிடம் இந்தக் கேள்வி பெரும்பாலும் நேரடியாகக் கேட்பதில்லை. பெண்கள்தான் மொத்தத் தாக்குதலுக்கும் ஆளாகிறார்கள். கொஞ்ச நாட்களிலேயே அவளுக்குச் சமூகம் 'மலடி' என்ற ஒரு பட்டத்தையும் வழங்கிவிடுகிறது.

நாம் முதலில் ஒரு விடயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். பெண்களில் மலடு என்ற ஒரு விடயமே கிடையாது தெரியுமா? தம்பதிகள் இருவரும் சரியான முறையில், சரியான நேரத்தில் உறவு வைத்துக் கொள்ளாமல் இருந்திருக்கலாம். அதனால்தான் குழந்தை உண்டாகாமல் இருந்திருக்கலாமே ஒழிய, மலட்டுத் தன்மை என்பது பெண்ணில் கிடையாது. அவர்களில் அதாவது - வளர்ச்சி குறைந்த நிலைதான் ஏற்பட்டிருக்கலாமே ஒழிய, வேறு காரணங்கள் இருப்பதற்குச் சாத்தியமில்லை.

திருமணமான தம்பதிகளில் நூற்றுக்கு இருபது பேருக்குக் குழந்தை

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

# வாழ்க்கையின் அருமை

வாழ்க்கை என்பது அருமை. அருமையில்லாத வாழ்வு அற்பமானது! அர்த்தமற்றது! ஆழமற்றது! இந்த அருமையில் தான் கணவன் - மனைவி இருவருக்கிடையே புரிதலும், நேசமும் இதுமட்டுமன்றி இவற்றுக்கும் அப்பாற்பட்ட ஏதோ ஒன்றை வாழ்க்கை கொண்டிருக்கிறது.

நம்மில் பல தம்பதிகளைப் பார்க்கிறோம். அவர்களில் சிலர் பார்ப்பவர்களுக்கு அழகாக நேசமுடையவர்களாக இருக்கிறார்கள். இன்னும் சிலரின் முகங்களில் சந்தோஷக் களையையே காணமுடியாதவாறு வெறுப்படைந்தவர்களாக இருக்கிறார்கள். இதில் வியப்பதற்கு என்ன இருக்கிறது. சில தம்பதிகள் தம்மையே மையமாகக் கொண்டு சுயநல வாதிகளாக இருக்கிறார்கள். இதுவும் ஒரு வாழ்க்கைதான். சில கணவன் - மனைவிக்கிடையே உடல் ரீதியான உறவுகள் இருந்தாலும், மனரீதியான எந்தத் தொடர்பும் அற்றதாக இருக்கும்.



எடுத்ததற்கெல்லாம் சந்தேகப்படுகின்ற ஒரு கணவனிடம், மனைவிக்கு எப்படி இணக்கமான உறவு வரும். அதேபோல, தான் செய்வதே சரி என்று சாதிக்கும் ஒரு கணவரோடு ஒரு மனைவிக்கு எப்படி இணக்கம் வரும். மாறாக எடுத்ததற்கெல்லாம் கோபப்படும் ஒரு மனைவியுடன் கணவனுக்கு எப்படி அன்பு வரும். இருவருமே சித்தப்பிரமை பிடித்த தம்பதிகளாக வாழும்போது வீட்டுக்குள் மகிழ்ச்சியைக் காண்பது அரிது.

உண்மையான கணவன் - மனைவி இணக்கத்தில் துன்பம், துயரம், தோல்விகள், இலாபம், நட்டம், சோகம், இவைகள் ஒட்டுமொத்தமாகப் பரிமாறப்படல் வேண்டும். ஒருவர்பற்றி ஒருவர் புரிந்துகொள்ள வேண்டும். அதுதான் உண்மையான வாழ்க்கை.

அன்புக்கு என்றும் வயதாவதில்லை. சில தம்பதிகள் வயதானபோதிலும்கூட, ஒருவரில் ஒருவர் கரைந்துவிடுகிறார்கள். இன்னும் சிலரோ நாம் இத்தனைகாலம் வாழ்ந்தும் இன்னும் சந்தோஷமாக வாழவேயில்லை என்று அங்கலாய்க்கிறார்கள். எத்தனை வருடங்கள் வாழ்ந்த போதும் ஆவல், கோபம், ஏமாற்றம், சந்தேகம், உடைமைத்தனம், போட்டி இவைகள் இருக்கும். வாழ்க்கையில் உயிர் உள்ளவரை நிம்மதி இருக்காது.

வாழ்வை மனிதன் ரசிக்க வேண்டும், அதை ருசிக்கவேண்டும். இரண்டும் இல்லாதவிடத்தில் அதை மதிக்கவாவது வேண்டும். தானும் வாழ்ந்து, மற்றவர்களையும் கலக்கமின்றி வாழவைக்க வேண்டும். இதுதான் வாழ்க்கை. மற்றயவை யாவும் மாயை.

மரத்தின் வளர்ச்சி அழகானது. அதன் அழகு தென்படுவது பக்கத்தில் செழிப்பான மரங்கள் காட்சியளிப்பதனால்தான். அதேபோன்று மனிதனின் வளர்ச்சி அழகாக இருப்பது, உறவுகள் பக்கத்தில் இருக்கும்வரைதான். வயதானபோதும்கூட சில விவாகரத்துக்கள் சமூகத்தில் தலைவிரித்தாடுவது வியக்கத்தக்க விடயமல்ல. வயதானாலும்கூட கணவன் - மனைவி இருவரின் மனதிலும் நாம் ஒருவர் என்ற எண்ணம் இருக்கவேண்டும். அந்தப் புனிதமான எண் ணமே குடும்ப வாழ்வை இன்பமாக்கும் ஆணிவேராகும்.

## குழந்தைக் கல்வி



## பெற்றோரின் அவதானம் தேவை

அமெரிக்காவில் அமைந்துள்ள 'யேல் பல்கலைக்கழகத்தில்' நரம்புகள் சம்பந்தமாக விஞ்ஞான பீடத்தின் பேராசிரியர் ஒருவர் அங்கவீனர்களாக இருக்கும் குழந்தைகளின் கல்வி சம்பந்தமாக மனோதத்துவ ரீதியில் பரிசோதனைகள் நடத்தியுள்ளார். அதில் குழந்தைகள் வாசிப்பதற்கும், எழுத்துக்களை இனங்காண்பதற்கு கஷ்டப்படுவது சம்பந்தமாகவும் பல விஞ்ஞான ரீதியான தகவல்களை அறிந்துள்ளார்.

சிறுவர்கள் கல்வி கற்றலின் ஆரம்ப அனுபவம் அவர்களுக்குத் தங்கள் வீடுகளில் இருந்தே கிடைக்கிறது.

இந்த அனுபவங்கள் பிள்ளைகளுக்கு விருப்பமானவாறும், திருப்தியடையுமாறும் கல்வி தொடர்பாகப் பெற்றோர்கள் அவதானம் செலுத்துகின்றனர்.

கல்வி சம்பந்தமாகப் பிள்ளைகள் ஆரம்பத்தில் எடுத்த வெற்றி, அவர்களின் வருங்காலத்திலும் கற்கும் கல்வி வெற்றியடையக் காரணமாக இருக்கிறது. ஆகையால் குழந்தைகளின் ஆரம்பக் கல்வியில் – கல்வி அனுபவங்கள் சிறப்படைய வேண்டிய அனைத்து முயற்சிகளிலும் பெற்றோர்கள் அவதானம் செலுத்தவேண்டும்.

குழந்தைகளின் ஆரம்பக் கல்வியில் கல்வி அனுபவங்கள் சிறப்படையவேண்டிய அனைத்து முயற்சிகளிலும் அவதானம் செலுத்தப்படவேண்டும்.

குழந்தைகளின் படிப்பைத் தேவைக்கு அதிகமாக, விரைவாகச் செய்யமுயற்சிக்கும் பெற்றோர், வாசிப்பு, எழுத்து மற்றும் எண்கணிதம் சம்பந்தமாக, படிப்பின் பிரயோசனப்படுத்தும் சக்தி காலம் என்பன வருமுன் சிறுவர்களுக்கு இந்தப் பாடங்களைக் கற்பிக்க ஆரம்பிக்கின்றனர். இதன் பிரதிபலன் மிகப் பயங்கரமானது.

கல்வி சம்பந்தமாக ஆரம்ப காலத்தில் குழந்தைகள் சித்தியடையாமல் விடுதல் போன்ற அனுபவங்கள் – அவர்களின் கல்வி சம்பந்தமாக வாழ்நாள் முழுவதும் பாதிக்கலாம். அதில் அவர்களின் கல்வி கற்றலில் விருப்பம் குறைந்துபோக இடம் இருப்பதால், தகுந்த கற்பித்தல், முக்கிய பயிற்சிகள் போன்றன அறிந்து செயற்படவேண்டிய விடயமாகும். பெற்றோர்களால் நிறைவேற்ற வேண்டியது இதுவல்ல.

இதற்குச் சிறுவர்களைச் சந்தோஷப்படுத்தும் சிறிய சுற்றாடல் ஒன்றை அமைப்பதேயாகும். குழந்தைகளுக்கு விளையாடுவதற்காக அவர்களுக்குச் சொந்தமான விளையாட்டுப் பொருட்கள், சுதந்திரமாகத் திரிவதற்கு இடம், பார்ப்பதற்குப் புத்தகங்கள், புதிய அனுபவங்கள் பெறுவதற்கான வாய்ப்புக்கள், செயற்பாடானவற்றைச் செயற்படுத்தவும், பெற்றோர்கள் செலுத்தும் அவதானம் மற்றும் அவர்களின் சிறப்பான கதைகள், குடும்பத்தினர்களுடன் போலவே மற்றையவர்களுடன் ஒற்றுமையாக இருப்பது போன்றவை குழந்தைகளை மகிழ்ச்சிக்குள் வைக்கும், சுற்றாடலில் இருக்கக்கூடிய அறிகுறிகளில் சிலவாகும். தகுந்த கல்வி கற்பித்தல் பாடசாலை ஆசிரியரின் செயற்பாடாகும்.

பாடசாலைகளில் ஏற்படுத்திக்கொள்வதைப்போல், பாடசாலைகளில் கற்றுக்கொண்ட செயற்பாடுகள் – பாடசாலையிலிருந்து விலகிய பின்பும் தேவைப்படுவதுபோல, தான் கற்றதை வெவ்வேறு சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப தெரிவுசெய்து பயன்படுத்தினால் மட்டும் பயன் பெற முடியும். மனோதத்துவத்தைப் படிப்பிப்பது என்பது கற்பித்ததை மனதில் தெரிவுசெய்து, பதிவுசெய்து கொள்ளும் திறனை ஏற்படுத்தும் கற்பித்தல் ஆகும். அது தானாகவே ஏற்படுவதில்லை. கற்பித்தலிலும், கற்றுக் கொள்வதிலும் அடங்கியிருந்தாலும், நன்றாகச் சிந்தித்து அபிப்பிராயங்களுக்கு ஏற்றவாறு செயற்படுத்தவேண்டிய விடயமாகும்.


# பிஞ்சு முகத்தின் தேடல்

நான் இன்றைக்கு எங்கும் போகவில்லை. கதிரைக்குள்ளே சுருண்டு கிடந்தேன். வெளியே முற்றத்தில் நிற்கும். பொன்னொச்சி மரம் பூத்துக் குலுங்கியபடி நின்றது. கீழே நிறைய மஞ்சள் பூக்கள் கொட்டிக்கிடந்தன. அதன் அழகை என்னால் ரசிக்க முடியவில்லை. முற்றத்தைத் தாண்டித் தெருவைப் பார்த்தேன். வாகனங்கள் எல்லாம் பறந்து கொண்டிருந்தன. அப்போது மேலே எழும்புழுதி எதையும் பார்க்கமுடியாமல் தடுத்தது. என் பார்வையைப் பக்கத்து வீட்டுப் பக்கம் செலுத்தினேன். அங்கே முற்றத்தில் செவ்வேளும், பரிதியும் வளையம் உருட்டி விளையாடிக் கொண்டிருந்தார்கள்... எனக்குப் பக்கத்தில் ஏதோ அரவம் கேட்கத் திரும்பினேன். அம்மாதான்... எனது புத்தகப்பையோடு நின்றாள்.!

செல்வி 3 மணியாப் போச்சு! எழும்பிவா! ரியூசனுக்கு நேரமாப்போச்சு! நான் அம்மாவை ஏற இறங்கப் பார்த்தேன். அவள் அலங்காரம்! முகத்தில் பவுடர் பூச்சு. உதட்டில் சிவப்புச் சாயம்! சீலையை தோளில் இருந்து சரிய விட்டிருந்தாள். கையில் தங்கக் காப்பு 4. மறுகையில் கைக்கடிகாரம். அம்மா எங்கை போறாள்? என்னை ரியூசனுக்கு கூட்டிப் போவதற்கு இவ்வளவு அலங்காரம்...! எனக்கு அவவிலே வெறுப்பாயிருந்தது. என்ரை மனதை அறியாத என் அம்மா புத்தகப் பையை என்னிடம் தந்துவிட்டு, முற்றத்தில் போய் தன்னுடைய சைக்கிளை எடுத்தாள். நான் அரை மனதோடு எழும்பித் தெருவுக்கு வந்தேன். சைச்சிளின் பின்னாள் ஏறினேன்! அம்மா பூசியிருந்த வாசனைத் தைலம் எனக்கு வயிற்றைப் புரட்டியது!

10 நிமிட சைக்கிள் சவாரி முடிய, ரியூசன் நடக்கும் இடத்தில் அம்மாவின் சைக்கிள் ஓட்டம் நின்றது. நான் இறங்கினேன்! அம்மா அங்குமிங்கும் எதையோ தேடினாள். தூரத்தே நின்ற ரியூசன் ஆசிரியர் முகமெல்லாம் பல்லாகப் புன்னகை செய்தபடி அம்மாவை நோக்கி விரைந்து வந்தார். நான் மெல்ல வகுப்பை நோக்கி நடந்தேன். என் மனதில் ஒரு வெறி!... இதற்கு ஒரு முடிவு கட்டவேணும்... மெல்லத் திரும்பிப் பார்த்தேன். அந்த ஆசிரியரும் அம்மாவும் ஏதோ மிகவும் மகிழ்வாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். பின்னர் அவர் வகுப்பை நோக்கிவரவே நானும் வகுப்புக்குள் அவசர மாக நுழைந்து, எனது இடத்தில் அடக்க ஒடுக்கமாக இருந்தேன். ஆசிரியர் வகுப்புக்குள் வந்து ஆங்கிலப் பாடத்தைத் தொடங்கினார். அவர் குரலில் புதிய உற்சாகம் தெரிந்தது. தைப்பொங்கல் என்ற தலைப் பைப் பற்றி அவர் ஆங்கிலத்தில் சொல்ல என் பார்வை எனக்கு முன்னே வெறுமையாக இருந்த கதிரையில் தாவியது. என் மனம் பொங்கியெழ நான் சோகக் கடலில் விழுந்தேன்..

சென்ற வாரம் அந்தக் கதிரையில் வழக்கமாக



மனோன்மணி சண்முகதாஸ்

வந்து இருக்கும் வேணி வரவில்லை. எல்லோரும் அவள் வரவில்லை என்று கவலைப்பட்டோம். ஆனால் ஆசிரியர் மட்டும் அதைப்பற்றி ஒன்றுமே பேசவில்லை. வகுப்பை வழக்கம் போல நடத்திக் கொண்டிருந்தார். கரும்பலகையில் எழுதிய அவருடைய எழுத்துக்கள் என் கண்ணுக்குத் தெரியவில்லை. நான் வேணியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். ஆசிரியர் எனக்குக் கிட்ட வந்து செல்வி! என்ன செய்கிறாய் என்று ஆங்கிலத்தில் கேட்டபோது நான் ஒன்றும் பேசவில்லை. அவருக்குக் கோபம் வந்தது. மீண்டும் தன்னுடைய ஆங்கில மொழியில் ஏதோ காரமாகக் கேட்டார். நான் அவரிடம் ஒன்றும் பேசவில்லை. அவருக்கு என்னுடைய மௌனம் சீற்றம் தர, என்னை வெளியே போகும்படி கத்தினார்! நான் பேசாமல் வெளியே வந்து நின்றேன். எல்லோரும் என்னைப் பார்த்தார்கள். நான் விறைப்பாகவே வெளியே நின்றேன்.

அப்போது தான் வேணியின் மாமா சைக்கிளில் வந்தார். வேணி கடலோடு போய்விட்ட செய்தியை ஆசிரியரிடம் சொன்னார். அவர் அந்தச் செய்தியை தமிழில் சொன்னதால் அது எங்களுடைய காதில் தெளிவாக விழுந்தது. எல்லோரும் எதுவும் விளங்காமல் நின்றோம். ஆசிரியரோ எந்த விதமான கவலையும் இன்றி வகுப்பைத் தொடர்ந்து நடத்தினார். நான் வெளியே நின்று அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். ஆங்கில மோகம் அவரை நன்கு அடிமைப்படுத்தியிருந்தது...! ரியூசன் நிலைய உரிமையாளர் ஓடி வந்தார். என்ன சேர்...! நீங்கள். இன்னும் படிப்பிச்சுக் கொண்டிருக்கிறீர்கள். பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்புங்கோ!.. அவர் அப்படிச் சொன்னது எனக்கு ஒரு மன ஆறுதலாக இருந்தது. நானும் வகுப்புக்குள் நுழைந்து, எனது புத்தகப்பையை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டு நடக்கத் தொடங்கினேன்.

எனக்கு அருகே ஆசிரியரின் சைக்கிள் வந்து நின்றது செல்வி ஏறு! நான் வீட்டிலை கொண்டு போய்விடுறன். அவர் ஆங்கிலத்தில் சொன்னார். நான் என்ன சொல்லுவது என்று சற்றுத் தயங்கினேன்.. பிறகு சொன்னேன் நான் நடந்து போவன். அவருக்கு அது முகத்தில் அடிச்சது போலிருந்தது. எனக்கு – அவருக்கு ஏதோ பெரிய தண்டனை கொடுத்தது போல இருந்தது. அதற்குள் அம்மா சைக்கிளில் வந்துவிட்டாள். ஆசிரியருக்கு அவளைக் கண்டதும் முகம் மலர்ந்து. வெள்ளம் வரமுன் நாங்கள் வீட்டை போவம்! என்று அம்மாவிடம் சொன்னார்... அம்மாவும் புன்னைகத்தாள். நான் அப்போதே தீர்மானம் எடுத்தேன். இனிமேல் ரியூசனுக்கு வருவதில்லை!.

அடுத்தநாள் பத்திரிகையில் வேணியின் பெயர் கடலலை கொண்டு சென்றோர் பெயர்ப்பட்டியலில் கிடந்தது. நான் பார்த்துவிட்டு அம்மாவிடம் காட்டினேன். அம்மா அதைப் பெரிதாக எடுக்கவில்லை. அன்று மாலை ஆசிரியர் எங்கள் வீட்டிற்கு வந்தார். அம்மா அவருக்கு உபசரிப்புகள் செய்தாள். என்னுடைய படிப்பைப்பற்றி ஏதேதோ திட்டம் போட்டார்கள். அவர் அடுத்த கிழமை வகுப்புத் தொடங்கும். கட்டாயம் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு வாங்கோ! என்று சொல்லிவிட்டுப் போனார். நான் வெளிநாட்டில் இருக்கும் அப்பாவை நினைத்துக் கொண்டேன்.! தொலைபேசி மணியடிச்சுது! நான் ஓடிப்போய் எடுத்தன். அப்பாதான்! ... செல்வி உன்ரை கடிதம் கிடைச்சுது. நீயும் வேணியும் எடுத்த படம் நல்லவடிவாக இருக்கு! என்னால் தாங்க முடியவில்ல. அப்பா!... வேணியை.... கடல் கொண்டு போட்டுதப்பா!.. என்ன வேணியுமா? அப்பாவின் குரலில் இருந்த பதட்டமும், சோகமும்.... அவரிடம் நேரில் பேசவேண்டும் போலிருந்தது. என் மனதை அறிந்தவர், செல்வி கவலைப்படாதே ! இது இறைவன் செயல்!... நாமென்ன செய்ய முடியும்!... அவர் குரலில் தழதழப்பு... என் கண்ணில் நீர் பெருகியது... சரி நான் பிறகு போன் எடுக்கிறேன். அப்பா தொடர்பைத் துண்டித்துவிட்டார். நான் செயலற்று நின்றேன். வெளியே வந்தபோது ஆசிரியரும், அம்மாவும் ஏதோ சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

செல்வி! ... ஆசிரியர் அழைப்பு என் செவியில் விழுந்தது. நான் திடுக்கிட்டுப் போனேன். பாடத்தைக் கவனி!... நான் மனத்துள் கறுவினேன். இப்ப ஒரு நில நடுக்கம் வரவேணும்! ... என் வக்கிரமான உணர்வு வேலை செய்ய புத்தகத்தை வீசியெறிந்து விட்டு வெளியே ஓடி வந்து விம்மி விம்மி அழுதேன்...!

கடவுளே ! இதுகளை...! என்ன செய்யப் போகிறாய்!.

# மாரடைப்பு

இன்று உலகிலேயே பெரும்பாலானோரது இறப்புக்கு மூலகாரணமாக இருப்பது மாரடைப்பு. மாரடைப்பு ஏன் ஏற்படுகிறது? அதற்கு 95 சதவீதம் நமது உணவுப் பழக்கம்தான் காரணம். எமது உடலில் தேங்கும் மேலதிக கொழுப்புகள் இதயத்துக்குக் குருதியை வழங்கும் முடியுரு நாடியின் சுவர்களில் படிவடைகிறது. இதனால் நாடியின் சுவர் அழுத்தமற்றதாக மாறுகின்றது.

அழுத்தமற்ற சுவரினூடாகத் தொடர்ச்சியற்ற குருதிப்பாய்ச்சல் ஏற்படுகிறது. இதனால் இதயத்துக்குப் போதியளவு குருதி விநியோகம் கிடைக்காமையால் இதயத்துடிப்பு வீதம் மாறுகிறது. அல்லது தடைப்படுகிறது. நாற்பது, நாற்பத்தைந்து வயதுக்குப்பின்னரே இவ்வாறான நோய்களெல்லாம் வரும் என்பது தவறான கருத்தாகும்.,

சிறுவயதிலிருந்தே நாம் உண்ணும் கொழுப்புச் சத்து நிறைந்த உணவே எமது உடலில் தேங்கி இவ்வாறான வினாவை ஏற்படுத்துகின்றது என்று அமெரிக்க இதய சத்திரசிகிச்சை நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். ஒழுங்கான உணவுப் பழக்கத்தையும், உடற்பயிற்சி முறையையும் கடைப்பிடிப்பதன்மூலம் எதிர்காலத்தில் இவ்வாறான நோய்களில் இருந்து தப்பிக்கொள்ளலாம்.

இதற்காக அமெரிக்க சிறுவர்களுக்கு வாழ்க்கை முறைப்பயிற்சி ஒன்றைச் சிறுவயதிலிருந்தே கடைப்பிடித்து வருகின்றார்கள். அதையே நாமும் ஏன் செய்யக்கூடாது?

குழந்தைகள் அடம்பிடித்தவுடன் சொக்லேட்டையும், ஐஸ்கிறீமையும் வாங்கிக் கொடுப்பதற்குப் பதிலாகப் பழங்களை உண்ணக் கொடுக்கலாம்தானே.

அதிகமாக இறைச்சிகளை உண்பதைத் தவிர்த்து, மீன் உண்ணப் பழக்கலாம்.

இதன்மூலம் அவர்களைச் சிறுவயதிலிருந்தே ஓர் உணவுக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வோம்.

அமெரிக்காவில் வாழ்க்கைமுறைப் பயிற்சியின் மூலம் பாடசாலைகளில் உணவு வகைகளைப் பற்றியும், அதனால் பெறக்கூடிய உயிர்ச் சத்துக்கள் பற்றியும் எந்தநேரமும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றன.

அந்தப் பயிற்சியில் நடைமுறைப்படுத்தப்படுவர்கள் - பெற்றோர்கள், சிறுவர்களுக்குச் சத்தான உணவுகளைப் பற்றி எடுத்துக்கூற வேண்டும்.

அதிகளவு காய்கறிகளை உண்ணுவதற்குப் பழக்கவேண்டும். 2 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு ஆடை நீக்கப்பட்ட பால் கொடுத்தல், உடற்பயிற்சிகளை ஊக்குவித்தல், மூன்றுவயதுக்குப் பிறகு இரத்த அழுத்தத்தை வைத்தியரின் மூலம், வருடத்துக்கு ஒரு தடவை பரிசோதித்துக் கொள்ளல் மற்றும் பெற்றோரே சிறுவர்களுக்கான சிறந்த முன் மாதிரிகளாக நடந்துகொள்ளல் என்பன தற்போது அமெரிக்காவில் கடைப்பிடிக்கும் பழக்கங்களாகும்.

# சந்தோஷத்துக்காக நேரம் ஒதுக்குங்கள்



வேலைக்குப் போகும் பல பெண்களின் மனக்குறை – குடும்பத்தினருடன், குழந்தைகளுடன், உறவினருடன், நண்பர்களுடன் பொழுதைக் கழிப்பதற்குக்கூட நேரம் கிடைப்பதில்லை. சமையலை இலகுவாக்கக் கூடிய எத்தனையோ மின்சார உபகரணங்கள் மற்றும் போக்குவரத்தை இலகுவாக்குவதற்குப் போக்குவரத்துச் சாதனங்கள் என்று வசதிகள் இருந்தாலும், நேரம் மட்டும் கிடைப்பதில்லை என்பதாகும்.

ஒரு வேலை முடிய இன்னொரு வேலை. இப்படி தொடரும் வேலைகளுடனேயே நாட்கள்போகிறது. இதற்கு என்ன காரணம்? இதனை எவ்வாறு எதிர்கொள்ளவது? முதலில் எந்த வேலைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். அத்துடன் வாழ்க்கையை எளிமையாக்கிக் கொள்ள வேண்டும். இதனை அடைவதற்கு நாளாந்த நடவடிக்கைகளின் நேரங்களை ஒழுங்குபடுத்தி, சந்தோசத்துக்காகவும் நேரம் ஒதுக்குவதற்கு நாம் சில வழிமுறைகளைத் தெரிந்து கொள்வோம். இதனை வாரம் ஒருவழிமுறையாகத் தெரிந்து கொள்வோம் .

## முறையான ஆரம்பம்

எந்த விடயத்திற்குமே முறையான அல்லது சரியான ஆரம்பம் தேவை. ஆரம்பம் சரியானதாக அமைந்து விட்டால், அந்த விடயம் இலகுவாகிவிடுகிறது . எம்மில் மிகச் சிலரே ஆரம்பம் பிழைத்தாலும் அதனை எதிர்கொண்டு எமக்குச் சரியானதாக அமைத்துக் கொள்கிறோம். ஆனால் பெரும்பாலானவர்கள் சோர்ந்து விடுகிறார்கள். எனவே இவ்வாறானவர்கள் தமது இயல்பைப் புரிந்து கொண்டு காலை வேளையைச் சரியான ஆரம்பத்துடன் தொடங்க வேண்டும்.

காலையில் கணவர் குழந்தைகளை அலுவலகத்துக்கும், பாடசாலைக்கும் அனுப்பி நாமும் அவசரமாக வெளிக்கிட வேண்டிய நேரத்தில், குழந்தைகள் புத்தகத்தைக் காணவில்லை சீருடை சரியாக இல்லை என்றும், கணவரோ தன்னுடைய ஆவணத்தைக் காணவில்லை என்றும், ஏதாவது குறை சொல்லி வெளிக்கிடும் நேரத்தில் டென்ஷனை ஏற்படுத்தி மன நிலையையே மாற்றிவிடுகிறார்கள். இதனால் அன்று முழுவதும் உற்சாகமே இல்லாமல் இருக்க வேண்டி ஏற்படுகிறது. இந்தச் சூழ்நிலையைக் கொஞ்சம் முயன்றால், மிகவும் இனிமையாக மாற்றமுடியும்.

முதல் நாள் இரவே, படுக்கப்போவதற்கு முன்னர் – குழந்தைகளுக்குத் தேவையான புத்தகங்கள், உடுப்புகள், சப்பாத்து, பென்சில் என்று அனைத்தும் சரியாக இருக்கின்றதா என்பதைச் சரிபார்த்து விட்டால் போதும். அதேபோல் எமக்குத் தேவையானவற்றையும் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். திறப்புக்களை எப்பொழுதும் ஒரே இடத்திலேயே வைக்கவேண்டும். ஒரு வருடத்தில் குறைந்தது – 16 மணி நேரங்களை நாம் தொலைந்த திறப்புகளைத் தேடுவதற்காகவே செலவிடுவதாக ஓர் ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

ஆகவே காலைநேர பரபரப்பு இல்லாமல் செய்வதற்கு, இந்தச் சிறு முயற்சியே போதுமானதாகும். முறையான ஆரம்பமே உங்களைச் சந்தோஷப்படுத்தும்.

# ஜேர்மனியிலுள்ள பீலபெல்ட் நகரம் முல்லைத்தீவை இணை நகரமாக்கியது

ஜேர்மனியிலுள்ள பீலபெல்ட் நகரம் முல்லைத்தீவு மாவட்டத்தை கடந்த வியாழக்கிழமை முதல் தனது இணை நகரமாக இணைத்துள்ளதாக அறிவித்துள்ளது.

பீலபெல்ட் நகரபிதா எபகார்ட் டாவிட் இந்தத் தகவலை பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவித்தார்.

சிவசோதி வரதராஜா ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுமதியைப் பெற்று, பீல பெல்ட் நகர சபையில் அங்கம் வகிக்கும் மற்றைய கட்சித் தலைவர்கள், சமூகநல நிறுவனங்கள் ஆகியவற்றின் முழு ஆதரவோடும் இவ்வறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு உடனடி நிவாரணங்களை உதவி நிறுவனங்கள் புரிந்தாலும், பீலபெல்ட் நகரசபை பீலபெல்ட் மக்களின் உதவியோடு இடம் பெயர்ந்த மக்களை அவர்களது வழமையான வாழ்க்கை நிலைக்கு கொண்டு வருவதோடு, நீண்டகால அடிப்படையில் முல்லைத்தவு மாவட்டத்தை மீண்டும் கட்டியெழுப்புமென பீலபெல்ட் நகர பிதா எபகார்ட் டாவிட் பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்தார்.

இவ்வறிவித்தலை, இலங்கைக்கு பயணமாகும் ஜேர்மனியன் வெளிநாட்டமைச்சர் ஜொஷ் ஹா விஷர் மின்னஞ்சல் ஊடாக அறிவிப்பு செய்துள்ளதாக கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் தெரிவித்தார்.

நாளை பீலபெல்ட் நகரில் ஜான் பிளட்ஸில் காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை நடைபெறவுள்ள முல்லைத்தீவில் பாதிக்கப்பட்டோருக்கான நிதி சேகரிப்பில் பீலபெல்ட் நகரபிதா எபகார்ட் டாவிட்டும் மற்றைய கட்சித் தலைவர்களும் பங்குகொள்ளவுள்ளனர்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

ஜனவரி 14

1701 :- முதன் முதல் கடற்படைப் பயிற்சிக் கல்லூரி மொஸ்கோவில் ஆரம்பிக்கப்பட்டது.

1875:- மூன்றாவது நபர் விபத்துக் காப்புறுதி முதன்முதலாக இன்று லண்டனில் அறிமுகப்படுத்தப்பட்டது.

1923 :- நியூயோர்க்கில் ஒலிபரப்பப்பட்ட வானொலி நிகழ்ச்சிகள் முதன் முதலாக இங்கிலாந்தில் தெளிவாக கேட்ட தினம் இன்றாகும்.

1990 :- இன்று கொழும்பில் கூடிய கொமன் வெல்த் நாடுகளது கூட்டத்தில் தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளது பொருளாதார வளர்ச்சிக்காக பரஸ்பர உதவித் திட்டம் ஒன்றை வரைவதற்கு வற்புறுத்தப்பட்டது.

1969 :- ரஷ்யா சோயூஸ் 4 என்ற விண்ணூர்தியை இன்று அனுப்பியது. இதில் 'விளாடிமிர் ஷட்டலோவ்' என்ற விண்வெளி வீரர் பயணம் செய்தார்.

2004 :- கொழும்பு புறநகர்ப் பகுதியில் கத்தோலிக்க தேவாலயம் சிங்கள மக்களால் தீக்கிரையாக்கப்பட்டது.

தொகுப்பு - சந்துரு




## சங்க உறுப்பினர் தெரிவு

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி கரைச்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபை புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் சங்க மண்டபத்தில் விசேட ஆணையாளர் தலைமையில் இடம்பெற்றது.

இதில் - தலைவராக முத்துக்குமாருவும், உபதலைவராக பெ.இராமச்சந்திரனும், செயலாளராக கங்காதரனும், இயக்குநர் சபை உறுப்பினர்களாக - க.தர்மசூரியர், சொ.இராசேந்திரம், ந.இராசேஸ்வரன், க.தனலட்சுமி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனனர்.

(09)

## ஆங்கில வகுப்புகள் ஆரம்பம்

(வவுனியா)

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் வியாபாரக் கற்கைகள் பீடத்தில் தமது கற்கைநெறிகளை 2003,2004 ஆம் ஆண்டுகளில் பூர்த்தி செயத மாணவர்களுக்கான பட்டப்படிபபின் பொருத்தப்பாட்டினையும், தரத்தினையும் முன்னேற்றுவதற்காக - உலகவங்கி திட்டத்தால் ஆங்கில வகுப்புகள் எதிாவரும் 17 ஆம் திகதி ஆரம்பமாக இருப்பதாக, வவுனியா வளாக அதிபா் திருமதி மகேஸ்வரன் தெரிவித்தார். இந்த கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரும் சமுகம்தர வேண்டும் எனவும், வவுனியா வளாகத்தில் பயில விரும்பும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் இந்தக் கற்கை நெறிகளை பயில முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத்துக்கு கொள்கலன்கள் தேவை

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சேதமடைந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகள் அமைந்துள்ள பகுதி மக்களுக்கு உணவுப் பொருட்களை சேமித்து வைத்து வழங்குவதற்கு கொள்கலன்களைப் பெற்றுத்தருமாறு வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தினா் யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுனாமி கடல் அனர்த்தத்தின் காரணமாக 10 பல நோக்குக் கூட்டுறவுக் சங்கக் கிளைகள் இந்தப் பிரதேசத்தில் முற்றாகச் சேதமடைந்தமை குறிப பிடத்தக்கது.

(122)


## மருதங்கேணி கூட்டுறவு சங்கத்துக்கு ஒரு கோடி 10 லட்சம் ரூபா நட்டம்

சுனாமி தாக்கத்தால் வடமராட்சி கிழக்கு - மருதங்கேணிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு சுமார் ஒரு கோடி 10 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுளளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இந்தப் பிரதேசத்தின் கடற்கரையை அண்மித்துக் காணப்பட்ட 10 கூட்டுறவுச் சங்க கிளைகளும், முற்றாகச் சேதமடைந்து அவற்றில் காணபபட்ட பொருட்கள் கடல் அலையால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்த சேத விபரங்களைப் பற்றி திருகோணமலையில் உள்ள கூட்டுறவு ஆணையாள ருக்கும், யாழ். மாவட்ட அரச அதிபருக்கும் மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

(122)



ஐயன்குளம் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் திலீபன் மருத்துவமனையைப் படத்தில் காணலாம்.



பாண்டியன்குளஞ் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுவரும் நூலகத்தை படத்தில் காணலாம்.

## வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டின்கீழ் வவுனியா மாவட்டத்தில் புனரமைப்பு

வவுனியா நகர சபையின் இவ்வாண்டுக்குரிய வரவு - செலவுத்திட்டத்தின் பிரகாரம், உத்தேச வருமானம் எட்டு கோடியே 98 லட்சத்து 32 ஆயிரம் ரூபாவாகவும் -

உத்தேச செலவீனம் - எட்டு கோடியே 98 இலட்சத்து 31 ஆயிரத்து 500 ரூபாய் ஆகவும் மதிப்பிடப்பட்டுள்ளது என வவுனியா நகர சபையின் செயலாளர் மு.செ.சரவணபவ தெரிவித்துள்ளார்.

வதங்களும் - வரிகளும் (சோலை வரியாக) 45 லட்சமும், களியாட்ட வரி (படமாளிகை மூலம்) எட்டு லட்சமும். நில வாடகை - மூலம் 94 லட்சத்து 30 ஆயிரமும், உரிமம் (லைசன்ஸ்) மூலம் 12 லட்சத்து 30 ஆயிரமும், சேவைகளுக்கான கட்டணம் 6 இலட்சத்து பத்தொன் பதினாயிரமும், விறாந்துச் செலவுகள் (நீதிமன்ற குற்றப் பணம்) 12 லட்சத்து 49 ஆயிரமும், ஏனைய வருமானம் 26 லட்சத்து 9 ஆயிரமும், அரசிறைமானியம் 228 லடசத்து 95 ஆயிரமும், கடை காரியாலய கட்டடத் தொகுதி வருமானம் 365 லட்சமும், கடன்கள் 100 லட்சமும் என இந்த ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

வவுனியா நகர சபை எல்லைக்குள் இந்த ஆண்டு பதினொரு வீதிகள் கல்லிட்டு தாரிடப்படவுள்ளது எனவும் இதற்காக-

சபை நிதியிலிருந்து 57 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் நகர சபையின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

மன்னார் வீதி 6 ஆம் ஒழுங்கை, கண்டி வீதி 3 ஆம் குறுக்குத்தெரு வீதியின் ஒரு பகுதி, வைரவ புளியங்குளம் 1 ஆம் ஒழுங்கை, 2 ஆம் ஒழுங்கை, 3 ஆம் ஒழுங்கை 4 ஆம் ஒழுங்கை. குருமன்காடு முதலாம் ஒழுங்கையின் ஒரு பகுதி, சிந்தாமணப் பிள்ளையார் கோவில் வீதி, கற்குளி வீதியில் நான்கு கல்வெட்டு அலைகரை வீதி. சர்வதேச செஞ்சிலுவைச்சங்க வீதி என்பனவே இவ்வாறு புனரமைப்புச் செய்யபடவுள்ளன.

மேலும் நகரசபையின் நிதியிலிருந்து கிரவல் இடுவதற்கு ஆறு வீதிகள் தெரிவு செய்யப்படடுள்ளன. இதற்கு 15 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பட்டகாடு வீதி, பிள்ளையார் கோவில் 2 ஆம் ஒழுங்கை, கலைமகள் சனசமூக நிலைய வீதி, வைஎம். சிஏ ஒழுங்கை. மன்னார்வீதி டிஆர்ஓ ஒழுங்கை, பெரியார்குளம் 5 ஆம் ஒழுங்கை ஆகிய வீதிகளே கிரவல் இடுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க மாகாண சபையின் விசேட நிதியைக்கொண்டு மேலும் எட்டு வீதிகள் கிரவல் இடப்படவுள்ளன. இதற்கு 31 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

தேக்கம்காடு 16 ஆம் ஒழுங்கை, சிந்தாமணிப் பிள்ளையார்கோவில் ஒழுங்கை, தெற்கிலுப்பைக்குளம் வீதி, பட்டகாடு 2 ஆம் ஒழுங்கை, வைரவர் கோவில் 8 ஆம் ஒழுங்கை, மன்னார் வீதி 5 ஆம் ஒழுங்கை, பூநதோட்டம் 3 ஆம், 4 ஆம் ஒழுங்கைகள்,அலைகரை வீதி என்பன இதில் அடங்கும்

வவுனியா நகர வடிகால் அமைப்பு திட்டத்தின் கீழ் - 2 ஆம் குறுக்கு வீதி மதகு, கந்தசுவாமிகோவில் வீதி, வவுனியா மகாவித்தியாலயம், பஸ்நிலையம் பகுதியில் கழிவு நீர் வழிந்தோடக் கூடிய வகையில் செயற்படுத்த 24 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சதொசவுக்கு முன்னால் - மரக கறி சந்தை புனர்நிர்மாணத்துக்கு 15 லட்சமும் மீன் சந்தை புனரமைப்புக்கு 5 லட்சமும் சபை நிதியில் இவ்வாண்டு ஒதுக்கப்பட்டுள்ளது

பூந்தோட்டம் மயானப் பகுதியல் கொட்டகை மறைப்பு மதில அமைக்க 5 லட்சம் ரூபாவும், தச்சநாதன்குளம் சுடலை வீதிககு கிரவல் இட இரண்டு லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது

பஸ் நிலைய மலசல கூடம் அமைக்க 20 லட்சம் ரூபாவும், பூநதோட்டம் பூங்கா அபிவிருத்திக்கு 4 லட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என நகர சபை அதிகாரி ஒருவர் தெரிவிததார்.

## நிகொட் அலுவலகம் பழைய இடத்தில்

சுனாமி அனர்த்தத்தால் இயங்காதிருந்த முல்லைத்தீவு மாவடட நிகொட் அலுவலகம் மீண்டும் பழைய இடத்தில் இயங்கி வருகிறது.

எனவே, அனைத்து பணியாளர்களையும் கடமைக்கு வருமாறு நிகொட் நிறுவன முல்லைத்தீவு மாவட்டப் பணிப்பாளர் இரகுநாத பிள்ளை தெரிவித்துள்ளார்.

## வட்டக்கச்சி தேசிய எழுச்சிப் பேரவையின் இந்த ஆண்டுக்கான நிர்வாகக்குழு தெரிவு

(கிளிநொச்சி)

வட்டக்கச்சிப் பிரதேச தேசய எழுச்சிப் பேரவையின் 2005 ஆம் ஆண்டிற்கான நிர்வாகத் தெரிவும், செயல்திட்டம் பற்றிய கலந்துரையாடலும் கடந்த திங்கட்கிழமை தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் ச.பொன்னுத்துரை தலைமையில் வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வட்டக்கச்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன், மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர் திருமாறன், வட்டக்கச்சி தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் கிங்ஸ்லிதாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அடுத்து நிர்வாக உறுப்பினர் தெரிவு இடம்பெற்றது. செயலாளராக- ச.பொனனுத்துரை, உப செயலாளராக- க.தர்மசூரியர், பொருளாளராக- சி.சந்திரசேகரனும், உறுப்பினர்களாக, செ.ரூபசிங்கம், பொ. பத்மநாதன், ச. பாஸ்கரன், இ.தங்கேஸ்வரி, வை. யோகரத்தினம், ப.அரிச்சந்திரன், மா.மகேஸ்வரன், மு.நாகராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது*
*ஊதியம் இல்லை உயிர்க்கு*

திருக்குறள்

# நமது நோக்கு

## வெளிநாட்டு நிதி உதவிகள் மக்களுக்கா? அரசுக்கா?

'கெட்டிக்காரன் புளுகு எட்டே நாள் தான்' என்று ஒரு முதுமொழியுண்டு. அதன் அர்த்தம் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசின் நடவடிக்கைகளின் மூலம் நிதர்சனமாகியுள்ளது.

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் இலங்கை மக்களுக்கு பேரிழப்புக்களையும், பேரழிவுகளையும் ஏற்படுத்தியதுடன், எந்தவகையிலும் இப்போதைக்கு மீளவே முடியாத வரலாற்றுத் துயரையும் ஏற்படுத்தியுள்ள நிலையில், இலங்கை அரசுக்கு அது எதிர்பாராத அதிஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ளதென்றே கூறவேண்டும்.

சுனாமி ஏற்படுத்திய அழிவுகளின் கொடூரத்தன்மையால் அதிர்ந்து போய்நிற்கும் மனிதநேயமிக்க சர்வதேச சமூகம் இலங்கைக்கு வரலாறுகாணாத அளவுக்கு உதவி செய்ய முன்வந்துள்ளதையும், பாதிக்கப்பட்ட மக்களின் உடனடி அத்தியவசியத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய நிவாரணப் பணிகளுக்குரிய உணவு, உடை, மருந்து வகைகள் போன்ற அனைத்தையும், ஆளணி உதவிகளையும், மட்டுமல்லாது புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்குத் தேவையான பலநூறு மில்லியன் டொலர் நிதியுதவியை அள்ளிக் கொடுத்துவருவதையும் அன்றாடச் செய்திகள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

அன்றாடம் நிவாரணப் பொருட்களை ஏற்றிவரும் விமானங்களில் இருந்தும், கப்பல்களிலிருந்தும் இறக்கி வைக்கப்படும் நிவாரண உதவிப்பொருட்களின் அளவு களஞ்சியப்படுத்தி வைக்கக்கூட இடமில்லாத அளவுக்கு அபரிமிதமாகவுள்ள அதேவேளையில், அவற்றை சுனாமியால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு உரிய முறையில் விநியோக்கிக்கப்படவில்லை என்றும், அவற்றினை அரசும் - அதனை விநியோக்கிப்பதாகக் கூறப்படும் ஜனாதிபதியால் நிவாரணப் பணிகளை பொறுப்புக் கொடுக்கப்பட்ட படைதரப்பும் உண்மையில் எந்தவிதமான பாதிப்புக்களுக்கும் உட்படாத பகுதிகளுக்கும் அவற்றை அனுப்பிவருவதாகவும் குற்றச்சாட்டுகள் பெருமளவில் எழத் தொடங்கியுமுள்ளன.

அரசு இவற்றை வெளிப்படையாக மறுப்பதுடன், நிவாரணப் பணிகள் விடயத்தில் தாங்கள் எந்தவித பாரபட்சமும் காட்டவில்லை எனவும், எல்லோருக்கும் வேண்டிய நிவாரணப் பொருட்கள் முறையாகப் பங்கிட்டளித்து வருவதாகவும் பிரசாரம் செய்து வருகிறது. எனினும், உண்மையில் நிலைமை அவ்வாறில்லை என்பதை பாதிக்கப்பட்டோர் புகலிடம் தேடியுள்ள நலன்புரி நிலையங்களையும் ஏனைய இடங்களையும் நேரில் சென்று பார்வையிட்டு உண்மைநிலையை அறிய முற்படுவோரால் சுலபமாகவே புரிந்து கொள்ளமுடியும்.

அதிலும் குறிப்பாக சுனாமிப் பேரலைகளால் மிகவும் மோசமாகவும் அதிகளவிலும் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு சர்வதேசம் அள்ளிக் கொடுப்பதில் ஒரு சிறு பகுதியைக் கூட கிள்ளிக் கொடுக்க மனமின்றி அரசு எவ்வாறு அந்த மக்களை புறக்கணிக்கிறது என்பதை வடக்கு - கிழக்கு நலன்புரி நிலையங்களை நேரில் பார்ப்போர் அறிந்து கொள்ளமுடியும்.

ஏற்கெனவே வடக்கு - கிழக்கில் இராணுவஆட்சிப்பிரதேசத்தில் அமைந்துள்ள நலன்புரிநிலையங்களை ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய ஆயதபாணிகளாகச் சென்று பொறுப்பேற்று வரும் படைத்தரப்பினரின் அணுகுமுறைகளால் அச்சப்பட்டு அந்த நிலையங்களில் இருந்து வெளியேறும் பாதிப்புற்ற மக்கள் தொகை அதிகரித்து வரும் அதேசமயம், அந்நிலையங்களில் எஞ்சியிருக்கும் சொற்பதொகை ஏதிலியர்களுக்கு இதுவரை கிடைத்துவந்த நிவாரண உதவிகளும் ஏனைய ஆதரவுகளும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதேசமயம் வடக்கு - கிழக்குப்பகுதிகளில் ஏற்பட்ட ஆழிப் பேரலை அனர்த்தஅழிவுகளை நேரில் சென்று பார்வையிட வெளிநாட்டுப்பிரதிநிதிகளுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் அனுமதியை வழங்க மறுப்பதன்மூலம் நாட்டுமக்கள் அனைவரையும் சரிசமமாக நடத்தவேண்டிய பண்பிலிருந்து அரசாங்கம் விலகிநிற்பதாக மனிதஉரிமை ஆணைக்குழுவும் அரசாங்கத்தைக கடுமையாகக் கண்டித்துள்ளமையானது மேலே குறிப்பிட்ட விடயங்களை உறுதிசெய்வதாகவுள்ளது.

இது ஒரு புறமிருக்க - சுனாமியால் பாதிப்புற்ற மக்களின் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்கும், ஏனைய அவர்களின் தேவைகளை நிறைவுசெய்வதற்குமென வந்து குவியும் மில்லியன் கணக்கிலான நிதி உதவிகளை அரசு அந்த மக்களுக்கு உரியமுறையில் செலவிடவில்லை என்ற பாரிய குற்றச்சாட்டு சுனாமிஅனர்த்தம் நிகழ்ந்து வெறும் இருபது நாட்களுக்குள்ளேயே அரசின் மீது விழுந்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை புள்ளிவிபரப் பட்டியலுடன் வெளிக் கொணர்ந்தவர்கள் வேறுயாருமல்ல பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியினர்தான். அமெரிக்கா இதுவரை வழங்கியுள்ள 700 மில்லியன் அமெரிக்க டொலர்களில் 200 மில்லியன் டொல்களை மட்டுமே நிவாரணப் பணிகளுக்கென அரசு ஒதுக்கியுள்ளதாகவும் ஏனையவற்றை சுனாமிபாதிக்காத பகுதிகளுக்குச் செலவிட அரசு திட்டமிட்டுள்ளதாகவும் ஐக்கிய தேசியக கட்சி குற்றஞ்சாட்டியுள்ளதை நிவாரணமாகவும், நிதியாகவும் ஏனைய உதவிகளாகவும் அள்ளிக்கொடுத்து வரும் சர்வதேச நாடுகள் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியம்.

அரசாங்கம் நிவாரணப்பணிகள் தொடர்பாக பெரியளவில பிரசாரம் செய்தாலும் - செயலளவில் சீரான திட்டத்துடன் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை என்று வெளிவரும் குற்றச்சாட்டுகள் குறித்து அரசு இதுவரை மௌனம் சாதித்தே வருகிறது.

இதேசமயம், சுனாமி நிதியுதவிகளை அது பயன்படுத்திவரும் முறையைக் கண்காணிக்க சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள், அரசு, அரசசார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்கள், மனித உரிமை அமைப்புகளின் கண்காணிப்பாளர்கள், சர்வகட்சித் தலைவர்கள் அடங்கிய விசேட செயலணிக்குழு ஒன்று அமைப்பது இக்கட்டத்தில் அவசியம் என துறைசார் நிபுணர்கள் தெரிவித்திருப்பதைக் கருத்தில் கொள்வது அவசியமாகும்.

# நாடும் நடப்பும்



## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுப்பவர்கள்

சென்னை "தி இந்து" ஆங்கில நாளிதழுக்கு உலகில் நல்ல மதிப்பும், கௌரவமுமிருக்கிறது. ஆதாரமான செய்திகளையே வெளியிடும் பத்திரிகை இது என்று பெயர்பெற்றது.

தலையங்கங்களை பொறுப்புடன் தகுந்த ஆதாரத்துடன் எழுதுமென்றும் இப்பத்திரிகைக்குப் பல்லாண்டுகளுக்கு முன்னர் நல்லபெயர் இருந்துவந்தது.

இந்த நல்ல பெயரை சமீபகாலமாக இலங்கைத் தமிழ்மக்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் "கற்றுக் குட்டித் தனமாக" நடந்து கெடுத்துக் கொண்டிருக்கிறது.

கொழும்புடன் கொண்ட சகவாசம் "பூவோடு சேர்ந்த நார் மாதிரியில்லாமல்"எதோடையோ சேர்ந்து எதையோ தின்றமாதிரி 'இந்து'வையும் மாற்றியிருக்கவேண்டும்!

'புலி'கள் விடயத்தில் கொழும்பில் "கரடி"விட்ட ஒலி பரப்புக் கூட்டுத்தாபன செய்திப் பணிப்பாளர் பணிநீக்கம் செய்யப்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

'இந்து' பத்திரிகைக்கு இலங்கையில் ஒரு நிருபர் இருக்கவேண்டும். இவர் அடிக்கடி கிளிநொச்சிக்குப் போய வந்திருக்கிறார். கிளிநொச்சியில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளில் இந்த நிருபரும் கலந்துகொண்டிருக்கிறார்.

'இந்து'வுக்காகவும், 'தி புரொன்ட்லைன்' என்ற அதன் மற்றொரு பிரசுரமான சஞ்சிகைக்காகவும் இந்து நிருபர் விடுதலைப்புலிப் பொறுப்பாளர்கள் பலரையும் பேட்டி கண்டு வெளியிட்டிருக்கிறார்.

இப்படியொரு திறமைவாய்ந்த நிருபரை இலங்கையில் வைத்துக்கொண்டு கொழும்பில் லங்காபுவத்தின் புரட்டுக்களை நம்பி 'இந்து' ஒரு தலையங்கமே இது பற்றி எழுதியிருக்கிறதென்றால் இதன் பின்னணியில் ஏதோ குழறுபடியிருக்கவேண்டும்.

இலங்கையின் சிங்கள பௌத்த மேலாண்மை ஆதிக்கத்தினுடைய் உதவியுடனும், ஒத்துழைப்புடனும் இந்தப் பின்னணிபெரும் சக்தி பெற்றிருக்கிறது.

விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதமாக்கி உலக நாடுகளிலெல்லாம் பயங்கரவாதப் பூச்சாண்டி காட்டியதில் சில ஊடகங்களுக்குப் பெரும் பங்கிருக்கிறது. இந்த மாயையில் இந்துவும் மயங்கி இதுவரை நடந்து கொண்டது போல் இப்பொழுது 'சுனாமி' பேரலையிலும் 'இந்து' மாட்டியிருக்கிறது.

கொழும்பில் கரடிவிட்ட செய்திப் பணிப்பாளர் நாளையே பதவி உயர்வுடன் மற்றொரு அரச ஊடகத்தில் பொறுப்பேற்கக்கூடும், ஆனாலும் பெருமதிப்பிற்குரியதாக உலகில் விளங்கும் 'தி இந்து' பொறுப்பற்ற முறையில் தலையங்கமும் தீட்டியிருக்கிறது என்ற அவப்பெயரை எப்படி நீக்கப்போகிறது?

'லங்கா புவத்' பொறுப்பில்லாமல் விடுதலைப் புலிகள் பற்றி எப்படியும், எதையும் கற்பனைசெய்தும், கனவு கண்டும் எழுதலாம். அவர்களுக்கு சம்பள உயர்வோ, பதவி உயர்வோ கிடைக்கலாம்.

ஆனால் இந்து - 'லங்கா புவத்' அல்ல! இந்து இப்படி எழுதுவதற்கு காரணம் ஏதும் இருக்கலாம்.

காஞ்சி காமகோடிகளுக்குச் சொல்ல வேண்டிய புத்திமதிகளை செயல் வீரர்களாகிய புலிப்போராளிகளுக்குச் சொல்வதற்கு இந்து எப்படித் துணிந்தது?

பார்ப்பான் கீழ்ப்படியாதீர்
சொற்குக் கீழ்ப்படியாதீர்
ஆர்ப்பான் நம் நன்மையிலே
ஆர்வமிக உள்ளவன்போல்
நம்பவேண்டாம்...

என்ற புரட்சிக்கவி பாரதிதாசனின் கவி வரிகளைத் தான் நண்பன் இதற்கு ஆதாரமாகச் சொன்னான்.

கொழும்பிலேயே இந்தச் செய்திப் பணிப்பாளர் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறாரென்றால், இந்துவில் தலையங்கம் எழுதியவருக்கு என்ன தண்டனை கிடைக்க வேண்டும்?

சுனாமிப் பேரலை அழிவினால் நமது நாட்டில் நிலவிய இனவாதம், மொழிவாதம், மதவாதம் எல்லாம் மறைந்து, இலங்கையர் என்ற ஒருமைப்பாடும், ஒற்றுமையும் ஏற்பட்டுவிடும் என்று சில ஊடகங்களும், சில தலைவர்களும் உடனடியாகக் கருத்துத் தெரிவித்திருந்தார்களே, நினைவிருக்கா என்று நண்பனைக் கேட்டேன்.

ஆமாம் என்றான் நண்பன்.

அப்போ இனி இலங்கையில் மக்கள் மத்தியில் எந்த வித பேதமுமிருக்காது. எல்லோரும் ஒற்றுமையாக வாழ முன்வந்துவிட்டார்கள் என்று சொல்லுகிறீரா என்று கேட்டேன்.

இந்தமாதிரி அபிப்பிராயங்களை இந்த அழிவுகளிலிருந்து சொல்வதானால், சுடலை ஞானம் என்று சொல்வார்களே அப்படித்தான் சொல்லவேண்டும் என்றேன் நான்.

சுனாமியோடு, சுடலைகளே இல்லை. முன்பு படைகளின் படையெடுப்பு, இந்திய அமைதிப்படை என்ற இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பு என்றெல்லாம் வந்தவர்கள் கண்டகண்ட இடங்களிலெல்லாம் இடுகாடும், சுடுகாடும் ஏற்படுத்திவைத்தனர்.

இப்போது சுனாமி கரையோரப்பகுதிகளை இடுகாடுகளாகவும், சுடுகாடுகளாகவும் ஆக்கிவைத்திருக்கின்றது

இவையெல்லாம் சமத்துவ இடமாக்கப்பட்டிருப்பது உண்மைதான். ஆனால், மக்கள் மனங்களில் இன்னமும் சமரசம் ஏற்படவில்லையே என்றான் நண்பன்.

மக்கள் மனங்களில் மாற்றம் ஏற்படுவதற்கு இங்குள்ள ஊடகங்கள் விட்டுவைக்கவேண்டுமே என்றேன்.

உண்மைதான். இரண்டு தினங்களுக்கு முன்வந்த காலை ஆங்கிலத் தினசரியொன்றில், ஊடகங்கள் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளவேண்டுமென்று ஆசிரியர் தலையங்கம் எழுதியிருந்தது. ஆனால், அதற்கு எதிர்ப் பக்கத்தில் ஒரு பெரிய கட்டுரை வெளிவந்திருந்தது. ஏதோ ஒரு வெளிநாட்டவரின் பெயரில் இந்தக் கட்டுரை வெளிவந்திருந்தது.

மட்டக்களப்பில் சுனாமி அகதிமுகாம்களிலிருந்து அகதிகளைத் தங்கள் வீடுகளுக்குப் போகும்படி புலிகள் துரத்துகிறார்களென்றும், முகாம்களிலுள்ள குழந்தைகளையும் புலிகள் கடத்திச் செல்கிறார்களென்றும், தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதியில் மக்கள் இருக்கவேண்டுமென்றே அவர்கள் விரும்புகிறார்களென்றும் இந்தக் கட்டுரையில் எழுதபபட்டிருந்தது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கொழும்பில் சிங்கள, ஆங்கில ஊடகங்களும், அரச ஊடகங்களும் செய்துவரும் பிரசாரத்தை வலியுறுத்திக்காட்டும் கட்டுரையாகவே இது அமைந்திருந்தது.

வெளிநாட்டவர் ஒருவருடைய பெயரைப்போட்டு இங்குள்ள வெளிநாட்டுத் தூதரகங்களை முட்டாள்களாக்கும் செயலை இந்தப் பத்திரிகை செய்திருக்கிறது.

சுனாமி அனர்த்தத்தின் பின் உடனடியாக உதவிக்கு வந்து சில நல்லகாரியத்தையும் புலிகள் செய்தார்களென்றும், கடைசியில் சிறிது உண்மையை எழுதித் தாங்கள் நடுநிலையான கண்ணோட்டத்துடன் நடந்துகொள்வதாகக் காட்டியிருக்கிறார்கள் என்றான் நண்பன்.

இலங்கையில் இனவாதப் பூதத்தை ஊடகங்கள் தான் வளர்த்து, அவைகளே இனவாத தேசவிரோதக் கும்பல்களாக மாறியிருக்கின்றன என்றேன்.

இந்த ஊடகங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி அல்லது கடிவாளம் போட்டாலொழிய இலங்கையில் ஒருமைப்பாடோ அமைதியோ ஏற்படுத்தமுடியாது என்றான் நண்பன்.

உண்மைதான் - ஆனால், இது சுலபமாக நடைபெறக்கூடிய சங்கதியா?


சும்மா கிடக்கும் சங்கை ஊதிக்கெடுப்பவர்கள் இலங்கையில் சிங்கள, ஆங்கில ஊடகங்கள்தானே என்றான்.

அப்போ தமிழ் ஊடகங்கள்?

தமிழ் ஊடகங்கள் எந்தக்காலத்திலும் தமது உரிமைகளுக்காகத் துணிந்து குரல்கொடுத்ததும், உரிமைகளைப் பறிக்கும் முயற்சியை எதிர்த்துக் குரல் கொடுத்ததும் குறைவுதான். இவர்களில் பலருக்கும் பயம் அதிகம் என்றான் நண்பன்.

*

# நூல் அகம்




நூலின் பெயர் - பொதுச் சாதாரண தரப் பரீட்சைக்கான வழிகாட்டி நூல்
ஆசிரியர் - பி. உமாசங்கர், பி. கமல்தாசன்
பதிப்பு - பத்தாவதுபதிப்பு 2004 நவம்பர்
விலை - ரூபா 140

கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பு மாணவர்களின் பல்கலைக்கழகத் தெரிவுக்கு முக்கியமாக சித்தியெய்தவேண்டிய பாடமாக 'பொதுச் சாதாரண பரீட்சை' உள்ளது.

விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை என்று எந்தத் துறையாக இருந்தாலும், ஒரு மாணவன் தன்னுடைய பாடப்பிரிவில் அதிவிசேட சித்திகளைப் பெற்றிருந்தாலும், கட்டாயமாக பொதுச்சாதாரண வினாத்தாளில் ஆகக் குறைந்த புள்ளியாகமுப்பதையாவது பெற்றிருக்கவேண்டும். அப்பொழுதுதான் அந்த மாணவனால் இலங்கையின் பல்கலைக்கழக அனுமதியைப் பெற முடியும்.

இந்தப் பரீட்சை குறிப்பிட்ட பாடம் சார்ந்தது அல்ல. பொது அறிவு, பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல், இயைபிக்கும் ஆற்றல், கிரகித்தலும் தொடர்பாடலும் என்ற விடயங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

பொதுச் சாதாரணப் பரீட்சை என்ற இந்த நூல் இவற்றை உள்வாங்கி பத்தாம் பதிப்பாக வெளிவந்துள்ளது.

பொதுவான பரீட்சையுடன் தொடர்புடைய வினா விடையாக இல்லாமல், வினாத்தாள் அமைப்பு அதற்கு வழங்கப்படும் புள்ளிகள் பற்றிய அறிமுக விளக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது மாணவர்களுக்கு பரீட்சை வினாத்தாளில் உள்ளடக்கப்படும் விடயங்கள், அவற்றுக்கான புள்ளிகள் பற்றி அறிந்து, அதற்கேற்ப பரீட்சைக்குத் தம்மைத் தயார்படுத்த வாய்ப்பாக அமைந்துள்ளது.

ஒரு பாடசாலை மாணவனின் கற்றல் செயற்பாடு, குறிப்பிட்ட பாடத்தைக் கற்றல், அதற்குரிய பயிற்சிகளில் ஈடுபடல் என்பவற்றுடன் நின்று விடுவதில்லை. பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை எடுப்பதிலும் தங்கியுள்ளது. அதற்கு வினாத்தாள் பற்றிய அறிமுகம் உதவியாக அமையும், ஒன்றில் தங்களிடமிருந்து எந்த வகையான கேள்விகள் கேட்கப்படும், அவற்றுக்கு வழங்கப்படும் புள்ளிகள் எத்தனை என்பன போன்ற விபரங்களைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

மேலும் ஒவ்வொரு உள்ளடக்க வினாப்பிரிவும் எந்தவிதமான வினாக்களை உள்ளடக்குகின்றன, அவற்றின் விடைகளை எவ்வாறு பெறலாம் என்ற சிறுகுறிப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது கேள்விகளை இலகுவாக விளங்கிக் கொள்வதற்கு உதவிபுரிகிறது.


புத்தகத்தின் கடைசித் தொகுப்பாக தொகுக்கப்பட்டுள்ள பொது அறிவு விடயங்கள் மாணவர்களின் பொது விடயம் சார்ந்த தேடலின் நேரத்தை இலகுவாக்கியுள்ளது.

தற்பொழுது இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. காலத்திற்குக் காலம் திட்டமிடப்படும் பல்கலைக் கழகத் தெரிவு முறை - தமிழ் மாணவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்தினுள் உட்புகும் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

இவ்வாறான தொரு நிலையில் அதுவும் குறிப்பாக தமிழில் இந்தத் துறைசார் நூல்கள் குறைவாக உள்ள நிலையில் - இந்த நூலின் தொடர்ச்சியான பத்தாம் பதிப்பின் வருகை அவசியமானதே. அத்துடன் ஆசிரியர், மாணவர்களின் தேவையை நிறைவு செய்யும் என்பதும் நிதர்சனமே ஆகும்.

இரா. சுபோதினி

---




நூலின் பெயர் - படி
இதழாசிரியர் - திரு.பா. தனபாலன்
வெளியீடு - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

உலக ஆசிரியர்தின வெளியீடாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கடந்த ஐந்து வருடங்களாகப் 'படி' வெளிவந்து கொண்டிருக்கிறது. ஆசிரியர் கல்வி தொடர்பான ஒரு சஞ்சிகை தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் நிலைத்து நின்று வெளி வருவது பாராட்டத்தக்கது. இன்றைய ஆசிரியர் வாண்மை விருத்திக்குத் தேவையான மிகப் பயனுள்ள பல அம்சங்களை உள்ளடக்கிய தாகப் 'படி' வெளிவந்திருக்கிறது.

எதிர்கால உலகம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பவர்கள் ஆசிரியர்களே. ஏனெனில் இன்றைய மாணவர் நாளைய உலகினர். ஆசிரியர் தம் ஆளுமையால், அறநெறிப் போதனையால், வழிகாட்டலால் மாண வர்களைத் தேசப்பற்றுக் கொண்ட நற்பிரஜையாக்குகின்றனர். இவற்றிலிருந்து அவர்கள் விடுபட அவர்களின் வாண்மையை உயர்த்த வேண்டியுள்ளது.

மாணவர்களின் மகிழ்ச்சி கரமான கற்றலுக்கு - மகிழ்ச்சிகரமான வகுப்பறைக் கவின் நிலை இருக்க வேண்டும். இதற்கு ஆசிரியரே அச்சாணி. ஆசிரியருக்குரிய எதிர்பார்ப்புக்கள் அவர் வாழும் சமூக செல்வாக்குக்கு உட்படுகின்றன. சமூக எதிர்பார்ப்பின் அழுத்தங்கள், ஆசிரியரது எதிர்பார்ப்புக்களைத் தீர்மானிப்பதால் ஆசிரியர் என்ற சமூக மனிதருடைய சிந்தனைகள், செயலாற்றுகைகள் உள நிறைவு களுக்கு சமூகம் ஊக்கம் கொடுக்கும் போது, அவர்களுக்குத் தொழில் சார் உள நிறைவு ஏற்படுகின்றது. இந்த நிலையில் ஆசிரியர் மன நிலையில் மாணவர்களுக்கான தனது அர்ப்பணிப்புக்களை அதிகரிக்கச் செய்கிறது என இதழாசிரியர் பா.தனபாலன் தனது உரையில் எழுதி, ஆக்கபூர்வமான ஆசிரியர்களின் வாண்மை விருத் திக்கு உதவும் பல சிறந்த கட்டு ரைகளுடன் படி வெளிவந்திருக்கிறது.

பேராசிரியர் சபா. ஜெயராசா ஆசிரியர் உளவியலின் நோக்கில், கிரகித்தல் என் னும் கற்றல் செயல்முறை என்ற தலைப்பில் மனித உள்ளத்தின் கிரகித்தல் செயல் முறையின் அமைப்பியல்களையும், கற்றலுக்கான வழிகளையும் இணைத்து சிறப்பான ஆக்கம் ஒன்றை எழுதியுள்ளார். இன்றைய மாணவர்களுக்குக் கிரகித்தல் பயிற்சியை வழங்கும் பல்வேறு செயன் முறைகளும் இதில் அடங்குகின்றன. மேலும் தேசிய கல்வி நிறுவக முகாமைத்துவத் துறை அலுவலர் கலாநிதி ஜெயசேன புத்பிட்டிய - பாடசா லைகளில் ஆக்கச்சாளரங்கள் என்ற புதிய கல்வியியல் செயலாற்றுகையை இயம்பியுள்ள துடந்த மிகச் சிறந்த நடைமுறைப் பயனுள்ள எல்லா ஆசிரியர்களும் செயற் படுத்தக் கூடிய புதிய விடயங்களை இயம்பியுள்ளார்.


பேராசிரியர் லால்பால சூரிய இலங்கையின் கல்வி சில தவறான ஆளுகைகள்... ஆலோசனைகள் என்ற விமர்சன ரீதியான வாண்மைத்துவக் கட்டுரையை எழுதியுள்ளார். இது மிகவும் பயனுடையதாகவுள்ளது. மற்றும் ஜவகர்லால் நேரு பல் கலைக்கழக துணைவேந்தர் சப்ய சாஸ்டாச்சாய்யா ரவீந்திரநாத் தாகூரின் கல்விப் பார்வை என்ற மிக ஆழமான கல்வியும் கருத்தாழம்மிக்க கட்டுரை கீழைத்தேச கல்வியின் வேர்களை எடுத்தியம்புகின்றது. யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆங்கிலத்துறை விரிவுரையாளர் மோகன் ஆங்கில மொழிமூல பலதரக் கற்பித்தல் மற்றும் ஆசிரிய வாண்மை அழகெழில் குருவைத்தேடி முத்தமிழ் கலாநிதி வீரமணி ஐயா அஞ்சலி சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் போன்ற பல அம்சங்களுடன் படங்களும் சிறப்பாக படியில் வெளிவந்திருக்கிறது. இதழாசிரியர் பா.தனபாலனின் அர்ப்பணிப்பின் வெளியீடாக வந்திருக்கும் படியின் பணி பாராட்டுக்குரியது.

க. இராயேந்திரன்

---

அரசியல்... கே.ரீ. கணேசலிங்கம்

# தமிழர்களின் துயரில் குளிர்காயும் கூட்டமாக சர்வதேச சமூகத்தின் சக்திகள் திகழ்கின்றன.



சுனாமியின் தாக்கத்தால் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் அரசியல் அபிவிருத்தி நடவடிக்கைகள் மீளமைக்கப்பட்டு வருகின்றது. சர்வதேச சமூகத்தின் உதவிகள் ஒரு புறமும், ஆளணிகள் மற்றும் படையணிகளின் உதவிகள் என பல வழிகளிலும் விருத்தியை நோக்கிய நிலைக்குள் இலங்கை விளங்குகிறது. சர்வதேச சமூகத்தின் பிரதிநிதியான ஐ.நா.செயலாளர் கொபி அனானின் வருகையும், கொலின் பவல் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்களின் வருகையும் இலங்கையை மிளிரவைத்துள்ளது. அதேநேரம் வடக்கை கைவிட்டுள்ள சர்வதேச சமூகத்தின் உணர்வுகளை பரிசீலிக்க வேண்டிய நிலைக்குள் தமிழ் மக்களின் அரசியல் மாறியுள்ளது,

இலங்கை இனப்பிணக்கைத் தீர்க்கும் பிரதான சக்தியாக விளங்கிய அமெரிக்காவினதும், அதன் அனுசரணைகளும் இலங்கையை மையப்படுத்தியுள்ளது. சுனாமியின் பாதிபுகளுக்கு நிவாரணம் அளிக்க வந்த அமெரிக்காவும், அதன் படைபபிரிவுகளும் முழுக்க முழுக்க தென்னிலங்கையை மையப்படுத்தி செயற்படுகின்றதைக் காணமுடிகிறது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் பாதிப்புகள் எதனையும் இயற்கை - இன, மத, மொழியின் அடிப்படையில் மேற்கொள்ளாதபோது, நிவாரணப் பணிக்குரியவை மாத்திரம் இன, மத அடிப்படைகளைச் சார்ந்ததாக உள்ளது. இன உணர்வைத் தூண்டுவதற்காக இவ்வாறு குறிப்பிடவில்லை.

மாறாக யதார்த்தமாகவே சுனாமி யின் தாக்கத்துக்குள்ளான மக்களில் தமிழர்களுக்குப் பெரிய ளவிலான அரச நிவாரணப்பணிகளோ, உதவிகளோ கிடைக்கவில்லை என்பதே சுட்டிக் காட்டப்படுகிறது. இது பொதுவாக ஏற்பட்ட ஒரு நீண்டகால அம்சமாக இருநதாலும், தற்போது சர்வதேச சமூகத்தின் முன்னாலும், சர்வதேச சமூகம் ஒரே விடயத்தையே ஆற்ற முயலுகிறது என்பதையே காட்டுகிறது. இதனால் ஏற்படப்போகும் பாதிப்புகள் மேலும் தமிழ் சிங்கள உணர்வுகளைக் கட்சியடிப்படையிலும், இன உணர்வு சார்ந்த நிலையிலும் பாதிப்பை உண்டாக்கும்.

குறிப்பாக அமெரிக்க செனற்றர்களின் வருகையின் தொனிப்பில் சுனாமியின் பாதிப்பை அளவிட முடியாதென கருதினர். அதே போன்று அளவான பாதிப்பை அடைந்த தமிழர் தரப்பின் விளைவுகளையும் அவர்கள் மதிப்பிடாது, வெறுமனமே சிங்கள சமூகத்தின் பாதிப்புக்களைப் பெரிதுபடுத்திக் கூறுவது தமிழர் மத்தியில் மேலும் விரிசலையே சாத்தியமாக்கும். இது பொதுவான பாதிப்புப் பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டதெனக்கூறிக் கொண்டு செயற்படுபவர்கள் அதே உணர்வையே அதிகப்படுத்துவதாக உள்ளது.

கொபி அனான் உலக சமூகங்களின் பொதுமனிதனாகவே அளவீடு செய்யப்படுகின்றார்.ஆனால் அத்தகைய பொது மனிதன் இலங்கையின் வடக்கு - கிழக்கை முழுமையாகக் கண்டு கொள்ளாது, முடிவுகளையும் தீர்வுகளுக்கான வாய்ப்புக்களைப் பற்றி பேசுவதும் அவமானமாக உள்ளது. பாதுகாப் பற்ற, பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தை நேரடியாகத் தரிசிக்க முடியாத வரை எப்படி பொது மனிதனாகக் கண்டு கொள்ள முடியும். அவரது வருகைக்கான கோரிகைகள் விடவேண்டிய துரப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. அண்மைக் காலத்தில் சூடானில் மிக மோசமான மதவன் முறை நிகழ்ந்தபோது கூட, கொபி அனானும், கொலின் பவலும் விஜயம் செய்திருந்தினர். கொலின்பவல் மிக நாகரிகமான அணுகுமுறையானதாக காட்டிக் கொண்டதுடன், கொபி அனான் அமெரிக்கா தொடர்பான சர்ச்சைகளை அப்போது கிளப்பியிருந்தார். சூடானில் ஏற்பட்ட பாதிப்புக்களைவிட, இலங்கையில் ஏற்பட்டது அதிகமானது என்பதுடன், இது இயற்கை அனர்த்தம் என்ற வகையில் முக்கியமானதாகவும், அதிகம் அரசியல் கலப்பற்றதெனவும் கருதப்பட்டது. ஆனால் கொபி அனானின் நடவடிக்கையால் அதிக அரசியல் பேசப்படும் நிலை ஏற்பட்டுவிட்டது. அதிலும் இனரீதியான அரசியலைப் பற்றி உரையாட வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.



எல்லாவற்றையும் விட, தற்போது வடக்கு - கிழக்கில் போரற்ற சூழல் நிலவுகிறது. இந்த சூழலை தென்னிலங்கையில் மட்டும் நின்று கொண்டு சீர்ப்படுத்திவிடலாமென சரவதேச சமூகம் கருதுகிறது. ஆனால் அத்தகைய சூழலுக்கான தளம் வடக்கு - கிழக்கு என்பதை மறுக்கும். சர்வதேச சமூகம் கொபி அனானின் வருகையை அவ்வளவாக பயன்படுத்தியதா? அல்லது கொலின்பவலின் போக்குக்கு ஏற்பவே அனானும் செயற்பட்டாரா என்பதையே காட்டுகிறது. எதுவாயினும் வடக்கு - கிழக்கின் அமைதிச் சூழலைத் தாக்குப்பிடிக்கும் நிலையில் அனான் செயற்பட வில்லை.

இவ்வளவு நெருக்கடிக்குப் பின்னர அனான் வடக்கு - கிழக்கிற்கு வருகை தருவதாயின் அதனால் ஏற்படப்போகும் விளைவு இரண்டாம் பட்டசமானதாகவே அமையும். எனவே அனானின் வருகை தமிழர்களை புதிய கோணத்தில் நிலைமைகளை உருவாக்க விரும்புகிறதா என்பதே புதிய கேள்வியாகும்.

ஒரு வகையில் வடக்கு -கிழக்கு மக்களை நிராகரித்து செயற்பட தென்னிலங்கை செயற்படுகிறதா என்பது அதிக சந்தேகமாக உள்ளது. தமிழர்கள் வாழும் பிரதேசங்களோடு ஒப்பிடும்போது, தென்னிலங்கை மிகச்சிறப்பாக சீர மைககப்பட்டு வருகிறது. மிகவேக மாகவும். சிறப்பாகவும் செயற்பட்டு வரும் அரச இயந்திரம் வடக்கு -கிழக்கில் அதிலும் தமிழர் வாழும் பிரதேசத்தில் மந்தகதியில் செயற்படுகிறது.

முதல் கட்டமான உதவிகளை சீர் செய்த அரச மற்றும் தனியார் அமைப்புக்கள் இரண்டாம், மூன்றாம கட்டத்தை பாரியளவில் செயற்படுத்த முடியாதுள்ளது. குறிப்பாக மருத்துவ சேவைகள் அதற்கான பொருட்கள் போதாத நிலைமை என்பதோடு, மீளக் குடியமர்த்தும் பணி தனியாராகவோ அல்லது சிறிய அரசசார்பற்ற அமைப்புக்களாலோ மேற்கொள்ளமுடியாது. அரசு முழு வீச்சில் செயற்பட்டால் மட்டுமே மீளவும் சாத்தியப்படுத்தக் கூடிய உதவிகளை மேற்கொள்ளலாம். அதற்கு அரசாங்கம் இனம் சார்ந்த விதத்தில் மீள்குடியமர்வை கருதுகின்ற போக்கு வடக்கு - கிழக்கை கைவிடுகின்றதை உணர்த்துவதாகவே முடியும். பாதுகாப்பான சூழலில் செயற்படுத்தக் கூடிய பிணைப்பபை ஒழுங்குபடுத்த அரசாங்கம் தயாராகத் தவறுகின்றமை மிகமோசமான விளைவுகளைத் தரக்கூடியதாக அமையும். இவ்வாறு அரசு தட்டிக்கழிக்க அதனை சர்வதேச சமூகம் பாராமுகமாக செயற்படுமாயின், அதன் விளைவு தனித்துவமான பிரதேசம் என்பதை மீளவும் தெளிவுபடுத்துவதாக அமையும்.

விடுதலைப் புலிகளே அரசாங்கத்தின் அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றமை மேலும் உறுதிப்படுத்தப்படும். தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் ஆரம்பித்துள்ள நடவடிக்கை அரசாங்கத்துக்குப் பதிலான, மாறுதலான, நடவடிக்கை என்பதை மக்களும் அவர்கள் சார்நத நாடுகளும் உணரும் நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதனால் தேசியம் இலங்கை சார்ந்தல்லாமல் தமிழர சார்ந்ததாக மேலும வளரும். ஏற்கனவே இருந்த அரசாங்கங்களும், அமைப்புக்களும் மேற்கொண்ட அனைத்து பணிகளும் இவ்வாறானதொன்றாகவே இருந்ததனால் தமிழீழக் கோரிக்கை வலுவடைந்தது. அதனை மேலும் சாத்தியப்படுத்தும் போக்கானது இலங்கை அரசாங்கத்துக்கு ஆபத்தானதொன்றாகவே அமையும். அதனை எந்த அரசியல் வாதியும் உணர்வதாக இல்லை. எல்லாச் சந்தர்ப்பத்திலும் பழைய அரசியல் தலைமைகளை குறைகூறிக் கொண்டு, தற்போதைய அரசியல் தலைமைகள் அவ்வாறே செயற்படுகின்றன.

இவையாவற்றையும் அங்கீகரிக்கும் சர்வதேச சமூகம் அரசாங்கத்தின் பலத்தையும், ஆதரவையும் தக்க வைக்கும் அதே சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகளை நிராகரிககாது செயறபடுகிறது.

கொலின் பவலை பின்பற்றும் அனான் அமெரிக்க சார்பு நிலை வாதியாகச் செயற்படுவதுடன் எந்தச் சந்தர்ப்பத்திலும் இரண்டு தரப்பையும் பகைக்காது செயற்பட முயலுகிறது.

சர்வதேச சமூகத்தின் இரட்டை வேடம் மேலும ஒரு தடவை உரிக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் துயரில் குளிர்காயும் கூட்டமாகவே சர்வதேச சமூகத்தின் தலை விதியை நிர்ணயிக்கும் சக்திகள் செயற்படுகின்றனர்.

# பீகாரில் படகு கவிழ்ந்ததில் 30 பயணிகள் உயிரிழப்பு!

பீகாரில் இடம்பெற்ற படகு விபத்தில் 30 பயணிகள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

பகல்பூர், நவுக்கச்சியா மாவட்டங்களில் ஆற்றைக் கடக்க பெரும்பாலான மக்கள் படகுப்பயணத்தை நம்பியிருக்கின்றனர். நேற்று முன்தினம் இரவு ஆற்றின் ஒரு கரையில் இருந்து மற்றொரு பகுதிக்குச் செல்ல பெரிய படகு ஒன்று புறப்பட்டது.

அந்தப் படகில் சுமார் 50 பேர் இருந்தனர். கரையை நெருங்கிக் கொண்டிருந்த சமயத்தில் படகு தத்தளித்தது. அதிகமானோர் ஏறியிருந்ததால் படகு சாயத்தொடங்கியது.

மக்கள் அலறியபடி ஒதுங்கியதால் படகு தண்ணீருக்குள் கவிழ்ந்தது. சிறிது நேரத்தில் படகும் அதிலிருந்த 50 பேரும் தண்ணீரில் மூழ்கினார்கள். அதில் சுமார் 20 பேர் நீந்திக் கரை திரும்பினர். பெண்களும், சிறுவர்களும் தண்ணீரில் மூழ்கிவிட்டனர்.

தண்ணீரில் மூழ்கிய 30 பேரும் பலியானதாக அஞ்சப்படுகிறது. கரை திரும்பாதவர்களில் 4 பேர் உடல்கள் மட்டும் மீட்கப்பட்டுள்ளன.

மற்றையவர்களை தேடும் பணி நடைபெற்று வருகிறது. பகல்பூர், நவுகச்சியா மாவட்ட பொலிஸார் ஆற்றோரங்களில் பிணங்களை மீட்கும் பணியில் ஈடுப்பட்டுள்ளனர்.

தீயணைப்புப் படையினர் மற்றும் நீச்சல் வீரர்களும் ஆற்றில் இறங்கி உயிரிழந்தவர்களைத் தேடிவருகின்றனர்.

உலக நோக்கு



தாய்லாந்தின் புக்கெட் நகரை சுனாமி பேரலை தாக்குவதைக் காணலாம்

# 7 வயது சிறுவனுக்கு 25 கோடி நஷ்டஈடு!

அமெரிக்காவின் சிக்காகோவைச் சேர்ந்த 11 வயதுச் சிறுமி ரியான் ஹாரீஸ் 1998 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சிறுமி சைக்கிளில் சென்றபோது, 8 மற்றும் 7 வயதுச் சிறுவர்கள் செங்கல்லை வீசி அந்தச் சிறுமியை சைக்கிளுடன் கீழே விழவைத்த பின்னர், மானபங்கப்படுத்திவிட்டு, கழுத்தை நெரித்துக் கொன்றனர் என்று பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த 7 வயதுச் சிறுவன் மீது வழக்குத் தொடரப்பட்டது தவறு என சில மாதங்களுக்குப் பின்னர் பொலிஸ் கூறியது. இதனால் சிறுவன் விடுவிக்கப்பட்டான்.

தவறாக சிறுவனை குற்றஞ்சாட்டியதால் ஏற்பட்ட மனவேதனைக்கு நஷ்டஈடு தரவேண்டும் எனக் கோரி சிறுவனது குடும்பத்தினர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். அதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு 25 கோடி ரூபாய் கொடுக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

# இந்தியக் கோடீஸ்வரர்களின் தரவரிசை பட்டியல் வெளியீடு!

இந்தியக் கோடீஸ்வரர்கள் எவ்வளவு சம்பாதித்துள்ளனர், பணக்காரர்கள் தர வரிசையில் எந்த இடத்தில் உள்ளனர் என்ற பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இந்தத் தடவை கோடீஸ்வரர்கள் பட்டியலில் புதிதாக 55 பேர் இடம்பிடித்துள்ளனர்.

பணக்காரர்கள் வரிசையில் விப்ரோ நிறுவனத்தின் தலைவர் அஜிம் பிரேம்ஜி முதல் இடத்தை பிடித்துள்ளார். அவரது சொத்து மதிப்பு இந்திய ரூபாவில் 31 ஆயிரத்து 198 கோடி.

கடந்த 6 ஆண்டுகளில் அவர் 5 தடவை தொடர்ந்து இந்தியப் பணக்காரர்கள் தரவரிசையில் முதலிடத்தில் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், கடந்த கணக்கெடுப்பின்போது அம்பானி சகோதரர்கள் முதலிடத்தில் இருந்தனர். இப்போது அவர்கள் 2 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுவிட்டனர். அம்பானி சகோதரர்களான அனில், முகேஷ் இடையே ஏற்பட்ட குடும்பச் சண்டைதான் அவர்களின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம்.

அவர்கள் நடத்தையால் ரிலையன்ஸ் தொழிலில்களில் சற்றுத் தொய்வு உண்டானது. ரிலையன்ஸ் பங்குகளும் வீழ்ந்தன. இதனால் அம்பானி சகோதரர்கள் இந்திய மதிப்பில் 24 ஆயிரத்து 172 கோடி ரூபாய் சொத்துக்களுடன் 2 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டனர்.

பாரதி தொலைத்தொடர்பு நிறுவனத்தின் சுனீல் மிட்டல் 3 ஆவது இடத்தில் உள்ளார். அவரது சொத்து மதிப்பு ரூபா 12,552 கோடி. 2002 ஆம் ஆண்டு ஏழாவது இடத்திலிருந்த மிட்டல் 2003 ஆம் ஆண்டு நான்காவது இடத்துக்கு உயர்ந்தார்.

2004 இல் அவர் கூடுதலாக ரூபா 7552 கோடி (151 சதவீ வளர்ச்சி) பணம் சம்பாதித்து இந்தத் தடவை 3 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதிக வளர்ச்சி பெற்றுள்ள கோடீஸ்வரர்களில் சிவநாடாரும் குறிப்பிடத்தக்கவர். 2004 இல் அவர் 4 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். அவரது சொத்து மதிப்பு ரூபா 7929 கோடி.

2003 இல் 5 ஆவது இடத்தில் இருந்த சிவ்நாடாரின் எச்.சி.எல். நிறுவனம், தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக 83 சதவீ வளர்ச்சி பெற்று - 4 ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ளது.

பணக்காரர்கள் வரிசையில் ரம்பக்சி புரமோட்டர்சின் மல்விந்தர் சிங், ஷிவேந்தர்சிங் 5 ஆவது இடத்தில் உள்ளனர். அவர்களது சொத்து மதிப்பு ரூபா 5679 கோடி. கடந்த தடவை 3 ஆவது இடத்தில் இருந்த அவர்கள் 5 ஆவது இடத்துக்கு சரிந்துள்ளனர்.

6 ஆவது இடத்தில் திலீப் சங்கவி (ரூபா 4965 கோடி), 7 ஆவது இடத்தில் குமார் மங்களம் பிர்லா (ரூபா 4172 கோடி), 8 ஆவது இடத்தில் ஹீரோ ஹொண்டா தலைவர் பிரிஸ்மோகன் லால் முஞ்சல் (ரூபா 2906 கோடி) உள்ளனர்.

பணக்காரர்கள் வரிசையில் 9 ஆவது இடத்தில் ஜீ.டி.வி.குருப் நிறுவனங்களின் தலைவர் சுகாஷ் சந்திரா உள்ளார். அவரது சொத்து மதிப்பு ரூபா 2850 கோடி.

சிப்பால நிறுவனத் தலைவர் ஓய்கே ஹமீது ரூபா 2847 கோடி சொத்துக்களுடன் 10 ஆவது இடத்திலுள்ளார்.


# ஸ்பெயின் களஞ்சிய வெடிவிபத்தில் 7பேர் உயிரிழப்பு!

ஸ்பெயினிலுள்ள பொருட்கள் சேமித்து வைக்கும் களஞ்சிய அறைப்பகுதியில் ஏற்பட்ட வெடிவிபத்தில் ஏழு பேர் பலியானதுடன் பலர் காயமடைந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் ஸ்பெயினின் வடபகுதியில் நடைபெற்றுள்ளது. இந்தக் களஞ்சிய அறையில் இயந்திரங்கள் மற்றும் எரிபொருட்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்ததாக இந்தச் சம்பவம் நடைபெற்ற நகர மேயர் யுகான் கார்லோஸ் அப்பாரிகோ தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த சிலரின நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஈராக்கின் ஷியா மதத்தலைவர் நேற்றுமுன்தினம் சுட்டுக்கொலை!



ஈராக்கில் ஷியா முஸ்லிம்களின் உயர் தலைவரான ஆயதுல்லா அலி சிஸ்ராணி, அவரது மகன் மற்றும் நான்கு பாதுகாவலர்கள் நேற்றுமுன்தினம் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை தொழுகைக்குப் பின்னர் சல்மான் பாக் என்னுமிடத்தில் இடம்பெற்றது. இதில் கொல்லப்பட்ட ஷேக் ம.்.மூட் அல் மதானி என்பவரே தாக்குதலாளர்களின் முக்கிய இலக்காக இருந்திருக்கலாமெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நடைபெறவுள்ள ஈராக்கியத் தேர்தலில் ஷேக் அல் மதானி போட்டியிட இருந்த நிலையில் இவருக்கு ஏற்கனவே கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை பாக்தாத்திலுள்ள ஹோட்டலொன்றில் தங்கியிருந்த துருக்கிய வியாபாரியான அப்துல் காதிர் தன்றிகுலு என்பவரை மினிபஸ்ஸில் கூட்டிச்சென்றுகொண்டிருந்தவர்கள் மீது பத்துப் பேரடங்கிய துப்பாக்கிதாரிகள் நடத்திய தாக்குதலில் மினி பஸ்ஸிலிருந்த அறுவர் கொல்லப்பட்டனர். குறித்த வியாபாரியும் ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டார்.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் குர்திஷ் பணியாளர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

# ஈரானியப் பாடசாலையில் தீ; 16 மாணவர் கருகி மரணம்!

ஈரானில் பாடசாலையொன்றின் விஞ்ஞான கூடத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் 16 மாணவர்கள் பரிதாபகரமான முறையில் பலியானதாக ஈரானிய அரசு ஊடகம் தெரிவித்தது.

இந்தத் தீவிபத்தையடுத்து ஆசிரியரொருவர் தீப்பிடித்த பொருளைத் தூக்கி வெளியில் வீசியபோது பரபின் மெழுகில் அது பட்டதால் இந்தத் தீ மேலும் கொழுந்து விட்டெரியத் தொடங்கியது.

இந்தச் சம்பவத்தில் தீக்காயங்களுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஆசிரியர் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



சுனாமி பேரனர்த்தத்தை அடுத்து மாலைதீவின் பல தீவுகள் நீரில் மூழ்கும் ஆப..்தை எதிர்நோக்கியிருப்பதால் அதனைத்தடுப்பதற்காக இந்தியாவிலிருந்து பெருமளவு மணல் அங்கு ஏற்றிச் செல்லப்படுவதைக் காணலாம்.

## கொசோவாவில்—

# கார்க்குண்டுவெடிப்பில் ஐ.நா. பொலிஸார் பலி!

கொசோவாவில் அமைதிப்பணியில் ஈடுபட்டிருந்த ஐ.நாவின் பொலிஸ் அதிகாரி கார்க்குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொசோவாவின் மேற்குப் பகுதியில் நேற்று நடந்த இந்தச் சம்பவத்தை ஐ.நாவின் பேச்சாளரும் உறுதிப்படுத்தினார்.

அத்துடன் இந்தத் தாக்குதல் எந்தச் சந்தர்ப்பத்தில் நடத்தப்பட்டது என்பது தொடர்பாக விசாரணை இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சோமாலியாவின் தென்மேற்குப் பகுதியான பிறிஸ்ரான் பகுதிக்கு இவர் கடமைக்கு வாகனத்தில் சென்று கொண்டிருந்த வேளையே இந்தச் சம்பவம் நடை பெற்றது. உயிரிழந்த இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பது பற்றிய விபரம் வெளியிடப்படவில்லை.

கொசோவாவில் அமைதிப்பணியில் 3000 ஐ.நா. பொலிஸார் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## இராணுவ பவுசருடன் மினிபஸ் மோதி மூவர் காயம்

எழுதுமட்டுவாள் பகுதியில் மினி பஸ் ஒன்றுடன் இராணுவத்தினரின் தண்ணீர் பவுசர் மோதி விபத்துக்குள்ளானதில் மூன்று பயணிகள் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றது. திருநெல்வேலியைச் சேர்ந்த வெற்றிவேல் ஜெயதர்சன் (வயது 20), சாவகச்சேரியைச் சேர்ந்த ஜெயரட்ணம் தர்பரன் (வயது 21), எஸ்.ஜெயகம்சன் (வயது 30) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

முகமாலை நோக்கி சென்றுகொண்டிருந்த மினிபஸ் எழுதுமட்டுவாள் பகுதியில் இராணுவத்தினரின் தண்ணீர் பவுசரை முந்திச் செல்ல முற்பட்டபோது மேற்படி விபத்து ஏற்பட்டது. காயமடைந்த பயணிகள் மூவரும் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# முஸ்லிம் பிரதேசங்களுக்கு அளவுக்கதிகமான நிவாரணம்!

## இராணுவத் தரப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

காத்தான்குடி போன்ற பிரதேசங்கள் பாதிப்புக்கள் குறைந்த பகுதிகளாக இருந்தபோதிலும், கட்டுநாயக்க விமான இறங்குதுறை மற்றும் விமான சேவைக்குப் பொறுப்பாகவுள்ள எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவின் உத்தரவுப்படி, அளவுக்கதிகமான நிவாரணப் பொருட்கள் அங்கு தொடர்ச்சியாக அனுப்பப்பட்டு வருவதாக இராணுவத் தரப்புக் குற்றஞ்சாட்டியுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக உடனடியாக கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய 250 கூடாரங்கள் நேரடியாக காத்தான்குடிக்கு ஹெலிகொப்டர் மூலம் அனுப்பப்பட்டதாகவும் உணவுப் பொருட்கள், உடை, ஏனைய அவசர நிவாரணப் பொருட்கள் என்று ஏராளமான பொதிகள் காத்தான்குடி பகுதிக்கு நேரடியாக அனுப்பிவைக்கப்பட்டதாகவும் இராணுவத் தரப்பால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாகவே பாதிப்படைந்த பகுதியாகக் கருதப்படும் காத்தான்குடிக்கு ஏனைய அனைத்துப் பகுதிகளையும் விட மிக அதிகமான நிவாரணப் பொருட்கள் நேரடியாக விமான நிலையத்திலிருந்தே ஆகாய மூலமாக அனுப்பபட்டமை எதற்காக என்று படையதிகாரிகள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இதுதவிர, கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு வந்திறங்கிய பல அவசர நிவாரணப் பொருட்களுடனான பொதிகள் வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்படுவதாகப் பதிவானாலும், மிக அதிகமான பொதிகள் முற்றிலும் முஸ்லிம் பகுதிகளிலேயே ஆகாயமூலமாக முதலில் விநியோகிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது.

குறிப்பாக எந்தப் பாதிப்பையும் எதிர்கொள்ளாத முஸ்லிம் கிராமங்களிலுள்ள மக்கள்- எவ்வாறு நிவாரணப் பொருட்களுடான பொதிகளைப் பெறமுடிந்தது என்றும் மிக மோசமாகத் தாக்கப்பட்ட கடற்கரையோரக் கிராமங்களில் உள்ள மக்கள் உணவோ, உடையோ இன்றி அவதிப்பட்டுக் கொண்டிருந்த அதே நேரத்தில், எதுவித பாதிப்புமற்ற முஸ்லிம் கிராமங்களில் வசிக்கும் மக்கள் நிவாரணப் பொதிகளைப் பெற்றுள்ளமை குறித்து அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இராணுவத் தரப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

## அமெரிக்க கப்பல் கிழக்குக்கு நகர்வு

அமெரிக்காவின் யு.எஸ்எஸ் துலுத் என்ற கடற்படைக்கப்பல் கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட கிழக்குமாகாண மக்களுக்கு உதவும் வகையில் 100 மரைன் படையினரையும் 3 ஹெலிகொப்டர்களையும் ஏற்றிக் கொண்டு நேற்று கிழக்கு மாகாணத்திற்குச் சென்றுள்ளது.

இவ்வாறு சென்ற கப்பல் அம்பாறையில் நிவாரண உதவிப்பொருட்களை இறக்கி விநியோகிக்கவுள்ளது.

### சம்பூரில்...

கூறியபோதும், அவர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த நிலையில் அதே வாகனத்தில் பயணம் செய்த போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருமலை மாவட்ட இணைப்பாளர் க.வேலும்மயிலும் - எழிலன் யார் என்பதை இராணுவச் சிப்பாய்க்கு விளக்கியபோதும் அவரைத் தொடர்ந்து பயணஞ்செய்ய அனுமதிக்காது இழுத்தடிப்புச் செய்து 40 நிமிடத்தின் பின்னரே தொடர்ந்து பயணம் செய்ய இராணுவத்தினர் அனுமதி வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

(4,10)

### புலிகளின்...

தெற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கே விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிடுவார்.

விமானம் மூலமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடும் போல் மார்ட்டின் அம்பாறையில் கனடியப் படையினர் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் பகுதிகளுக்கும் நேரிற்சென்று பார்வையிடுவார்.

அத்துடன், தனது விஜயத்தின் போது போல் மார்ட்டின் மனிதாபிமானப் பணியில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள், ஜனாதிபதி சந்திரிகா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்துவாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரசசார்பற்ற நிறுவனங்களிடமே நிதியுதவி கையளிக்கப்படும்!

## கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

வடக்கு கரையோரப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வந்துசேரவில்லை என்பதை என்னால் உணரமுடிகின்றது. இந்த நிலையிலும் மீனவர்கள், கடலுக்குச் சென்று, மீன்பிடிக்கும் செயறபாட்டில் ஈடுபட ஆயத்தமாவதைக் கண்டு நான் வியப்படைந்தேன் என கனடிய போக்குவரத்து அமைச்சரின் நாடாளுமன்றச் செயலாளர் ஜிம் கரிஜியானிஸ் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எனது சொந்தச் செலவிலேயே பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிடவேண்டுமென்று இங்கு வருகை தந்தேன். எமது நாட்டுப் பிரதமர் எதிர்வரும் 17ஆம் திகதி இலங்கைக்கு வருகைதரவுள்ளார். இவர் அம்பாறையில் உதவிப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் கனடிய மீட்புப் படையினரைச் சந்திக்கவுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு 425 மில்லியன் கனடிய டொலரை கனடா ஒதுக்கியுள்ளது. இந்த நிதி அரசாங்கத்துக்கு வழங்கப்படமாட்டாது. மாறாக அரச சார்பற்ற நிறுவனங்களுக்கே வழங்கப்படும்.

நான் யாழ்.குடாநாட்டின் நிலைமைகள் தொடர்பாக யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, அரசாங்க அதிபர், பல்லைக்கழக துணைவேந்தர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொது மக்கள் என பலருடனும் கலந்துரையாடியுள்ளேன்.

இங்குள்ள நிலைமைகள் தொடர்பாக எமது பிரதமர் போல் மார்ட்டினுக்கு நான் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கவுள்ளேன். சமாதானம் தொடரவேண்டுமென்றே நாம் விரும்புகின்றோம். கனடிய நாட்டு நிவாரண நடவடிக்கைகள் சமமாகப் பங்கிடப்படும்.

வடக்குப் பகுதி மக்களுக்கு உதவிகள் வழங்கப்படவில்லை என்பதை எமது பிரதமரின் கவனத்திற்குக் கொண்டுவருவேன். இலங்கையில் நிரந்தர சமாதானம் ஒன்று நிலவுவதை நான் பார்க்கவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## ரஷ்ய மருத்துவக்குழு இலங்கைக்கு!

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மருந்துப் பொருட்கள் மற்றும் நடமாடும் வைத்தியசாலை போன்றவற்றை ரஷ்யா இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளது.

ரஷ்ய அவசரகால நிலைகள் தொடர்பான அமைச்சின் பேச்சாளர் விக்ரர் பெல்ட் சோவ் இது தொடர்பாகத் தெரிவிக்கையில் - ரஷ்யாவின் 11-76 விமானங்கள் இரண்டு, மருந்து வகைகள், படுக்கைகள், தொற்று நீக்கி மருந்து வகைகள் மற்றும் மருத்துவப் பகுதிக்குத் தேவையான சகல மருத்துவ உபகரணங்களையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டுள்ளன. இவை இன்று இரவு கொழும்பைச் சென்றடையும் எனத் தெரிவித்தார்.

### வங்கக்கடலில்....

என்றும் எனவே, வளிமண்டலத் திணைக்கள முன்னறிவிப்புக்களின்படி பொதுமக்களைச் செயற்படுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் முதல் அம்பாந்தோட்டை வரையான கரையோரப் பகுதி மீனவர்கள் அவதானத்துடன் நடந்துகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## ஆசிய அபிவிருத்தி...

புதிய அவசர தேவைகளுக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கி நடவடிக்கை மேற்கொண்டுவருகிறது.

போக்குவரத்து, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், வீடுகளை அமைத்துக் கொடுத்தல், கல்விக்கான உதவி, கடற்கரையோர மக்களின் சமூக அபிவிருத்தி போன்றவற்றிலும் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவவுள்ளதாக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் அலெஸ்சான்றோ பியோ தெரிவித்தார்.

அத்துடன், சுனாமி தாக்குதலை முன்கூட்டியே கண்டறியும் அவதான நிலையமொன்றை இந்து சமுத்திரத்தில் அமைப்பதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இந்தோனேஷியா, இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளின் மீள் கட்டுமானம் மற்றும் புனர்வாழ்வுப் பணிகளுக்காக 675 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கவுள்ளதாக வங்கி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது பிரதி முகாமைப் பணிப்பாளர் அனி ஓ.குருஜியர் இந்தவாரம் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

## நலன்புரி நிலையங்களில்...

திருகோணமலை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவக் கட்டளைத்தளபதி கேணல் சொர்ணத்தை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன் புறூவ் ஹொவ்டே நேற்றுக் காலை மூதூர் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியான சம்பூரில் வைத்து சந்தித்தார்.

சம்பூரில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவட்டக் கட்டளைத் தலைமையகத்தில் நேற்றுக் காலை 10.20 முதல் 11.35 வரை இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

திருமலை மாவட்ட கட்டளைத் தளபதியாக கேணல் சொர்ணம் பதவியேற்றபின் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரை நேற்று முதல் தடவையாக சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது - தமிழ் பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள நாம் முழுமையான உரிமையைப் பெற்றுள்ளோம். இதற்கு படையினர் ஏற்படுத்திவரும் முட்டுக் கட்டைகளை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நிவர்த்தி செய்து தரவேண்டுமென திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் கேட்டுக்கொண்டார்.

சுனாமியின் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வந்த செயற்பாடுகளை படையினர் பொறுப்பேற்கவேண்டும் என ஜனாதிபதி தீர்மானித்திருப்பதற்கு கேணல் சொர்ணம் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் ஆட்சேபம் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ட்ரொன் புறூவ் ஹொவ்டே -

உலகில் எந்த ஒரு நாட்டிலும் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்புரி நிலையங்களை இராணுவம் பொறுப்பேற்கும் நடைமுறை இல்லை. இது இலங்கையில் மட்டுமே உள்ளது. இது உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களின் மனிதாபிமான செயற்பாட்டுக்கு ஏற்புடைய நடவடிக்கை அல்ல. இது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளேன்.

இனவாத அமைப்பினரை நிவாரணப் பணிகளில் சம்பந்தப்படுத்துவது ஏற்கக்கூடியதல்ல. இது தொடாபாகவும் ஜனாதிபதியுடன் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

(04,10)

### நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 97.58 | 99.05 |
| ஸ்ரேலிங் பவுண் | 184.08 | 187.49 |
| யூரோ | 128.98 | 131.58 |
| சுவிஸ் பிராங் | 83.08 | 85.32 |
| யென் | 0.9486 | 0.9698 |

A/L 2006
ACCOUNTING
Balavasan
B.B.A.(F.M.Spl.)
செந்து விற்பனை
Sat, Sun 9-10
ஆரம்பம்:
15 ஜனவரி 2005 - சனி 9.00 மணி
விக்னா
கல்வி நிறுவனம்

தமிழர் தைத்திருநாளில் எங்கள் வாழ்த்து உவகையுடன்
Free
ஒவ்வொரு கணனியுடனும் நவீன கொம்பியூட்டர் மேசை, பில்டர் கிளாஸ், மவுஸ் பாட் மற்றும் டஸ்ற் கவர்
UNIT
எமது விளம்பரத்தை 2 பக்கம் பார்க்கவும்

சிங்களம் – பேச, எழுத, வாசிக்க
வழிகாட்டல் ஆசிரியர் மல்வான
I- JAFFNA College Undergraduate Dept.,
(Opposite General Hospital) 464, Hospital Road, Jaffna
சனி, ஞாயிறு - பிற்பகல் வகுப்புக்கள் 2.30 - 4.00, 4.15 - 5.45, 6.00 - 7.30 ஆரம்பம் 15.01.2005
II-பருத்தித்துறை – இல.241, பிரதான வீதி
(வேலாயுதம் மகாவித்தியாலயம் அருகில்)
செவ்வாய்/வியாழன் வகுப்புக்கள் காலை 7 மணிமுதல் இரவு 9.30 மணிவரை ஆரம்பம் 01.02.2005
III-DEGVEE College of High Studies
திங்கள், புதன், வெள்ளி காலை 7.00 மணிமுதல் மாலை 6.30 மணிவரை (No.342 Stanley Road, Jaffna) (ஆரியகுளம் முன்பாக) பழைய நியூட்டன் சனி, ஞாயிறு காலை 7.30 - 12.30 மணிவரை
IV இல.35, வைமன் றோட் – நல்லூர்
திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 7 மணி முதல் 9.30 மணிவரை
திரு.மல்வான
இல.35, வைமன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
(சி-3738)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.01.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# தைத்திருநாள் சிறப்பிதழ்

## தருமம் தழைத்திட பொங்குங்கடி

பொங்குங்கடி பொங்கல் பொங்குங்கடி - என்றும்
பூமி பொலிந்திடப் பொங்குங்கடி
தங்கத் தமிழினம் தாழ்ந்திடாமல் - நிதம்
தருமம் தழைத்திடப் பொங்குங்கடி.

உழவுத் தொழிலதன் மேன்மையினை - நின்று
உணர்த்தும் தைப்பொங்கலைப்
பொங்குங்கடி!
மேழியை யாள்பவர் மேன்மை விளங்கிட
மேதினி மேலெழப் பொங்குங்கடி.

சீறும் அலைகளில் சிக்கி- அழிந்திட்ட
சிறப்பு நிறைந்திடப் பொங்குங்கடி
தேறுத லின்றியே வாடி - வதங்குவோர்
சித்தம் தெளிந்திடப் பொங்குங்கடி.

அன்பு பெருகிடப் பொங்குங்கடி - அதன்
ஆழம் அறிந்திடப் பொங்குங்கடி
துன்பு தொலைத்திடப் பொங்குங்கடி - என்றும்
தூய்மை துலங்கிடப் பொங்குங்கடி.

-கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்.

## தீர்வு தந்திடும் திருமகளாய் தைமகளே வருக!

தாய் நிலத்திலிருந்தே தைமகளை வேண்டுகிறேன்
தரணி யெங்கும் அவலங்களைப் போக்கிவிடு
நோய் நொடிகள் இல்லாத வாழ்வைக் கொடுத்துவிடு
நூற்றாண்டு வாழ்கின்ற நூதனத்தைப் பெருக்கிவிடு
பேயாட்டத்தால் எம்உறவுகளைப் பிரித்த சுனாமியைத் தடுத்துவிடு
பிரியமுடன் எம்மவரின் உரிமைதனைச் சேர்த்துவிடு
தீய செய லொழித்து தேச நலனைக் காத்துவிடு
தீர்வு தந்துவிடும் திருமகளாய் தைமகளே வந்துவிடு
பிரியமுடன் எம்மவரின் உரிமைதனைச் சேர்த்துவிடு
தீர்வு தந்திடும் திருமகளாய் தைமகளே வந்துவிடு

-சங்குநாதன்

## சர்க்கரைப் பொங்கல்

கழனியில் வளர்ந்த
கதிர்கள் குனிந்தன
கலப்பையின் வாழ்வில்
மணிகள் குவிந்தன

உறவை வளர்க்க
பொங்கல் பிறந்தது
உரிமை சிறக்க
சூரியன் சிரித்தது

சர்க்கரை அமுதம்
சமாதானம் கேட்டது
இக்கரை சிகரம்
இனியதை பூத்தது

தித்திப்பு சுவையை
தேனாடு இழந்தது
முத்துக்கள் துவையலை
யாழ்நாடு இழந்தது

மொத்தப் பொங்கலில்
புயலும் அழுதது
சத்தப் பொங்கலில்
சமுத்திரம் அழுதது

-நல்லை அமிழ்தன்

## தை மகளே! வருக

மலர்ந்து விட்ட புத்தாண்டில்
மணக்க வரும் தைமகளே!
புலர்ந்து வரும் பொழுதெலாமினி
புதுவாழ்வு மக்கள் பெறவேண்டும்

பொன்விளையும் பூமியிலே இத்தோடு
பொய் விளைச்சல் அறுவடையாகட்டும்
கண் கலங்கி துயரில் வாடும்
காலமினி வராமல் காக்கவேண்டும்

ஒற்றுமைப் பயிருக்கு நீருற்றி
ஓங்கி வளர்ந்திடச் செய்திடுவோம்!
வேற்றுமைக் களையின் வேரறுத்து
வேண்டிய வாழ்வுபெறப் பாடுபடுவோம்!

நிலையில்லா வாழ்வெனில் இருக்கும்வரை
நிம்மதியாய் சுகத்தை அனுபவிப்போம்
அலையுள்ள கடலில் வாழ்வின் ஓடம்
அமைதியாய் செலுத்தக் கற்றிடுவோம்

விதியென்ற புத்தக ஆசிரியனே!
வெற்றியெனும் அத்தியாயம் எழுதிவிடு
புதியவாழ்வு அனைவரும் பெறுவதற்கு
போதுமென்ற மனதைக் கொடுத்துவிடு!

பொதுநீதி சமதர்மம் இன்றுவரை
புத்தகத்தில் துயின்றது போதுமே!
புதுயுகம் மலர்ந்ததென மனமே!
பூத்துக் குலுங்கிச் சிரிக்கட்டுமே!

செ.பரமநாதன் தாவடி



# பொங்கலோ பொங்கல்



தை பிறந்துவிட்டது!

தை பிறந்தால் வழி பிறக்க வேண்டும்?

நிச்சயம் பிறக்கும்! வீடும், நாடும் சிறக்கும்! இன்ப வாசல் திறக்கும்!!

செல்வம் செழிக்கும்! செம்மை கொழிக்கும்! இறைவனின் அருட் கண் விழிக்கும்!

அதற்குத் தையே வழிகாட்டுகிறது! 'இப்படிச் செய்!' என்று கை நீட்டுகிறது.

போக்குங்கள்! நீக்குங்கள்!!

தை பிறக்கு முன்பே வீடுகளைச் சுத்தமாக்குகின்றோம். ஆனால், வீடு வெள்ளையாக இருந்தால் போதாது; உள்ளமும் வெள்ளையாக இருக்க வேண்டும்!

வீட்டிலுள்ள பழைய பொருட்களையெல்லாம் வீதியில் போட்டுக் கொளுத்துகிறோம் அல்லவா? அதுபோல, உங்கள் மனதில் இருக்கும் கோபதாபம், மோசம் - நாசம், எல்லாவற்றையும் போட்டுக் கொளுத்துங்கள்! மன அழுக்கை நீக்குங்கள்! இருளைப் போக்குங்கள்! அருளைத் தேக்குங்கள்! அன்பு, நல்ல பண்பு, இரக்கம், ஈகை போன்ற உயர்ந்த குணங்களை உள்ளத்தில் நிரப்புங்கள். உள்ளம் வெள்ளையாகும்.

உள்ளம் வெள்ளையானால், எதையும் சொள்ளையாகப் பார்க்காது! யாரையும் தொல்லையாக நோக்காது! 'இல்லை' என்ற சொல்லே வெள்ளை உள்ளத்தில் இருக்காது! கிள்ளிக் கொடுப்பவர் கூட அள்ளிக் கொடுப்பார்!

## பொங்கல் தத்துவம்

பொங்கல் வைக்கப் புதுப் பானை பயன்படுத்துகிறோம். எல்லாவற்றையும் சேர்த்து வைக்கப் பானை பயன்படுகிறது. அந்தப் பானைபோல உங்கள் மனமும் புதிதாக இருக்கட்டும்.

புதுப்பானைபோல உள்ளம் இருந்தாலும், அது யானை போலப் பெரிதாக - பேருள்ளமாக இருக்கட்டும்! பூனைபோல சிறுத்துப் போகவேண்டாம்!

பானையில் பசும் பால் ஊற்றுகிறோம். அத்துடன் தண்ணீர் சேர்க்கிறோம். எவ்வளவு தண்ணீர் சேர்த்தாலும், வெள்ளையாகத் தான் இருக்கிறது. பாலுடன் சேர்ந்த தண்ணீரும் வெள்ளையாகிறது. உங்கள் மனம் பால்போல வெள்ளையாக இருந்தால், உங்களுக்கு எல்லாமே நன்மையாகத் தான் இருக்கும்! வயலில் விளைந்துவந்த பச்சரிசியைப் பானையிலிடுகிறோம். அதுபோல, நல்ல சிந்தனைகளை - இறைவனின் அருளை உங்கள் மனதிலிடுங்கள். நல்ல எண்ணங்களால் மனதை நிரப்புங்கள். ஏனென்றால், சட்டியிலிருப்பது தான் அகப்பையில் வரும்.

அதன்பின் அடுப்பு எரிகிறது. நெருப்பு, பானையைச் சூடேற்றுகிறது. இறைவனின் அருள் என்ற நெருப்பு உங்கள் உள்ளத்தில் எரியட்டும். நெருப்பு எரிய எரிய உலை கொதித்து, அரிசி வெந்து, அரிசி - பால் - சர்க்கரை - நெய் எல்லாம் ஒன்று கலந்து, பக்குவப்பட்டு, இனிய பொங்கல் ஆவது போல, இறைவனின் அருள் உங்கள் உள்ளத்தைப் பக்குவப்படுத்தும்!

பானையில் சூடு ஏற ஏற, 'தை... தை... தை...' என்று உலை கொதிப்பதுபோல, இறைவனின் அருள் கிடைக்கக் கிடைக்க, உங்கள் உள்ளமும் மகிழ்ச்சியில் 'தை... தை... தை...' என்று கூத்தாடும்.

புத்தாடை அணிந்து, பொங்கல் உண்டு, 'தை... தை... தை...' என்று குதூகலக் கூத்தாடுவதுபோல, இறைவனின் அருள் பெற்றவர்கள் மகிழ்ச்சியில் திளைப்பார்கள்!

## பருவ மழை! தரும் நிலை!!

பொங்கல் வைத்ததும், சூரியனுக்குப் படைத்து வணங்குகிறோம். இது இயற்கையைப் போற்ற வேண்டும் - இயற்கையோடு இசைந்து நாம் வாழ வேண்டும் என்பதை நமக்கு உணர்த்துகிறது. இயற்கை நிலை திரிந்தால், நம் மனநிலை கெடும்; மழை வளம் குறையும்.

வானொலியில் ஒலிபரப்பாகும் ஒரு பாட்டை நம் வீட்டு வானொலியில் கேட்க முடிகிறது எப்படி? காற்றில் மிதந்துவரும் பாட்டை, வானொலிப்பெட்டி இழுத்துக் கொள்ளுகிறது. அதுபோல, நம் மனமும் நல்ல பண்புகளை இழுத்துக்கொள்ளவேண்டும்.

வானொலிப்பெட்டி பழுதாக இருந்தால், பாடுமா? பாடாது! நம் மனம் பழுதுபட்டிருந்தால், நல்ல பண்புகளை இழுக்காது. எனவே, மனதைத் தூய்மையாக வைத்துக் கொள்ளவேண்டும். அருள் நிறைந்த மனமே தூய்மையானது.

அருள் மனம் பிறர் பசியைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்காது. அவரது பசியைப் போக்கும். தர்மம் செய்வதே அருளின் வெளிப்பாடு.

இல்லாதவர்களுக்கு உண்ண உணவும், உடுத்த உடையும் கொடுப்பதே உண்மையான தர்மம். அந்தத் தரும் நிலை தவறியதால்தான் இப்போது பருவ மழை தவறிவிட்டது. தரும நிலை செழித்தால் பருவமழை பொழியும். எனவே, காக்கைக்குப் பொங்கல் வைப்பதுபோல, பசித்தயாக்கைக்குச் சோறிடுங்கள்! அவர்களையும் 'தை... தை... தை...' என்று குதூகலத்தில் குதிக்கச் செய்யுங்கள்! அதுவே உண்மையான பொங்கல்!


உங்கள் இல்லங்களில் பொங்கல் பானை கொதிக்கட்டும்! உங்கள் உள்ளங்களில் மகிழ்ச்சி 'தை... தை... தை...' என்று குதிக்கட்டும்!! இறைவனின் அருள் முத்திரை உங்கள் இல்லத்தில் பதிக்கட்டும்!!!

எல்லோருக்கும் இறைவனின் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்!

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்.

❖ T.V.S ரக மோட்டார் சைக்கிள்கள்.

❖ HERO HONDA ரக மோட்டார் சைக்கிள்கள்.



❖ DAIDO ரக (சைனா) மோட்டார் சைக்கிள்கள்.



❖ உமா சாக்கி வகை (சென் அன்ரனிசின் புதிய அறிமுகம்) மோட்டார் சைக்கிள்கள்.

என்பவற்றைப் புதிய நடைமுறையில் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள வன்னிப் பெருநிலப்பரப்பில் அங்கீகாரம் பெற்ற முகவர்

சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்

யாழ்சாலை,
பரந்தன்.

(C/3611)

துன்பங்கள் நீங்கி தமிழர் மனங்களில்
இன்பம் பொங்க வாழ்த்துகின்றோம்



கட்டட வாணிபப் பொருட்களை ஒரேயிடத்தில் மனத்திருப்தியுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

புதிய பல்பொருள் உதிரிகள் வாணிபம்

யாழ்வீதி,
கிளிநொச்சி.

T.P :021 2285942

(C/3613)

அனைவருக்கும் இன்பம் பொங்கும் பொங்கல் வாழ்த்துக்கள்



பாண், கேக், முட்டை விஸ்கற், மடத்தல் ரஸ்க், பேபி ரஸ்க், பாண் ரஸ்க், கல்பணிஸ், கட் கேக், ஸ்பொஞ் கேக்

என்பவற்றைத் தரமாகவும், சுவையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

அமுதசுரபி வெதுப்பகம்

ஓடர்களுக்கு ஐசிங் கேக் செய்து கொடுக்கப்படும்




யாழ் சாலை, கிளிநொச்சி.

(C/3612)

# தைத்திங்கள் பிறப்புடன் நம்பிக்கை மலரட்டும்



வருடத்திலே முதலாவது மாதம் தை மாதம். தைமாதம் முதல் தேதியை மகர சங்கராந்தி என்பர். உத்தராயனம் ஆரம்பிக்கும் நாளும் அதுவே. தென் திசையிலிருந்து வடக்கு நோக்கி சூரியன் திரும்புவதை உத்தராயனம் குறிக்கும். தை முதல் ஆனி ஈறாகவுள்ள ஆறு மாதங்களைக் கொண்ட உத்தராயனம் புண்ணி



யகாலம் என்றும் சுபகருமங்கள், மங்கள காரியங்கள் நிகழுகின்ற காலம் என்றும் கொள்ளப்படுகிறது.

உழைப்பின் உயர்வை, உழவர்களின் மேன்மையை மதிக்கும் விழாவாகவும் தைப்பொங்கல் விழா பண்டு தொட்டு வழங்கி வருகிறது. மனித உழைப்பாளிகளுடன் விலங்கு உழைப்பாளிகளையும் நினைத்து நேசித்து நன்றி செலுத்தும் பெரு நாளாகவும் தைப்பொங்கல் பண்டிகை விளங்குகின்றது.

பொங்கல் திருநாளில் சூரியன் உதிப்பதற்கு ஐந்து நாழிகைக்கு முன்னர் அதிகாலையில் மக்கள் நித்திரை விட்டு எழுந்துவிடுவர். நீராடித் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்வர். வீட்டு முற்றத்தில் சாணத்தினால் மெழுகப்பட்ட நீள் சதுரமான பகுதியை வெள்ளை - சிவப்பு நிற மாவினால் அழகிய கோலமிட்டு மண்டபமாக வடிவமைத்துக் கொள்வர். மலை வாழை, கமுகு, கரும்பு, மகர தோரணங்கள், மலர்கள் என்பவற்றால் அலங்கரிப்பர். அதனுள் அழகிய கோலங்களையும் கலைத்திறன் மிளிரப் போடுவர். பிள்ளையார் பிடித்து வைத்து, குத்து விளக்கு ஏற்றி, பூரண கும்பம் வைத்து பழங்கள் வெற்றிலை பாக்கு தேங்காய் முதலிய மங்களப் பொருட்களை நிவேதிப்பர். விநாயகனை முதலில் நினைத்து இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்திப்பர்.

நீரினால் சுத்தம் செய்யப்பட்ட புதுப் பானையைத் திருவணையில் வைத்து அதன் வாய்ப் பானையை மஞ்சள் இலை, இஞ்சியிலை, மாவிலை ஆகியவற்றைப் பொருத்திக்கட்டி பானையின் மேற்புறத்தில் திருநீற்றைக் குழைத்து திரிபுண்டரமாக மூன்று இடங்களில் பூசி, சந்தனம் குங்குமம் திலகமிட்டு பானைக்குள் பசுப்பாலும் நீரும் விட்டு நிரப்பி, தூப தீபம் காட்டி, கற்பூர தீபத்தினால் அடுப்பில் நெருப்பை உண்டாக்கிப் பற்றவைத்து, கணவனும் மனைவியும் ஒருமித்த சிந்தையராய் சூரியனை வணங்கி இஷ்ட தெய்வங்களை நினைத்து, பானையைப் பக்குவமாய் இருவரும் தம் கைகளால் பற்றிப் பிடித்துத் தூக்கி அடுப்பில் ஏற்றுவர். இதில் குடும்பத்தவர் யாவரும் இணைந்து கொள்வர்.

பானையில் பால் பொங்கி எழும்போது பொங்கலோ பொங்கல் என்று உரத்துக் கூவி மகிழ்வர். தம்முடைய வாழ்வில் இன்பம் பொங்கப் போவதை உணர்த்தும் அறிகுறியாகப் பால் பொங்கி ஓங்கி எழுதலைக் கண்டு அவர்களின் மனமும் பொங்கிப் பூரிக்கும். பால் பொங்கி வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் ஈசானத்தை நோக்கியேனும் முதலில் சரிந்து வெளித்தள்ளினால் அதனை நன் நிமித்தமாகக் கருதிப் புளகாங்கிதம் கொள்வர். அதன் பின்னர் குடும்பத் தலைவர் புது நெல்லில் குற்றியெடுத்த பச்சரிசியை தம் இரு கைகளாலும் அள்ளி சூரிய பகவானை வழிபட்ட வண்ணம் பானையில் வாய் விளிம்பினை மும்முறை சுற்றி பானையுள் இடுவர். தொடர்ந்து குடும்பத் தலைவி, குடும்பப் பெரியவர்கள் பிள்ளைகள் என்போர் அரிசியைப் பானையில் இடுவர். வெல்லம், கற்கண்டு, நெய், தேன், கருப்பஞ்சாறு, திராட்சை முந்திரிப் பருப்பு, பயற்றம் பருப்பு என்பனவற்றைப் பாலுடன் கலந்து விட்டு தித்திக்கும் இனிய பொங்கலை ஆக்குவர்.

பொங்கிய அமுதினை மூன்று தலை வாழையிலைகளில் படைத்து பழங்கள், கரும்பு, செவ்விளநீர், மலர்கள் முதலியவற்றைக் கொண்டு மடைபரவி, தேங்காய் உடைத்து வைத்து, நீரும் மலரும் கொண்டு அர்ச்சித்து, தூபதீபம் காட்டி பக்தி சிரத்தையோடு திருமுறைகளைப் பாராயணம் செய்து சூரிய பகவானை வணங்கி வழிபாடு செய்வர்.


பூமியிலே மழை அத்தியாவசியமாகத் தேவை. நீரின்றி இந்த உலகம் இயங்காது. மழையைத் தருவது சூரியன். வெபமும் ஒளயும், உயிர்ப்புச் சூரியனாலேயே அனைத்துச் சீவராசிகளுக்கும் வழங்கப்படுகிறது. இன்னார் இனியார், உயர்வு தாழ்வு என்னும் பேதங்களின்றி ஒரே விதமாக எல்லோருக்கும் அவற்றை வழங்கும் சூரிய்னுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகத் தை முதல் நாளில் பொங்கல் விழா எடுத்து வருகின்றமை தமிழ் மக்களின் நயத்தக்க நாகரிகத்தையும் உயர் பண்பாட்டையும் காட்டுகின்றது.

ஆகவே தைப்பொங்கல் இன்பப்பொங்கலாக, அறிவுப் பொங்கலாக, இனிமைப் பொங்கலாக மகிழ்ச்சிப் பொங்கலாக, சர்வ மங்களப் பொங்கலாக அமைய வேண்டி இறைவனைப் பிரார்த் திப்போமாக. சாந்தியும் சமாதா னமும் ஓங்கட்டும். தை பிறந் தால் வழிபிறக்கும் எனும் நம் பிக்கை நிஜமாக மலரட்டும். அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்.


**மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன்.**



அனைவருக்கும் எம் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்



உழவு இயந்திர உதிரிகள், பற்றறி வகைகள் HERO HONDA, BAJAJ அனைத்து
மோட்டார் சைக்கிள் உதிரிகளையும் தரமிக்கதாகப் பெற்றுக்கொள்ள
தெரிவு செய்யவேண்டிய ஒரே இடம்



# மெய் மெய் உதிரிகள் வாணிபம்

# M.S.T

கரடிப்போக்குச் சந்தி,
கிளிநொச்சி.

(C/2894)



அனைவருக்கும்
எம் இனிய
பொங்கல்
வாழ்த்துக்கள்

## ஆரோக்கிய வாழ்வுக்கு ஜீவாகாரம்



ஆரோக்கியமாய் நாம் வாழ
"அண்ணா" அளிக்கும்
பாரோர் விரும்பிப் போற்றிடும் நற்
போசாக்களிக்கும் ஜீவாகாரம்

ஊட்டச்சத்து நிறைந்துடலுக்(கு)
ஊக்கம் அளிக்கும் ஆகாரம்
வாட்டமின்றி வளமாக...
வாழ வைக்கும் ஜீவாகாரம்

பெரியவர் சிறியவர் பேதமின்றி
பெரிதும் இரசித்துண்ணும் ஆகாரம்...
உரிமையுடன் எம்மைக் கேளுங்கள்
உவந்தளிப்போம் வந்து வாங்குங்கள்

சுத்தமான தயாரிப்பு...
சுவைக்கச் சுவைக்கத் தித்திப்பு
நித்தம் வாங்கி உண்டிடுவீர்
நீண்ட ஆயுளைப் பெற்றிடுவீர்.



## அண்ணா தொழிலகம்,
## இணுவில்.
021-2223565,
021-2225701.

(C/3714)

அனைவருக்கும் எம் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

# சர்வதேச தொலைத் தொடர்பகம்
# கிளிநொச்சி

கிளிநொச்சி
021-228-5714
021-228-5725
021-228-5900
021-228-5901

உருத்திரபுரம்,
060 221 3529

விசுவமடு
0712373361
021-228-5030

மல்லாவி
0712348783
0712797019
0712299435

முழங்காவில்
0712750386

பாரதி தொலைத் தொடர்பு நிலையம், பஸ் நிலையம்,
021-228-5711

பரந்தன் சந்தி, பரந்தன்.
021-228-5075

வட்டக்கச்சி சந்தி
060-221 2371
கட்சன் வீதி, வட்டக்கச்சி.
060-221 3519
இராமநாதபுரம், வட்டக்கச்சி.
060-221 3521

பூநகரி
060-221 3522

இசைவாணி கரடிப்போக்கு,
021-228-3962
021-228-3963

பளை
060 221 3241

புதுக்குடியிருப்பு
0712390601

புளியங்குளம்
024-2224511

ஜெயந்தி நகர்
021-228-5051

முறிகண்டி
021-228-5053

நெடுங்கேணி
0712349625



(C/3607)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் நல்வாழ்த்துக்கள்

SUNDHARSON MANIPAY

# SUNDHARSON

(AIR CONDITIONED)

Distributors of Electrical Goods, P.V.C. Pipes & Fittings Etc.

Jaffna Road, Manipay.

LG Abans — Authorised Dealer for


ANTON PVC Pipes & Fittings — Distributor for

KELANI CABLES — Distributor for

உங்களின் மின்சார சாதனங்களின் தெரிவுகளுக்கு


## சுந்தர்சன்

- ABANS தயாரிப்புக்களான LG குளிர்சாதனப் பெட்டிகள்
- T.V க்கள், சலவை இயந்திரங்கள், வீடியோ டெக்
- மின்சார உபகரணங்கள்
- மின் நீர் இறைக்கும் இயந்திரங்கள்
- மின் அலங்காரப்பொருட்கள் • மின் அழுத்திகள்
- மின் விசிறிகள் • மின் அடுப்புக்கள் • றைஸ் குக்கர்
- மின் இணைப்பு வயறிங் பொருட்கள்
- மின்சாரத்தில் இயங்கும் சமையலறைப் பொருட்கள்



ABANS நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் சுந்தர்சன்

இன்னும் ANTON PVC நீர்க்குழாய்கள் அதன் இணைப்புக்கள், PVC கூரைப் பீலிகள் அதன் இணைப்புக்கள் மற்றும் பரிசுப் பொருட்களையும் ஒரே இடத்தில் நிதானம், நியாயம், உத்தரவாதத்துடன் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம்.



குளிரூட்டப்பட்ட புதிய காட்சியறைக் கட்டடத்தில் அமைந்துள்ள

SUNDHARSON

சுந்தர்சன்

யாழ் வீதி, மானிப்பாய்.

T.P: 021-4591569, 021-2222751
Fax:021-2222751
E.mail:sundharson@yahoo.co.uk

குறிப்பு: எம்மிடம் பொருட்களை கொள்வனவு செய்பவர்களுக்கு இலவசமாக வதிவிடத்திற்கு வாகனத்தில் அனுப்பி வைக்கப்படும்.

(C/3509)



அனைவருக்கும் எமது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

- உழவு இயந்திர உதிரிகள்
- மோட்டார் சைக்கிள் உதிரிகள்
- அனைத்து விதமான வாகன உதிரிப்பாகங்களும்

இங்கே பெற்றுக்கொள்ளலாம்

# குழந்தை களஞ்சியம்

# (A.K.R)

(C/2897)

மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவுகள் உண்டு

கிளிநொச்சி
T.P: 021 2285786

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்

KMH

இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்களும்,
சீமெந்து, பெயின்ற், ஓயில் விநியோகஸ்தர்களும்

கஜமுகன் காட்வெயர்

Kajamugan Hardware

147,149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

147,149 Stanley Road,
Jaffna.

(C/3724)

தமிழ் மக்கள் அனைவருக்கும்
எமது பொங்கல் திருநாள்
வாழ்த்துக்கள்

அஜந்தா ரெக்ஸ்ரைல்ஸ்

54, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
T.P: 021-2222899

கிளை:
அஜந்தா றேட்
66, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021-2227019

அஜந்தா ரெக்ஸ்ரைல்ஸ்
25, 4ஆம் குறுக்குத்தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
T.P: 021-2227150

(C/3726)

Songke
Electrical Switches
TUNGSRAM BULB
ACL CABLES
Domestic & Industrial Wiring

NEWTONE ELECTRICAL
IMPORTERS & DISTRIBUTORS
OF ELECTRICAL ITEMS

Aut orised Agents for
Tungsram Bulbs, ACL
Cables Switches

440, 442 Hospital Road,
Jaffna.

Phone : 021 222 2037
Fax : 021 222 2502

(C/3566)

இத் தைத்திருநாளில் நாட்டில்
துன்பங்கள் நீங்கி சமாதானமும் சுபீட்சமும்
பெறவேண்டுவோம்

அன்று முதல் இன்று
வரை அனைத்து
ஆடைகளையும்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள சிறந்த
ஒரே ஸ்தாபனம்

சிமாட்டி புடவைக்கடல்

இல:122, மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.

கிரடிட் காட், சர்வதேச மாஸ்டர்
VISA காட் (கடன் அட்டை)
ஏற்றுக்கொள்ளப்படும்.

(C/3725)

அனைவருக்கும் எமது
இனிய பொங்கல்
வாழ்த்துக்கள்

நவீன வடிவங்களில் அழகிய தங்க
நகைகளைப் பெற்றுக்கொள்ள நாட
வேண்டிய ஸ்தாபனம்

நித்தியகல்யாணி நகை மாளிகை

Nithiyakalyanee Nakai Malikai

ஓடர் நகைகளை உத்தரவாதத்துடன்
குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளலாம்

205/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

205/4, Kasthuriar Road,
Jaffna.

(C/3727)

புதிரெடுத்துப் பொங்கியுண்டு
புதுமை செய்யப் புறப்படுவோம்
பொங்கல் நாளில்...

TN

அழகிய கலைநயம்
எழிலுறு தொழில் வளம்
உயர்தரமிகு தங்கநகைகளுக்கு
நாடவேண்டிய இடம்

தயா
நகைப் பூங்கா

213C, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P:021-2225846
Hot Line : 077-7840379

(C/3728)

அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்

WESTERN UNION ®
பணப் பரிமாற்றம்

பணப் பரிமாற்றத்தின் மூலம்
உடனடியாகப் பணத்தைப் பெறவும் துரிதமான
பொதிச் சேவைகளுக்கும்
நாடவேண்டிய இடம்

குமார் முகவர் தபால் நிலையம்

Aero Lanka வின்
தினசரி இருவிமானசேவை

கொழும்பு
யாழ்ப்பாணம்
தினசரி
திருகோணமலை

ஏரோ லங்கா விமான ஆசனப்பதிவு
எந்தநேரமும் பெற்றுக்கொள்ள
சகல உள்நாட்டு வெளிநாட்டு அழைப்புகள்,
இன்ரனெற், ஈ.மெயில், துரித பார்சல்
சேவை, பக்ஸ், போட்டோ பிரதி
அனைத்துக்கும்

குமார் ஏஜென்ட்
&
Kumar கொமியுனிகேசன் A.P.O

133/3, மின்சார நிலைய வீதி,
மத்திய பஸ்நிலையம் அருகாமை
யாழ்ப்பாணம்.

T.P:021-2227727,
Fax: 021-2223453
E-mail: kumarapo@sltnet.lk

இழப்புக்களின் மத்தியிலும் இன்பம் தரவரும் பொங்கல் நாளில் இருகரங்கூப்பி வாழ்த்துகின்றோம்.

# இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்

50, 52, 54,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 222 2988

(C/3569)

---

பொங்கும் மங்களம் எங்கும் தங்கிட பொங்கலே வருகுது பாரீர்!



வடபகுதியில் பதினான்கு வருட சேவையில்

சகல விதமான ஓவிய வேலைகளுடன் பகுதி டிஜிட்டல் பிறிண்டிங்கில் பிளாஸ்ரிக் லைட்போட், சினிமா சிலைட், பாடசாலை மொனிட்டர் பிறிபெக்ற (Prefect) சின்னங்கள், கீரெக்ஸ், (Keytags) மற்றும் உலகத்தரம் வாய்ந்த யப்பானிய தொழில்நுட்பத்திலான பிறீஇங் இறப்பர் சீல்கள் இன்னும் ஓவியப் பகுதி அனைத்தையும் ஒரே இடத்தில் நிறைவு செய்ய

# யசோ ஆட்கிறபிக்ஸ்

35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/3570)

---

புதிரெடுத்துப் பொங்கியுண்டு புதுமைசெய்யப் புறப்படுவோம் பொங்கல் நாளில்....

புதுவருடத்தை முன்னிட்டு கழிவு விலையில்

கண்களைப் பரிசோதித்து சிறந்த கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும், இழந்த பற்களுக்கு நிகரான சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும், பொருத்திக் கொள்ளவும், உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

# எரிக்கணேஷ்

564, 566 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


இல 91, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

(C/3572)

இல.80, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.

---





அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்

# கோகிலா தொலைத் தொடர்பகம்

T.P: 062 213030
062 213408

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

(C/3719)

---

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்.

சகலவிதமான தானிய மா, ரசம், எண்ணெய், ஊறுகாய் வகைகளையும் மற்றும் வெள்ளைப்பிட்டு, சிவப்புப்பிட்டு, திடீர் தோசை, அப்பக்கலவைகளையும், வினாகிரி, அயடீன் கலந்த உப்பு, ஐசிங், சீனி, பேக்கிங் பவுடர், அப்பச்சோடா, கொக்கோ பவுடர், சிற்றிக் அசிட், பிளீச்சிங் பவுடர், சீயாக்காய் பவுடர், ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றக்கொள்ள

## M.G.M

உற்பத்திப் பொருட்களின் ஏக விநியோகஸ்தர்களான


# முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ்


இல.777, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(C/3567)

---

அன்பர்கள், ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்






- மரத் தளபாடங்கள்
- பிளாஸ்ரிக் கதிரைகள்
- உருக்குத் தளபாடங்கள்
- சோபா செற்றி வகைகள்
- வீட்டுப் பாவனைப் பொருட்கள்
- மெத்தை வகைகள்
- குழந்தைகளுக்கான அணிகலன்கள்

என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்






# வள்ளல் தளபாட மாளிகை

கரடிப்போக்குச் சந்தி அருகாமை,
கிளிநொச்சி.

(C/3605)

---

அனைவருக்கும் எம் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்



## எங்கும் தேடி அலைய வேண்டாம்

சோலர் வகைகள்(Japan), **Eurostar Dish 65cm, Eurostar L.N.B. Recceiver,** ஏனைய அன்ரனா வகைகள் **AC/DC T.V., AC/DC Deck, AC/DC CD Playar, DC** பல்ப், ஸ்பீக்கர் செற் ஏனைய அனைத்து வகையான மின்னியற் பொருட்களும் பெற்றுக்கொள்ள





# இளந்தளிர் மின்னியற் பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி.

(C/3603)

தைப்பொங்கல் திருநாளில் உழைத்ததிலே சிறிதேனும் சேமிப்பாக்கி
உயர்வுபெற்று வாழ்ந்திடவே வாழ்த்துகின்றோம்.

**மக்கள் வங்கி** புதிதாக அறிமுகப்படுத்தும்

# 'வெளிநாட்டு பண அதிர்ஷ்ட சீட்டிழுப்பு'

வெளிநாடுகளில் வசிக்கும் அன்புக்குரியவர்கள், மக்கள் வங்கியினூடாக உங்களுக்குப் பணத்தினை அனுப்புவதன் மூலம், பல இலட்சங்களை வெல்லும் அதிர்ஷ்டசாலிகளில் நீங்களும் ஒருவராகிறீர்கள்.

| | | |
|---|---|---|
| 1 வது பரிசு | - | ரூபா 2.5 மில்லியன் |
| 2 வது பரிசு | - | ரூபா 1.0 மில்லியன் |
| 3 வது பரிசு | - | ரூபா 500,000/- |

ஒவ்வொன்றும் ரூபா 50,000/- பெறுமதியான பரிசுகள் 47

மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள மக்கள் வங்கியை நாடவும்

**மக்கள் மனம் அறிந்த வங்கி**

**மக்கள் வங்கி**

(C/3576)

உ ங்களுக்காக..........நாட்டிற்காக



உழைப்பின் தரத்தைப் புரிந்திடுவீர்
உலகில் உன்னதம் கண்டிடுவீர்
இலங்கை வங்கியில் இணைந்திடுவீர்
இன்பமே வாழ்வில் அடைந்திடுவீரென
பொங்கல் நாளில் வாழ்த்துகின்றோம்.




**இளம் பருவத்தினரின் சேமிப்புக் கணக்கு**

- ஒரு லட்சம் ரூபா வரையிலான சுகாதாரக் காப்புறுதி
- முதல் குழந்தைக்கு ரன் கெகுளு கணக்கு
- உயர் கல்விக்கான புலமைப்பரிசில்
- உயர்வட்டி
- திருமண நாளில் ஒரு பவுண் தங்கப் பரிசு
- ரூபா 5 லட்சம் வரையான ஆயுள் காப்புறுதி
- Visa Electron & Credit Card
- வங்கி கடன் வசதி

இளம் பருவத்தினருக்கு அன்புடன்...

மேலதிக விபரங்களுக்கு, அருகிலுள்ள கிளை முகாமையாளருடன்

BOC

**இலங்கை வங்கி**

உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி.

(C/3577)

காத்திருந்த பொங்கல் நாள் கைகொடுக்க வரும்வேளை
கரங்குவித்து வாழ்த்துகின்றோம்.

# க.செ.கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
## மருந்துக்கடை

79, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(C/3711)

அனைவருக்கும் இனிய பொங்கல்
வாழ்த்துக்கள்.

வர்த்தகப் பெருமக்களே! ஆசிரியப் பெருந்தகைகளே!
மாணவ மணிகளே! எங்கள் 46 ஆம் வருட அகவையை முன்னிட்டு



அட்டகாசமான
மலிவு விற்பனை

புத்தகங்களுக்கு 20 வீதம் தொடக்கம் 70 வீதம் வரையும்,
உபகரணங்களுக்கு 10 வீதம் கழிவும் வழுங்கப்படும். இந்தியப்
புத்தகங்களுக்கு 3 மடங்கும், 20 வீதம் கழிவும் வழுங்கப்படும்.

# ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 2225542

(C/3571)

அனைத்து தமிழ் மக்களுக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்

ஆங்கில மருந்து வகைகள்,
புதினப் பத்திரிகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

# சாயிராம் மருந்தகம்

கண்டி வீதி, சாவகச்சேரி.

இன்றைய பொங்கல் நன்னாளில் அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

# சொலெக்ஸ்
## பல் மூக்குக் கண்ணாடி அகம்



உங்கள் கண்களைப் பரிசோதித்து, கவர்ச்சிகரமான பிறேம்களில் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளலாம். நவநாகரிக டிசைன்களில் சண் (Sun Glass) கிளாஸ்களை மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளவும், சங்குப் பற்களை அழகாகக் கட்டவும், மிதப்புப் பற்களை கிளிப் பொருத்தி சுலபமான முறையில் சீர் செய்து கொள்ளவும்

516, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக)

கிளை நிறுவனம்:
பிரதான வீதி,
முதலாம் குறுக்குத்தெரு,
நெல்லியடி

(C/3568)

# அனைவருக்கும் எம் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

யாழ். நகரில் செரமிக் பொருட்கள் விற்பனையில் 25 வருடகால
அனுபவமுள்ளவர்கள்

மேற்படி செரமிக் பொருட்களைக் கண்கவர் நிறங்களிலும், நவீன டிசைன்களிலும் நேரடியாக தாய்லாந்து, இந்தோனேசியா, சீனா, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து யாழ்.நகரிலும், கொழும்பிலும் விற்பனை செய்பவர்கள்




# விமாகி

27/3, மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.

கொழும்பில்:
விமாகி,
51, பாம் வீதி,
கொழும்பு - 12.
T.P :0112-423030

(C/3565)

T.P: 021-222 6738

பொங்கும் மங்களம் எங்கும் தங்கிட பொங்கலே வருகுது பார்!
விசேஷம்
PURE GINGELLY OIL
சுத்தமான நல்லெண்ணெய்
MOIL
தரமான எள்ளில் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பெற்றது.
(C/3709)
A PRODUCT OF MULTIL - OIL INDUSTRIES LIMITED INUVIL Sri Lanka.

அனைவருக்கும் எம் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
வேலவன் மிக்சர்
Velavan mixture
இல: 630, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(C/3710)

இடிப்புக்களின் மத்தியிலும்
இன்பம் தரவரும் பொங்கல் நாளில்
இருகரம் கூப்பி வாழ்த்துகின்றோம்
உங்கள் இல்லங்களை
வசந்த மாளிகையாக்கும் நவநாகரிக
தளபாடங்கள் மற்றும் பாவனைப் பொருட்களுக்கும்
மற்றா பேணிச்சர்
MATARA FURNITURE
233, 395 காங்கேசன்சாலை,
யாழ்ப்பாணம்.
(C/3716)

அனைவருக்கும் எமது இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
தரமான, சுவையான சைவ உணவு வகைகளுக்கும் சிற்றுண்டி
வகைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
ஸ்ரீ தாமோதர விலாஸ்
401, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 222 6867
(C/3712)

பொங்கல் திருநாளில் அனைவருக்கும்
எமது இனிய வாழ்த்துக்கள்
அழகுசாதனப் பொருட்கள், புதினப் பத்திரிகைகள்,
பாடசாலை உபகரணங்கள், பரிசுப் பொருட்கள்,
எவர் சில்வர், அலுமினிய, பிளாஸ்ரிக் பாத்திரங்கள்
என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்
கஜமுகன் விற்பனை நிலையம்
Kajamugan Trade Center
Kandy Road,
Puttur Junction, Meesalai.
கண்டி வீதி,
புத்தூர் சந்தி, மீசாலை.
(C/3718)

R.V.G BEEDIES
அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்
அன்றும்! இன்றும்! என்றும்!
இதமான புகை இன்பத்திற்கு
ஆர்.வி.ஜி. பீடிகள்
ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்து பால்மா வகைகள்
என்பவற்றை நியாயவிலையில் பெற்றுக்கொள்ள
R.V.G. மெடிக்கல்ஸ்
இல: 504, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P: 021-222 2129
ஆர்.வி.ஜி. பீடி ஸ்தாபனம்
இல: 58, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021-222 6806
(C/3713)


புதிரெடுத்துப் பொங்கியுண்டு புதுமை செய்யப்
புறப்படுவோம் பொங்கல் நாளில்....
திருமண வைபவங்களா? விருந்து வைபவங்களா?
மற்றும் எந்த வைபவங்களுக்கும் யாழ்.நகரில் நீங்கள்
நாடவேண்டிய ஸ்தாபனம்
கலாஸ் கிறீம் ஹவுஸ்
சிறந்த முறையில் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட ஐஸ்பழம்,
ஐஸ்சொக், ஐஸ்கிறீம் வகைகளும் உடனுக்குடன் வழங்கப்படும்.
ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.
166/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (பிறவுண் வீதிக்கு அருகாமையில்) (C/3715)

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்
பாடசாலை உபகரணங்கள்
பத்திரிகைகள்
அழகு சாதனப் பொருட்கள்
என்பவற்றை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள
ஸ்ரீராம் பல்பொருள் அங்காடி
கைதடிச் சந்தை,
கைதடி.
(C/3717)



காத்திருந்த பொங்கல் நாள்
கைகொடுக்க வரும்வேளை
கரங்குவித்து வாழ்த்துகின்றோம்!
வெளிநாட்டு, உள்நாட்டு உணவு வகைகள், குளிர்பானங்கள்,
சிற்றுண்டிகள் என்பவற்றை ஒரே இடத்தில் தரமாகவும்,
மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் வைபவங்களுக்கான உணவு வகைகளை அவ்விடத்திலேயே
சென்று பரிமாற்றச் சேவையைப் பெற்றுக்கொள்ளவும், நீங்கள்
நாடவேண்டிய ஒரேஇடம்
கிளியரசன் சுவையகம்
யாழ்சாலை, கிளிநொச்சி.
(C/3602)

# புத்தாண்டுப் பொங்கல் பொலிவுற வருகுது



ஆலய மணியின் நாதமானது, ஒரு மனிதனின் அடிமனதில் முளைவிடுகின்ற தீய எண்ணங்களை எப்படி வலியிழக்கச் செயதுவிடுகிறதோ, அதே போலத் தான் சைவ சமயிகளின் சமய நிகழ்வுகளும் வாழ்வியலில் முழுமையான பங்காற்றுகின்றன.

ஆண்டுதோறும் வருகின்ற தைப்பொங்கல், சித்திரைப் பொங்கல், தீபாவளி போன்ற நிகழ்வுகளும் ஆலயங்களில் வருடந்தோறும் நிகழ்கின்ற திருவிழாக்களும் மக்களின் பால் ஒழுங்குத் தன்மையையும், உறுதி மனப்பான்மையையும் சிறப்பாக வளர்க்கின்றன. இந்த வகையிலே தான் சாதாரண மக்கள் முழுமையாக அறிந்திராத, தெரிந்திராத அற்புதமான நெறி முறைகள் இந்த விழாக்களிலே மறைமுகமாகக் கருக்கொண்டிருக்கின்றன.

எல்லோரும் பொங்கவே வேண்டுமெனில், இல்லாதவன் எப்படிப் பொங்க முடியும்?

ஆகவே இல்லாதவர்கள் எம்மிடத்தில் இல்லாமல் போக, முதலில் வழி செய்கிறது இந்தப் பொங்கல் விழா. பொங்குவதோடு நின்றுவிடாமல், புத்தாடை புனைந்தல்லவா அவன் பொங்க வேண்டியிருக்கிறது. அவனுக்கு மட்டுமா புத்தாடை? மனைவிக்கு, அம்மாவுக்கு, அப்பாவுக்கு, மாமாவுக்கு, மாமிக்கு, தம்பிக்கு, தங்கைக்கு, பிள்ளைகளுக்கு என்றல்லவா உறவு நீண்டு செல்கிறது. எப்படி இவன் சோம்பலாக இருக்க முடியும், இருந்துவிட்டால் பொங்கல் என்னாவது?

பொங்கல் செய்பவர்கள் தமது குடும்பத்துக்கு மட்டும் அளவாகப் பொங்குவதில்லை. கூடுதலாகவே பொங்குவார்கள். இதனால் தமது உறவினர்களுக்கு, வீட்டிற்கு வருபவர்களுக்கு, இரந்து வருபவர் களுக்கு, நோயாளர்களுக்கு, இயலாதவர்களுக்கு, குழந்தைகளுக்கு, வயது முதிர்ந்தவர்களுக்கு என்றெல்லாம் பொங்கல் பரிமாறப்பட்டு பசி என்ற சொல்லே அன்றையதினம் இலலை என்ற நிலை உருவாக கப்பட்டு விடுகிறது.

பொங்கல் செய்வதற்கான விதி முறைகளாக என்னென்ன வெல்லாமோ சொல்லி வைக்கப பட்டிருப்பினும், அதனூடாக நடாத்தி வைக்கப்படுவது மக்களுக்கான நிறையுணவுத் தேவையே. ஆகவே தான் உயிர் வாழ்வதற்குத தேவையான உணவுத்தேவை, இந்த விழாவின் மூலம் நிறைவு செய்யப்படுகின்றது என்ற உண்மையை நாமெல்லாரும் விளங்கிக்கொள்வது, முக்கியமானதாகும்.

பொங்கல் என்பது வீட்டு முற்றத்தில் பொங்கப்பட வேணடுமென்றால், முற்றம் என்பது இருக்க வேண்டுமல்லவோ?



அதில் அழகுக்கோலம் இடப் பட வேண்டுமல்லவோ? இந்த நடைமுறையினூடாக - முற்றமில்லாத எத்தனையோ தமிழ் மக்களினுடைய அகதி நிலை கூடத் தற்போது விரித்துப்பார்க்கப்பட வேண்டிய பக்கமாக அமைந்துள்ளது.

இதனூடாகப் போராட்டம் வளரத் தொடங்கிய வேளையிலிருந்து எமது மக்கள் கூட்டத்தினருக்குப் பொங்குவதற் கான முற்றம் வேண்டுமெனின், எமது வீடு வேண்டும். எமது இருப்பிடம் வேண்டும். இருப்பிடங்கள் வேண்டுமெனின், இருப்பிடங்களில் இடம் பிடித்திருக்கும் ஆதிக்க சக்திகள் அவற்றினின்றும் வெளியேற வேண்டும். அப்போது தானே எமது வீட்டு முற்றத்தில் பொங்கியுண்டு, உறவுகளோடு மகிழ்ந்திருக்க முடியும்.

தைப்பொங்கல் எமக்கு மகிழ்வானதாக இருக்கவேண்டுமெனில், இவைகளெல்லாம் எப்போது நிறைவேறி, எமது மண் எமது கைகளில் கிடைக்கப் பெறுகின்றதோ - அன்றேதான் சந்தோஷமானதும், முழுமையானதுமான பொங்கலை நாம் உண்பதாக முடியும்.

பேருக்கான பொங்கலாக இல்லாது - ஊருக்கான, உலகத்துக்கான, உலகத் தமிழருக்கான தைப்பொங்கல் நாள் மிக விரைவில் வரவேண்டுமென உறுதியெடுப்போமாக.

-கிருபாலினி

## வாழ்வினி எங்கள் கையில்....

பொங்கலே விரைந்து வா நீ
பொழுதெலாம் இன்பம் தா நீ!
புல்லரை மண்ணில் நீக்கி
புடமிட்டுத் தாநல் நாடு

எதிரிகள் தன்னைச் சாய்த்து
இல்லாமை இல்லா தாக்கி
அறிவினோ டுண்மை நேர்மை
அவனியில் நிறைத்துத் தாநீ!

அரிசிபால் கற்கண் டோடு
அமிழ்தினை ஆக்கி யுண்ண
அமைதிசேர் வாழ்வு வேண்டும்
அனைத்துமே ஆக்கித் தாநீ!

சுனாமிதான் சுழன்றா லென்ன
சுகங்களை இழந்தா லென்ன
கனாவினிக் காணோம் எங்கள்
வாழ்வினி எங்கள் கையில்...

-மாவன்னா

## தைப்பொங்கல் பொங்கவேண்டும்!

எந்தப் பொங்கலும்
நாங்கள்
முறையாகப்
பொங்கியதில்லை!

சூரியன் உதிக்கின்ற போது
வீட்டு முற்றத்தில்
பொங்கவேண்டும்.
கிபிரினால்
கூடுதலாக வீட்டுக்குள்
பொங்கியதும்,

இடம்பெயர்ந்து
வழிநெடுக
சனக்கூட்டம் பொங்கி
வழிய
பொங்காமல் ஓடியதும்,

விதைத்தோம்
நெல் அறுக்க
காலை வெட்டிய
மிதி வெடியும்
பட்டாசுகள்
கொளுத்தவில்லை
கூடுதலாக
வெடித்த
துப்பாகிகளும்,

கடல் பொங்கி எழு
கரையோரங்கள்
பொங்காமல் போனதும்
தை என்றதும் நினைவில்
வருகிறது!

கோயில்கள்
ஊர்க்குடிமனைகள்
வீதிகள்
எங்கும் எதிரி ஆயுதத்துடன்...

போரினாலும்
இயற்கையினாலும்
அழிக்கப்பட்டு
ஒரு முற்றம் இல்லாமல்....

இடம்பெயர்ந்து
தூரதேசம் சென்று
வாடகை வீட்டில்....

தமிழர்களுக்கான
சுதந்திரமான
தைத்திருநாள் இல்லாமல்....

பாதுகாப்பு வலயங்களில்
எமது இருப்பிடங்கள்
பாதுகாப்பு இல்லாமல்....

எப்படிப்
பொங்கிறது?

புலி வீரர்கள் பொங்கி எழும்
நாளில்
ஒன்று சேர்ந்து
இணைந்து நின்று....

துன்பங்கள், துயரங்கள்
வரினும்
விரட்டி நின்று....

பாட்டி பாட்டன்
ஆண்ட மண்ணில்
ஆண்டு நின்று....

எந்தப் படை வரினும்
விரட்டி நின்று....

தமிழர் எல்லைகள்
பாதுகாத்து நின்று....

விடுதலை பெற்று
பொங்குவோம்!

செல்வா

அனைவருக்கும் எம் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்



சுன்னாகத்தில் ஓர் சாம்ராஜ்யம்
சாரிகளின் சாம்ராஜ்யம்
மங்கை சில்க்ஸ்
இல: 8, நவீன சந்தை,
சுன்னாகம்.
(C3735)

அனைவருக்கும் எமது இதயம் கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்
உங்களின் எதிர்காலம் இப்போது
பாதுகாப்பான கரங்களில்
காக்கும் கரங்கள்
LIFE INSURANCE CORPORATION
(LANKA) LTD.
ஆயுட் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம்
(இலங்கை) வரை
T.P & Fax:
021 222 6325
55 R.G கட்டடம்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
(C3733)

வளத்தைக் கொடுத்த கடலே
வளைத்து உயிர் குடித்ததினால்
வளமிழந்து போயிருக்கும் – எம்
மக்களுக்கு இல்லையென்னாது
உதவிக்கரம் நீட்டுவோம்.....

அனைவருக்கும்
எம் இனிய
பொங்கல் நல்வாழ்த்துக்கள்




எமது நிறுவன முகவர்கள்:

- யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச்சங்க சமாசம், யாழ்ப்பாணம்.
- முல்லை.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம், முல்லை மாவட்டம்.
- கிளி.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம், கிளிநொச்சி.
- பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பூநகரி.
- வவுனியா வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி.



# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

ஏரால் உழுது பயிர் வளர்த்த காவலரே!
போரால் மிகவுடைந்து போனோம் நாம் – ஆனாலும்
தந்தீர் புது அரிசி பொங்கியுண்டு மகிழ்ந்திடவே
மனமுவந்து வாழ்த்துகின்றோம் தைப்பொங்கல் நாளினிலே..



பொங்கல் திருநாளில்
அனைவருக்கும்
எமது இனிய வாழ்த்துக்கள்

ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை,
வட்டக்கச்சி.

(C/3604)

இழப்புக்களின் மத்தியிலும் இன்பம் தரவரும் பொங்கல் நாளில்
இருகரம் கூப்பி வாழ்த்துகின்றோம்

மங்கல நிகழ்வுகளுக்கு
ராசியான ஸ்தாபனங்கள்

மகாராசி சில்க்ஸ் & ரோசி சில்க்ஸ்

திருமணப் பட்டுச்சேலைகள், சிறுவர்களுக்கானறெடிமேற் ஆடைகள், ஆடவர்களுக்கான ரீசேட், சேட் வகைகளை உங்கள் எண்ணம்போல் பெற்றுக்கொள்ளலாம்.

இல 59, சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
T.P : 077 7286247
இல: 08ஏ, பெரிய கடைவீதி, யாழ்ப்பாணம்.
(C/3730)



அனைவருக்கும்
எம் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

வெற்றுச்சாக்கு, வெற்று உரப்பை மொத்தமாகவும், சில்லறையாகவும், கொள்வனவும், விற்பனையும் செய்யப்படும்.
சாக்குப்படங்கு, உரப்பைப் படங்கு உங்கள் தேவைக்கு ஏற்றபடி ஓடர்செய்து பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ ராமராஜ் அன் சன்ஸ்

T.P : 222 5986
603, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(C/3721)



அனைவருக்கும் எம் இனிய
பொங்கல் வாழ்த்துக்கள்

WESTERN UNION FedEx Express®

Inland & IDD Calls,
Internet - Browsing & E-mail,
Fax, Photo Copy, Computer typing & Printing, Designing-Cards, Laminating, CD-Writing, Binding, Parcel Services, Bus-Van-Flight Ticketing Services,
&
Computer-Hand phone Accessories

திருமுருகன் கொம் நெற்
Thirumurugan Com Net

259, K.K.S. Road, Jaffna.
Tel: 021 222 3958
Fax: 021 222 7836

46, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
Tel: 021 222 7560
Fax: 021 222 7310

E.mail:- thirumuruglan@lycosmall.com



அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்

புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், வாழ்த்து மடல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள

பூபாலசிங்கம் புத்தகசாலை

இல 04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C/3573)



தமிழ் மக்கள் அனைவருக்கும் எமது
பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்

ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

அகிலன் நகை மாடம்
Agilan Nagai Maadam

240, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
240, Kasthuriar Road, Jaffna.
(C/3731)



அனைவருக்கும்
எம் இனிய
பொங்கல் வாழ்த்துக்கள்

பிருந்தா ஜுவல்லர்ஸ்
BIRUNTHAA JEWELLERS


297, (301) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
297,(301) Kasthuriar Road, Jaffna.
(C/3732)




அனைவருக்கும் எம் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

பதிப்புத்துறையில் வல்லுனர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு


உங்கள் தேவைகளை உங்கள் மண்ணிலேயே தரமாகச் செய்து
பெற்றுக்கொள்ள அறிமுகம் செய்கிறோம்



நிலாப்பதிப்பகத்தின் இணை அனுசரணையுடன் **KUNA** Digital Imagine & Digital Printing எனும் பதிப்புத்துறை நிறுவனத்தின் மூலம் அதிநவீன முறையிலான நிறம் பிரித்தல் (Colour separation-Positive) சேவையினையும், 44" அகலம் கொண்ட சகல வகையிலான படங்களையும், ஆவணங்களையும், கலர்பிரதி செய்து பெற்றுக்கொள்ளவும், விரைவில் அறிமுகம் செய்கிறோம்.



வாடிக்கையாளர்களே! விரைவில் எதிர்பாருங்கள்



KUNA
Digital Imagine & Digital Printing
பிரதானசாலை,
கிளிநொச்சி.

இணை நிறுவனம்:
அழகன் பதிப்பகம்
பிரதானசாலை,
கிளிநொச்சி.
(C/3610)


ஆழிப் பேரலை அனர்த்தத்தால்
இழப்புகளையும், இன்னல்களையும்
எதிர்கொண்டு துன்பத்தில் இருக்கும்
எம்மக்களுக்கான
துயர் துடைப்புப் பணிகளில் நாமனைவரும்
அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்...
எமது
வழமையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
பொங்கல் நல்வாழ்த்துக்கள்
எந்த நிலையிலும்
எல்லா வகையிலும்
உங்களுக்கு
கைகொடுத்துதவ காத்திருக்கும்
உங்களின் வைப்பகம்
தமிழீழ வைப்பகம்
தமிழீழ வைப்பகம்
தமிழரின் காப்பகம்
வாருங்கள்
உங்களின் வளமான வாழ்விற்கு
வழிகாட்டுகின்றோம்...